# கறிவேப்பிலைகள்

( சிறுகதைகள் )



குறிஞ்சித்தங்கம்

**க.தங்கவேலு**

மணிவாசகர் பதிப்பகம்

மணி விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலைகள்

(சிறுகதைகள்)

**மணிவாசகர் பதிப்பகத்தின்**
**மணிவிழா வெளியீடு**

க. தங்கவேலு

(குறிஞ்சித் தங்கம்)

**மணிவாசகர் பதிப்பகம்**

31, சிங்கர் தெரு, பிராட்வே,
சென்னை – 600 104.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : ஜூலை, 2021
திருவள்ளுவர் ஆண்டு : 2052
உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 150.00**

மணிவாசகர் பதிப்பக வெளியீட்டு எண் : 2991

நினைவில் வாழும்
நிறுவனர்



**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

*கிடைக்குமிடங்கள்:*

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேலச் சன்னதி, **சிதம்பரம்** – 608001. ☎: **04144-222856**
31, சிங்கர் தெரு, பிராட்வே, **சென்னை** - 600104. ☎: **044-25361039**
6, சிவஞானம் தெரு, தி. நகர், **சென்னை** -600017. ☎: **044-24357832**
110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625001. ☎: **0452-2622853**
15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. ☎: **0422-2397155**
296/134, செரி சாலை, **சேலம்** - 636007. ☎: **0427-4262992**
28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. ☎: **0431-2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – **600 021,** தொலைபேசி : **25954528**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க தமிழ்

நண்பர் A. பிரசாந்த்
அவர்களுக்கு அன்புடன்



26/10/2021

**சமர்ப்பணம்**

மலையக மக்களுடைய வாழ்க்கையின் விடியலுக்காக
போராடிய, போராடுகிற, போராடப் போகிற
போராளிகள் அனைவருக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## தூக்குப்பைக்குள் தானிய மணிகள்

### மு. நித்தியானந்தன்

'சிறுகதை இலக்கியம் இன்று மந்தகதியிலே தளர்நடை போடுகிறது என்பது பொதுவாகத் தென்னகத்திலும் ஈழத்திலும் ஏற்கப்பட்டுள்ள கருத்தாகும். இலக்கிய வரலாற்றாசிரியரின் பரிபாஷையில் கூறுவதானால். இப்பொழுது சிறுகதையின் மங்குதிசை எனலாம்' (தமிழ் நாவல் இலக்கியம், 1968) என்று, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய ஆங்கிலச் சிறுகதை இலக்கியம் பற்றிப் பேசுகையில், அது இறுதி மூச்சை இழுத்துக் கொண்டிருக்கிறது என்று ஆங்கில விமர்சகர்கள் கூறுவதுண்டு. சிறுகதை இலக்கியத்தின்மீது கவிந்திருக்கும் காரிருளின் திரட்சியைப் பற்றி விமர்சன எழுத்துகள் பேசவில்லை என்றாலும் அதன் பிரகாசமான எதிர்காலம் பற்றியும் அவ்வெழுத்துகளில் காணமுடிவதில்லை.

'சிறுகதைகளையெல்லாம் இந்தக் காலத்தில் யார் தேடுகிறார்கள்?' என்று அங்கலாய்க்கிறார் ஓர் ஆங்கில எழுத்தாளர்.

இன்று சிறுகதை எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளன் என்பவன், பௌராணிகக் கதைகளில் வரும் கொம்பு முளைத்த வெள்ளைக் குதிரைபோல, இந்தக் காலத்திற்குப் பொருந்தி வராத பிரகிருதி என்று கூறுகிறார். இன்னொரு விமர்சகர்.

விமர்சகர்களும் எழுத்தாளர்களும் சிறுகதையின் மரண அறிக்கையைத் தயார் செய்து கொண்டிருந்த அதே வேளை, கனடாவைச் சேர்ந்த அலிஸ் மன்றோ தனது சிறுகதைகளுக்காக 2013 இல் நோபல் பரிசு பெற்றபோது, சிறுகதை இலக்கியம் ஒன்றும் தனது மகத்துவத்தை இழந்துவிடவில்லை என்பதை அது கட்டியம் கூறியது.

ரேமன்ட் கார்வர், ஜோர்ஜ் சோண்டர்ஸ் ஆகியோரின் சிறுகதைகள் நவீன இலக்கியத்தில் பெரிதும் சிலாகித்துப் பேசப்படுகின்றன.

இந்த அவசர யுகத்தில் வேகமாக வாசித்துவிட்டுப் போகக் கூடிய வடிவம்தான் சிறுகதை என்றும் சிபாரிசுகள் செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதுண்டு. ஆனால், உண்மைஅதற்கு வெகு தொலைவில் இருக்கிறது. குறைவாக வாசிப்பதாக நினைத்துக் கொண்டு, நீண்ட நேரத்தை அக்கதை வாசிப்பில் செலவிடுவது பலருக்கும் தெரிவதில்லை. சிறுகதை வேறெங்கும் சிதறிப் போகாத சிரத்தையான வாசிப்பை நாடி நிற்கிறது. அவசரகதியில் வாசித்து, வீசிவிட்டுப் போகிற பண்டமல்ல அது.

இன்று இலங்கையிலும் தமிழகத்திலும் வெளியாகும் அனைத்துச் சிற்றிதழ்களும், மின்னிதழ்களும் ஒருமளவான சிறுகதைகளைத் தாங்கி வருகின்றன. இளம் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகள் ஏராளமாக வெளிவந்து கொண்டிருக் கின்றன. மறைந்த எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகள் மறுபிரசுரம் கண்டுவருகின்றன. பல்வேறு சஞ்சிகைகள் வெவ்வேறு நோக்கில் சிறுகதைப் போட்டிகளை நடாத்தி வருகின்றன. இவை அனைத்தும் தமிழில் சிறுகதைகளுக்கு இன்னும் மவுசு இருக்கிறது என்பதைத்தான் சுட்டிநிற்கின்றன.

ஜோர்ஜ் சோண்டர்ஸ் என்ற அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளருக்கு, ஒருமுறை அவருடைய சிறுகதைகளுக்காகப் பரிசு வழங்கப்பட்டபோது, 'சிறுகதைகளுக்குரிய கௌரவம் இப்போது கிடைத்துவிட்டது என்று நினைக்கிறீர்களா?' என்று அவரிடம் கேள்வி எழுப்பியபோது, அவர் கூறினார்: அது நல்லதொரு மகிழ்ச்சியான தருணம்தான். ஆனால், நான் 1970களிலிருந்தே சிறுகதை எழுதிக்கொண்டுதானிருக்கிறேன். இந்தக் கேள்வி எப்படி இருக்கிறதென்றால், இந்தப் பெண்கள் சஞ்சிகைகள், திடீரென்று Red is Back ன்று புதிய மொடலை அறிவிப்பார்கள். சிவப்பு வண்ணம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். அது ஒரு நாளும் fashion இலிருந்து இல்லாமல் போவதில்லை. அதுபோலத்தான் இதுவும் சிறுகதை எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும்.

**ம**லையக இலக்கியப் பரப்பில் சிறுகதைத்துறையே மலையக எழுத்தாளர்கள் எழுதப்பயின்ற மணல்தரையாகும். அன்றும் இன்றும் மலையக எழுத்தாளர்கள் உற்சாகத்தோடு சிறுகதைகள் எழுதுவதில் ஈடுபாடு காட்டிவந்திருக்கிறார்கள் என்பதை மலையக இலக்கிய வரலாறு எடுத்துச் சொல்லும்.

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்ற இலக்கியப் பிரிவுகளில் சிறுகதையே மலைப்பிரதேசம் பற்றிய படைப்புகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை பெற்றுள்ளது எனலாம். 'காலத்துக்குக்காலம் வெவ்வேறு நிறுவனங்கள் நடாத்தும் சிறுகதைப் போட்டிகளில், நடுவர் குழுக்களில் பணியாற்றிய வேலைகளிலெல்லாம் மலையக எழுத்தாளர்களுக்குச் சிறுகதைக் கலைமீதுள்ள ஆர்வத்தினை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்' என்று, மலையக எழுத்தாளர்களுக்குச் சிறுகதை வெகு ஆதர்சமாக இருந்ததை, பேராசிரியர் க.கைலாசபதி எடுத்துக் காட்டுகிறார். மலையக எழுத்தாளர்கள் என்று நாம் அடையாளப்படுத்தும் அனைவருமே பெருமளவில் சிறுகதைப் பண்ணையிலே பதியம் போடப்பட்டவர்கள்தான். மலையக இலக்கிய வரலாறு பற்றி எழுத முனைந்தபோது, மலையகச் சிறுகதை வரலாறு என்ற தொடரை தெளிவத்தை ஜோசப் தினகரனில் எழுத ஆரம்பித்தபோது ஊர்ஜிதமானது.

கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுப் போட்டிச் சிறுகதைகள், மலையகப் பரிசுக் கதைகள் என்று நூலாகத் தொகுக்கப்பட்டபோது (1994), எச். எச்.விக்ரமசிங்க, அதுகாலவரை வெளியான சிறுகதைத் தொகுப்புகளைப் பட்டியலிட்டபோது, 11 நூல்களைத் தருகிறார். இருபது ஆண்டுகளுக்குப் பின், இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள் (2014) என்ற நூலில், சாரல்நாடன் அதுகாலவரை வெளியான மலையகச் சிறுகதைத் தொகுப்புக்களைப் பட்டியலிடும்போது, 38 நூல்களைத் தருகிறார். ஆக, இருபது ஆண்டுகால இடைவெளிக்குள் 27 தொகுப்புகள் வெளியாகியமை பெருமைப்படத்தக்க வளர்ச்சிதான். இதைவிட, நூல்வடிவம் பெறாத பன்னூற்றுக்கணக்கான மலையகச் சிறுகதைகள் பத்திரிகைத்தாள்களில் மீளாத்துயிலில் ஆழ்ந்துள்ளன. ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய வரலாற்று எழுத்துக்களில் மலையகச் சிறுகதைகள் உள்வாங்கப்பட்டிருப்பதும், அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

இந்நிலையில் எழுபதுகளில் பதுளையிலிருந்து குறிஞ்சித் தங்கம் என்ற புனைபெயரில் சிறுகதை எழுத ஆரம்பித்த க.தங்கவேல், ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் தமிழகத்தில் புதுக்கோட்டையிலிருந்து ஒரு சிறுகதைத் தொகுப்போடு நம்முன் வந்து நிற்கிறார் என்றால், அது வெறும் புத்தக வரவை மட்டுமா சொல்கிறது? மலையகத் தமிழரின் சோக கீதத்தையும் அல்லவா மீட்டுகிறது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மலையகத் தமிழர்களைக் கூறுபோட்டபோது, அந்தப் நாசகார ஒப்பந்தத்தின் நச்சுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கிற்குள் சிக்கிக்கொண்ட மலையகப் புதல்வன், தங்கவேல். தங்கவேலின் துயரக்கதை, பதுளையிலிருந்து தலைமன்னார் வழியாக - தனுஷ்கோடியிலிருந்து புதுக்கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலிலேயே ஆரம்பமாகிறது. புதிய மண்ணில், தாயகம் நோக்கித் தன் மறுவாழ்வின் ஆயிரம் ஆயிரம் கனவுகளைச் சுமந்துகொண்டு சென்ற பயணம் தமிழகத்தில் தனுஷ்கோடியிலிருந்து ரயிலில் பயணித்த தங்கவேல், இந்தியக் குடிமகன் என்று சான்று கூறும் ஒரே அத்தாட்சியான, மலையகத் தமிழருக்கான, வெளிறிய சிவப்பு வண்ணத்தில் அமைந்த இந்தியக் கடவுச்சீட்டையும், மறுவாழ்விற்கான ஏனைய ஆவணங் களையும், செலவுக்கு வைத்திருந்த கொஞ்சம் டொலர்களையும், சூட்கேஸையும், அந்த ரயில் பயணத்தில் பறிகொடுக்கிறார்.

தாயகம் திரும்பும் தமிழர்களிடமிருந்து தட்டிப் பறிப்பதையே தொழிலாகக் கொண்டு இயங்கும் திருடர்களின் ராஜ்யமாக தனுஷ்கோடி ரயில் திகழ்ந்த காலம் அது ஒன்றுமில்லாத, வெற்று மனிதனாக, எதிர்காலம் என்னவென்று தெரியாத பேரிருளில் புதுக்கோட்டை ரயில் நிலையத்தில் இறங்கும் தங்கவேலின் நிலை நம் நெஞ்சைப் பிசைகிறது. இவர்களைப் போன்றோர் எங்கெங்கும் அந்நியமானவர்கள் ஆனார்கள் அதற்குப்பின், எந்த மறுவாழ்வுக்கான ஆவணமும் இல்லாமலே, எந்த அரசாங்க வேலைக்கும் விண்ணப்பிக்க ஒரு ஆதாரமும் இல்லாத நிலையில், தனியார் துறையிலேயே தன் வாழ்வைக் கழிக்க நேர்ந்த சோகம் எவ்வளவு துர்ப்பாக்கியமானது! கள்ளிக் காட்டிலும் பூ மலரும் என்பதுபோல், அந்தத் துயர வாழ்வையும் வென்று மீண்டிருக் கிறார், தங்கவேல். சொந்த வாழ்வின் போராட்டத்திலேயே தன் பொழுதைத் தொலைத்தாக வேண்டிய பொறிக்குள், தன் சிருஷ்டி ஆற்றலைப் பலிகொடுக்க நேர்ந்திருக்கும் அவலம். ஆனாலும், ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தான் வாழ்ந்து முடித்த மலையக வாழ்வை, இந்தச் சிறுகதைத் தொகுப்பிலே மீட்டிப்பார்க்கினறார்.

தங்கவேலின் முதல் சிறுகதையான உரம், பதுளை ஊவாக் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றத்தின் இலக்கிய வெளியீடு என்ற கலைவிழாமலரில் வெளியானது. அப்போது, அம் மன்றத்தின் செயலாளராக நானும், 'இலக்கிய வெளியீடு' மலராசிரியராக எஸ்.கணேசனும் பொறுப்பில் இருந்தோம், தங்கவேலு மன்றத்தலைவராக செயலாற்றினார். நான் அக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருந்தபோது, தங்கவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. சாதாரண வகுப்பில் பயின்று கொண்டிருந்தார். அவர் சார்னியா கொள்ளுமண்டித் தோட்டத்தைச் (Dotlands Estate) சேர்ந்தவர். பதுளை ஊவாக் கல்லூரியிலிருந்து, சிறுகதை எழுத்தாளராக மலர்ந்த பதுளை இராகுலன் எனப்படும் க. இராமச்சந்திரனை இங்கு குறித்துச் சொல்வது பொருந்தும். ஒரு தொகுப்புக்குத் தேவையான சிறுகதைகளை அவர் கையில் வைத்திருக்கிறார் என்றே நினைக்கிறேன்.

முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நான் பதுளைக்குப் போனபோது... எனக்குத் தெரிந்த ஓரிரு குடும்பங்களே அங்கிருந்தன. முற்றிலும் அந்நிய நகருக்குள் போவது போலிருந்தது. பால் வடியும் நகர் எனப்படும் பதுளை நகர், நான் அங்கு பயின்ற காலத்தில் தமிழர்களின் நகராகவே இருந்து. ஓரளவில் அந்த நகரில் வாழ்ந்த தமிழர்களின் household name ஆக நான் அறியப்பட்டிருந்தேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நான் துணை விரிவுரையாளராக இருந்தபோது, விடுமுறையில் எப்போதும் பதுளை செல்ல நேர்ந்தாலும், பதுளைப் பாடசாலையில் மாணவர்களுக்குப் பொருளியல் வகுப்புகளை எடுத்திருக்கிறேன். பதுளையில் பாரதியின் நூற்றாண்டு விழா 1979 இல் வெகு விமர்சையாக நடைபெற்ற போது, பாரதியின் நூல் கண்காட்சிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து என் சேகரிப்பில் இருந்த பெருந்தொகை நூல்களை பதுளைக்கு எடுத்துச் சென்றிருக்கிறேன். அது ஒரு கனாக்காலம்தான்.

என்னோடு சிறுவயதில் படித்த நண்பர்களைத் தேடி, பதுளை சார்னியாவிற்கும் கொள்ளுமண்டிக்கும் சென்றபோது, கந்தேகெதர தமிழ் மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற திரு.வி.தேவராஜ் அவர்களின் துணையோடு மூன்று பேரைச் சந்திக்க முடிந்தது. அவர்கள் இன்றும் அந்தத் தோட்டத்திலேயே இருப்பதால், அவர்களைக் காண்பது சாத்தியமானது. சில நண்பர்கள் மறைந்துபோன செய்தியைக் கேட்க நேர்ந்தது. பலர் தமிழகம் சென்றுவிட்டதாக அறிந்தேன். நெல்லிமூட்டைச் சிதறலாக நாங்கள் சிதறிப்போனது துயரமாக இருந்தது. பதுளை ஜும்மா பள்ளி வாசலில் ஒரு வெள்ளித் தொழுகை நேரம் கவிஞர் சாரணாகையூம் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது, அங்கு சில நண்பர்களைச் சந்தித்த பொழுதுகள் மகிழ்ச்சிகரமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கோட்டை திருக்கோகர்ணத்தில் அமைந்திருந்த ஞானாலயா நூலகத்திற்கு நான் சென்றிருக்கிறேன் என்றாலும், அப்பகுதி எனக்கு மிகவும் பரிச்சயமான இடமானாலும், அங்குதான் தங்கவேல் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார் என்ற செய்தியை எனக்குச் சொன்னவர் எச்.எச் விக்கிரமசிங்க ஆவார். எப்படி இந்தத் தகவல்களைத் தேடிப் பெறுகிறார் என்பது இப்போதும் எனக்கு ஆச்சரியமே. இந்தத் தொடர்பும் உறவும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு சிறுகதைத் தொகுப்பாக இன்று மலர்கிறதெனின், அந்தப் பெருமை விக்கிரமசிங்க அவர்களைச் சாரும். நாங்கள் எங்கள் பிரலாபங்களைப் பேசுவது வேறு. இலைமறை காயாக, அறியப்படாமல் போன இலக்கிய வாணர்களை, தொழிற்சங்க ஆளுமைகளைத் தேடிப்பிடித்து, தகவல் திரட்டி, அரிய புகைப்படங்களைச் சேர்த்து, பத்திரிகைகளில் அவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் பெரும் பணியை விக்கிரமசிங்க செய்துவருகிறார்.

அமெரிக்காவின் புகழ்மிக்க நாவலாசிரியையான ஊர்சுலா ல கின் (Ursula Le Guin) அவர்களின் புனைகதை பற்றிய தூக்குப்பைக் கோட்பாடு (The Carrier Bag theory of Fiction) பற்றி இங்கு நோக்குவது பொருந்தும். பழைய கற்காலத்திலும், புதிய கற்காலத்திலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் மனித இனத்தின் மூதாதையரின் பொறுக்கிச் சேகரித்த தாவர உணவுகளே அவர்களின் உணவு வகையில் 65-80 வீதப் பங்கினை வகித்திருந்தன. அவர்கள் விதைகள், வேர்கள், தளிர்கள், இளந்தண்டுகள், செடி முளைகள், இலைகள், கொட்டைகள், தீங்கனிகள், பழங்கள், தானியங்கள் ஆகியவற்றைச் சேகரித்தே உண்டு வாழ்ந்திருந்தனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், வாரத்தில் பதினைந்து மணி நேர உழைப்பில் தம் உணவுக் கானவற்றைத் தேடித் திருப்தியான வாழ்க்கையை நடத்த அந்த மனிதரால் முடிந்தது. இவ்வளவு குறைந்த நேரத்தில் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடிந்ததால், அவர்களுக்கு ஓய்வு நேரம் நிறையவே இருந்தது. வாழ்க்கைக்கு உயிரூட்டும் குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்தோர் பலர். சமைத்து மகிழவும் பாடிக் களிக்கவும் முனைந்தவர் பலர். சிற்சில கைவினைச் செயற்பாடுகளில் முழு ஈடுபாடு காட்டியவர் பலர். சிந்தனா உலகில் சஞ்சரித்தவர் பலர். இதிலொன்றும் நாட்டமில்லாமல், இவர்களிடமிருந்து நழுவிப்போய், ராட்சஷ காட்டு யானைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டையாடும் மூர்க்கமான செயலில் இறங்கினர் சிலர். வலிமைமிக்க வேட்டைக்காரர்கள் தமது வேட்டையின்பின், பெருந்தொகை இறைச்சியோடும் தந்தங்களோடும் வந்தார்கள் என்றில்லை. அவர்கள் கதைகளோடும் வந்தார்கள். இலையைப் பறிப்பதிலும், வேரோடிய கிழங்குகளைப் பிடுங்கி எடுப்பதிலும், கோதுகளை உடைத்து விதைகளைப் பொறுக்குவதிலும் சுவாரஸ்யமாகச் சொல்வதற்குக் கதைகள் எதுவுமில்லை. ஆனால், இந்த வேட்டைக்காரர்களிடம் கதைகள் இருந்தன. குன்றுகள் போல ராட்சஷ தோற்றம் கொண்ட, நீண்ட பெருந் தந்தங்களோடு உலவிய, காட்டு யானைகள்மீது, தங்களின் கூரிய ஈட்டிகளை வலிமையோடு வீசிக் குத்தியதை, அவற்றின் பருத்த தசைத் திரள்களின்மீது தொடர்ந்து ஈட்டியால் தாக்கியதை, அவற்றின் தந்தங்களை உடைத்து நொறுக்கியதை, தாக்குதலின் வலி தாங்காது அந்தப் பீறிட்டுப் பாய்ந்ததை, அதன் கண்களுக்கூடாக மூளையை நோக்கி தாங்கள் விசையோடு செலுத்திய அம்பினால், அது பிளிறிய வண்ணம் நிலமதிரச் சாய்ந்ததை எல்லாம் அவர்கள் கதைகதையாகச் சொன்னார்கள். இது வீரசாகசச் செயல் என்பதைவிட, இந்தக் கதையிலே ஒரு கதாநாயகன் இருக்கிறான். It has a hero. இந்தக் கதாநாயர்கள் வலிமை மிக்கவர்கள். இந்தக் கதாநாயகனின் கதையை, இப்போது எல்லோரும் சூழ்ந்திருந்து கேட்க ஆரம்பித்தார்கள். தானியங்கள் பொறுக்கியவர், குழந்தையைப் போஷித்துப் பார்த்தவர், சமையல் செய்தவர், பாடல் இசைத்தவர், சிந்தனையில் மூழ்கிக் கிடந்தவர் எல்லோரும் ஆவலாய் கேட்க ஆரம்பித்தனர். இது அவர்களின் கதை அல்ல. அவனுடைய கதை. வேட்டைக்காரரின் கதை. கொலைஞனின் கதை (Killer Story).

மனிதன் வேட்டையாட ஆரம்பிக்குமுன், காடுகளில் தானியங்களையும் பழங்களையும் அவன் பொறுக்கி உண்ட போது, தான் அவ்வப்போது வாய்க்குள் போட்டுக்கொண்டது போக, உபரியானதைச் சேர்க்கவும், மழைக்காலத்தில் வைத்து உண்பதற்கும் அந்த மூதாதை மனிதர் முதலில் ஒரு கொள்கலனை (container), ஏதாவது carrier bagஐக் கண்டு பிடித்திருக்க வேண்டும். தான் சேகரித்த பொருளைப் போட்டு வைக்க உதவும் இந்த சாதனம்தான் ஆதிக்கலாசாரக் கண்டு பிடிப்பாக இருக்க வேண்டும் என்கிறார், ஊர்சுலா கின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தூக்குப்பையில்தான் வாழ்க்கைக் கதைகள் குவிந்து கிடக்கின்றன. Life Story. மனிதன் ஹீரோவாக வளர்ந்த கதை, பரிணாம வளர்ச்சியில், கூரிய ஆயுதங்கள் கொண்டு அடிக்கவும் தாக்கவும் வதைக்கவும் கொல்லவும் முடிந்ததைப் பேசும் கதைதான் கொலைஞனின் கதை என்கிறார், எலிசபெத் பிஷர்.

இந்தக் கொலைஞனின் கதை சொல்லலில், சுற்றி நின்று கதை கேட்ட எல்லோருமே அதன் பங்காளராகிப் போகிறார்கள். ஆனால், அது அவர்களின் கதை அல்ல. அது அவனுடைய கதை.

நாங்கள் காடுகளில் தோளில் ஒரு தூக்குப்பையையோ, சுரைக்குடுவையையோ மாட்டிக்கொண்டு தானியங்களையோ, பழங்களையோ சேகரித்துக் கொண்டிருக்கும்போது, நீங்கள் காட்டு யானையை வீழ்த்திய கதையையோ, நாகசாகியில் அணுக்குண்டு போட்ட கதையையோ, ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் எல்லைக்கப்பாலும் ஏவுகணைகளை வீசிக்கொண்டிருப் பதையோ பற்றியெல்லாம் அவர்கள் சொல்லிக் கொண்டிருப் பார்கள். அவை கொலைஞனின் கதைகள் எங்களுக்குத் தேவையான, பயன்படத்தக்க, உண்ணக்கூடிய அல்லது அழகிய ஒரு பொருளை எங்களுடைய சுரைக்குடுவையிலோ அல்லது தூக்குப்பையிலோ சேகரித்து, அதனை எங்களுடைய வீட்டிற்கு எடுத்துச்சென்று, நாங்கள் அதனை உண்டோ, அல்லது ஏனையோரோடு பகிர்ந்துகொண்டோ, அல்லது எதிர்காலத் தேவை கருதிப் பயன்படுத்தும்போதோ, அதில் மனிதம் தொனிக்கிறது.

நாங்கள் யாா்மீதும் ஆக்கிரமிப்பு செய்யும் அல்லது தாக்குதல் நடத்தும் மனிதஜீவிகள் அல்லா்.

அவர்கள் சொல்லும் கதை எங்களது மனிதத்தை மூடிப்போர்த்த கதை. யானை வேட்டைக்காரர்கள் அடித்த, குத்தித் தாக்கிய, பாலியலிம்சைகளை நடத்திய, கொலைகளை நிகழ்த்திய ஹீரோக்களின் கதைகள் அல்ல. அது கொலைஞர் களின் கதை. அந்தக் கதைகளின் முடிவுகாலம் வந்துவிட்டது போல் தெரிகிறது.

நாங்கள் சொல்லும் கதை வித்தியாசமானது. எங்களின் கதைகளை நாங்களே சொல்வோம். நமது கதைகள் பரிச்சயமில்லாத வலயத்திற்குரியவை. அந்தக் கதையை, நாங்கள் இயல்பாகச் சொல்ல முடிவதில்லை. கொலைஞன் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதுபோலச் சொல்ல முடிவதில்லை. ஒருபுறம் காலந்தோறும் இந்த வாழ்வுக் கதைகளை மக்கள் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறார்கள். நாவல் என்பது, மருத்துவப் பெட்டியைப் போன்றது. நாவலின் கூறுகள், ஒன்றுடன் ஒன்று தம்மோடும், எம்மோடும் வலிமையான உறவுகள் கொண்டவை.

நாவலின் முக்கிய கூறுகளில் ஒன்று, முரண்பாடு எனக் கருதப்படுகிறது. நாவல் எடுத்துரைப்பை, முரண்பாடாக மட்டுமே குறுக்கி நோக்குவது அபத்தமானது. 'ஒரு கதை என்பதை யுத்த களமாக நீங்கள் பார்க்க வேண்டும்' என்று, புனைவுக்கதைகள் எழுதுவது எப்படி என்ற விரிவுரைகளில் சொல்லப்படுவதுண்டு. அதாவது, தந்திரோபாயம், தாக்குதல், வெற்றிகொள்ளல் என்றவாறெல்லாம் அது நீளும்.

இந்த கொலைஞன் கதைகளில் வரும் கதாநாயகனுக்கு, எங்கள் தூக்குப்பை அல்லது சுரைக்குடுவை அவ்வளவாக ஒத்துவராது. அக்கதாநாயகனுக்கு மேடைகள், பீடங்கள், சிகரங்கள் தேவை. அவனை நீங்கள் எங்கள் தூக்குப்பைக்குள் போட்டால், அவன் ஒரு முயலைப் போலவோ, ஓர் உருளைக் கிழங்கைப் போலவோ ஆகிப்போவான்.

கதாநாயகர்களுக்குப் பதிலாக, எங்கள் கதைகளில் மக்கள் இருப்பார்கள்.

**த**ங்கவேல் எழுதியிருக்கும் இந்தக் கதைகள், வாழ்வுக் கதைகள். தூக்குப்பைக்குள் சேமித்து வைத்திருக்கும் தானிய மணிகளை அவர் விரித்து வைக்கிறார். சுரைக்குடுவைக்குள் கிடக்கும் தீங்கனிகளை, அவர் பகிர்கிறார். கதாநாயகர்கள் அவர் கதைகளில் வருவதில்லை. புதிதாக ஒரு வாழ்க்கையையே சுமந்து செல்லப்போகும் ரயிலை இன்னும் சிறிது நேரத்தில் அனுப்பி வைக்கும் சாகச முடிவுகளை இவர் கதைகளில் காண முடிவதில்லை. வறுமைத் துயரில் முற்றிலும் ஆழ்ந்த மக்கள் கூட்டத்தின் துயரம் நிரம்பிய வாழ்வை, இவரது கதைகள் பேசுகின்றன.

தங்கவேலின் கதைகளில், அவர் வாழ்ந்த, நடந்து திரிந்த தோட்டவெளிகள், லயங்கள், பெரட்டுக்களம், திண்ணை, அப்புஹாமியின் நாட்டுச்சேனை, பதுளை போஸ்ட் ஒபீஸ், பீங்காரவைத் தவறணை, அலுக்கொல்லை ஏற்றப்பாதை, பதுளை ரயில்வே ஸ்டேசன், செண்டாகட்டிமலை, உடரட்டமெனிக்கே, தொழிற்சாலையின் ரோல் காம்பிரா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மண்முடுக்கு, சென். பீட்ஸ் கல்லூரி, மாத்தனை தோட்டத்து கொழுந்து மடுவப் பஸ் நிறுத்தம், பத்தனாவத்தை பஸ், கீனாக்கொலை ரோட் என்று அந்த நிலப்பிராந்தியம் விரிந்து கிடக்கிறது. தோட்டத்து மக்களோடு வாழ்ந்து, நாளெல்லாம் அவர்களின் பாடுகளை அடுத்திருந்து பார்த்து, அவர்களின் துயரில், நீதிக்கான சமரில் தானும் பங்குகொண்டு, அந்த அநுபவத்தின் காங்கையில் வெதும்பிப் பிறந்த கதைகள். இவை.

இத்தொகுப்பின் முதலாவது கதையான 'மனம் விழித்தபோது...' பதுளைத் தோட்டத்திலிருந்து, கொழும்பில் ஒரு குடும்பத்திற்கு வேலைக்காரச் சிறுமியாக, தனது பதினொரு வயது மகளைக் கூட்டிக்கொண்டு போய்விட, ரயிலில் பயணம் செய்யும்போது, தனது மகளை ஒத்த வேலைக்காரச் சிறுமியின் பரிதாபத்தைப் பார்த்து, பயணத்தை இடையில் நிறுத்திவிட்டு, தோட்டத்திற்குத் திரும்பும் தந்தையின், கதை.

இக்கதை எழுதப்பட்டு நாற்பது ஆண்டுகளின் பின்னர், ஹட்டனில் தோட்டப் பெண்கள் மத்தியில் ஆய்வு செய்த அமெரிக்கப் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியையும் மானிடவியல் ஆய்வாளருமான கலாநிதி மைத்தி ஜெகதுசனின் Tea and solidarity என்ற நூல், ஹட்டனிலிருந்து கொழும்பிற்கு வீட்டுவேலைக்குப் போகும் சதா என்ற பெண்மணியின் கதையோடு ஆரம்பமாகிறது. என்ன வித்தியாசம்? தங்கவேலின் கதையில் பதினொரு வயதுச் சிறுமியை வேலைக்கு அனுப்ப மனமில்லாமல், அவளைக் கூட்டிக்கொண்டு லயத்திற்குத் திரும்புகிறான். அந்தச் சிறுமியின் தந்தை. மைத்ரியின் ஆய்வில், அவர் எதிர்கொள்ளும் பெண், இருபத்தாறு வயதில், கொழும்பில் மருதானையில் ஒன்பது வயதுச் சிறுவனைக்கொண்ட சிங்களத் தம்பதியினரின் வீட்டிற்கு, அச்சிறுவனைப் பராமரிப்பதற்காகச் சென்று, அச்சிறுவன் அவளை அடித்து, கேவலமாக நடத்தியதால், மூன்றே வாரத்தில் அவள் ஹட்டனில் உள்ள தனது லயத்திற்கே திரும்புகிறாள்.

தோட்டங்களிலிருந்து பணிப்பெண்களாகக் கொழும்பு நோக்கிச் செல்லும் பயணம் அறுபதுகளிலேயே ஆரம்பித்து விட்டதை, 'மனம் விழித்தபோது...' கதை விபரிக்கின்றது. இக்கதையில், ஒரு சிறுமி பணிப்பெண்ணாகச் செல்லும் அவலம் தவிர்க்கப்பட்டுவிடுகிறது. கொழும்பில் பணிப்பெண்களாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இரண்டு பெண்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டு, கொழும்பு ஏரியில் சடலங்களாக மீட்கப்பட்டு, அவை தற்கொலை மரணங்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட சம்பவங்கள், மிகச் சமீபகாலத் துயரங்கள்.

'மனம் விழித்த போது...' கதையில், கொழும்பிலிருந்து தனக்கு வந்த 25 ரூபா காசுக்கட்டளையை மாற்றுவதற்கு, பதுளை தபால் நிலையத்திற்குச் செல்லும் செல்லையா, அதனை மாற்றி, காசாகப் பெறுவதற்குப் படும்பாடு, ஒஸ்மான் செம்பேனின் The Money Order / Mandabi படத்தை நினைவுக்குக் கொண்டு வருகிறது. பிரான்சிலிருந்து தனக்கு அனுப்பப்பட்ட 25,000 பிராங்க் போஸ்டல் ஓர்டரை, ஓர் அப்பாவிச் செனகல் நாட்டுக் கிராமவாசி, தபால் நிலையத்தில் காசாக மாற்ற, படும்பாடுதான் அந்த சினிமா செனகலாக இருந்தாலென்ன, கொள்ளுமண்டித் தோட்டமாக இருந்தாலெனன்ன விளிம்புநிலை மாந்தர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஒன்றுதான். இந்தக் கதையில் தான், தோட்டத் தொழிலாளர் வாழ்வின் அவலங்கள், எந்தச் சோடனையும் இல்லாமல் பதிவாகின்றன. தங்கவேலின் தூக்குப்பையில் இத்தகைய வாழ்வுக் கதைகள் சேகரத்தில் இருந்துள்ளன.

ஒரு தேயிலைத் தொழிற்சாலைக்குள் நடைபெறும் வேலைகளின் யந்திரீகத் துரிதத்தில் பலியாகும் செல்லனின் கதையில் நம் நெஞ்சு கனக்கிறது. இதனோடு ஒப்பிடக்கூடிய இன்னுமொரு கதையைக் கூற வேண்டுமானால், தெளிவத்தை ஜோசப்பின் 'கூனல்' கதையைச் சொல்லலாம். 'அந்த ஏழை நெஞ்சத்தின் ஆசைக் கனவுகள்... அவர்களின் அபிலாஷைகள், எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தும் செல்லனோடு சேர்ந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விடுமா?' என்று நிறைவேறாத சின்னச்சின்ன ஆசைகளும்கருகிப்போகும் துயரத்தோடு இந்தக் கதையை முடிக்கிறார், தங்கவேல். 'ஆசைகள் கனன்றெரியும் போது, அவற்றை நிறைவேற்ற இயலாமையால் மௌனம்தகாத்து நிற்பதுகூட, எங்கள்மீது நாங்களே விதித்துக்கொள்ளும் கொடுந்தண்டனை' என்கிறான், ஸ்பானியக் கவி கார்சியா லோர்க்கா. நிராசைகளிலிருந்தும், கைகூடாத கனவுகளிலிருந்தும் விரக்தியிலிருந்தும்தான் சோகம் தொடர்கிறது. சோகத்திலிருநது நிராசைகள் உருவாவதில்லை. ஆற்றாமை, இயலாமை, ஆத்திரம், கையறுநிலை, அச்சம், வெறுமை, வெறுப்பு, தன்னையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துக்கொள்ளும் எண்ணம், மதுபோதைக்கு அடிமையாதல், சிந்தனையை மழுங்கடிக்கும் சூன்யம் போன்ற எத்தனையோ கூறுகள் சோகத்தில் பொதிந்திருக்கின்றன. சமூக, பொருளாதார, கலாசார நிலைமைகளில், மனித வாழ்வு வெவ்வேறு கோலங்கள் கொள்கின்றன. இந்தச் சூழலில், ஒரு சாதாரண மனிதன், தன்னை அமிழ்ந்தும் சோகச் சுமைக்கு எவ்வாறு எதிர்வினை ஆற்றுகிறான் என்பதை அவ்வளவு எளிதில் அறிந்துகொள்ள இயலாது. மனிதஜீவியாகவே அங்கீகரிக்கப்படாத, வெறும் சோற்றுக்கே பரிதவிக்கும் மிடிமையில், அதிகாரத்தில் இருபவர்கள் எந்த அநியாயத்தையும் இலகுவாகச் செய்துவிட்டுப்போகும் கௌகரியத்தில், நிர்க்கதியான ஒரு மனிதன் அல்லது மனுஷி என்னதான் செய்துகொள்ள முடிகிறது?

'உலகிற்கு விடிகிறது' என்ற கதையில் தோட்டத்து மேற்பார்வையாளன் ஒருவனால், பாலியல் வன்முறைக்கு ஆளான நாகம்மாளும் அவளது தாயும், நீதி கோரி, அது முற்றாக நிராகரிக்கப்பட்ட நிலையில், அந்த இரண்டு ஜீவன்களின் கையறு நிலையை, தங்கவேல் விபரிக்கிறார்.

'சுமார் நான்கு சதுர அறையிலே தேங்கிக்கிடந்த இருளை விரட்ட, அந்த விளக்கின் சுடர் அசைந்து அசைந்து போராடுகிறது, ஆனால், அங்கு முடங்கிக் கிடக்கும் அந்த இரண்டு உயிர்களின் ஆசைகளையும் நம்பிக்கையையும் தீய்த்து, அவர்களின் வாழ்விலே சூழ்ந்த அந்தகார இருளை எந்தச் சுடர் அகற்றும்?'

இந்த யதார்த்த நிலையில், 'சமூகத்தில், மனிதனில் பற்றையும் பாசத்தையும் தோற்றுவித்து, மனிதனை அவனது ஆக்கபூர்வ நிகழ்ச்சிக்கு இட்டுச்செல்லும் சோகமாக' - ஆத்திரம் கலந்த சோகமாக, அதனை மிளிரச் செய்யுமாறு கோரும் வெற்று வேஷ உபதேசிகளுக்கும் நம்மில் பஞ்சமில்லை. ஒரு வீட்டுப் பணிப்பெண்ணையே கௌரவமாக நடத்தத் தெரியாத இந்தப் போலிகள் லகுவாகப் பிரசங்கிகளாக மாறிவிடுகிறார்கள். சாணியால் வெகு நேர்த்தியாக மெழுகப்பட்டிருந்த அந்தத் தலையில், மொத் தென்று ஓசை எழ இறுக்கிக் குத்தினான் என்று ஈஸியாக ஆத்திரம் கலந்த சோகத்தை 'மிளிர'ப் பண்ணிக் கதை பண்ணிய பேர்வழிகளும் உண்டு.

இந்தத் தொகுப்பில் வரும், 'யாகாவாராயினும் தன் நிறை காக்க...', 'நிரந்தர அமைதியைத்தேடி...' 'மனித உருவில்..'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மூன்று கதைகளில் உலவும் மூன்று பெண் கதாபாத்திரங்கள் தற்கொலை செய்துகொள்கின்றன. யாகாவாராயினும் தன் நிறை காக்க... என்ற கதையில், காதலில் தோல்வி கண்டு, 'இந்த ஏமாற்றுக்கார உலகில் தான் வாழ விரும்பவில்லை என்று ஏதோ வெறி கொண்டவளைப் போல, ரயில் பாதையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறாள், உடரட்ட மெனிக்கே' ரயில் ஓர் அசுரப் பசியோடு பயங்கரமாக ஊளையிட்டுக்கொண்டு ஓடிவந்து கொண்டிருந்தது என்று கதையை முடிக்கிறார், தங்கவேல்.

'நிரந்தர அமைதியைத் தேடி...' என்ற சிறுகதை, தோட்டத்திலும் கடுமையாக உழைத்துவிட்டு வந்து, லயத்தில் மாமனார், மாமி கணவன் என்று அனைவராலும் மோசமான வதைக்குள்ளாக்கப்பட்ட கமலம், மீள வழிதெரியாமல் குமைகிறாள். பாறையில் ஏறி நின்று, ஓடும் ஆற்றில் பாய்ந்து உயிரை மாய்த்துக்கொள்கிறாள்.

'மனித உருவில்...' என்ற மற்றொரு கதை, தாயின் கடும் வசைமொழிகளைத் தாங்க முடியாமல், நஞ்சருந்தித் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் மகளின் சோகக் கதையைச் சொல்கிறது. மனித உருவில் வந்த ஒரு கொடூரத் தாயின் நடத்தையால் சம்பவித்த மரணம் இது.

தற்கொலை என்பது தீர்வு காணமுடியாத பெரும் புதிர். உலகில் நடைபெறும் மரணங்களில் 1.4 வீத மரணங்கள் தற்கொலையினால் சம்பவித்தவை என்றும், 2015இல் உலக அளவில் இடம்பெற்ற மரணங்களுக்குக் காரணமான பதினேழாவது காரணியாகத் தற்கொலை அமைந்திருப்பதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. இலங்கையில் நடைபெறும் தற்கொலைகளுக்கான காரணங்கள், அவற்றுக்கான அழுத்தங்கள், அதன் அடிப்படைப் பிரச்சினைகள் என்பவற்றை இன்னும் நாங்கள் அறிந்து கொள்ளவில்லை என்கிறார். மருத்துவ நிபுணர் டாக்டர் துலீக்கா நிப். இலங்கையில் 1986-2016 ஆண்டு காலப்பகுதியில் இடம் பெற்ற தற்கொலைகள் குறித்து ஆய்வு நடத்திய என். தலகல என்ற ஆய்வாளர், இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் தற்கொலை வீதமானது ஒரு லட்சம் பேருக்கு 25 பேராக இருக்க, மலையகத் தமிழர் மத்தியில் அது ஒரு லட்சம் பேருக்கு 2 பேராக இருப்பதாகத் தெரிவிக்கிறார். மலையகத் தமிழர் மத்தியில் மிகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த தற்கொலை மரணவீதமே காணப்படுவதாகக் கூறுகிறார். தற்கொலைகளுக்குச் சமூக, பொருளாதார, சமயக் காரணிகளோடு, கலாசாரக் காரணிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. தற்கொலையைத் தடுப்பதற்கான விழிபபு நடவடிக்கைகளும், கடுமையான நச்சுத்தன்மை வாய்ந்த களைகொல்லிகளைத் தடை செய்யும் அரசின் கொள்கை முடிவுகளும் தற்கொலை நிகழ்வுகளைத் தடுக்கும் செயற்பாடுகளாக அமைந்துள்ளபோதிலும், எவ்வளவு தூரம் தற்கொலைகளைத் தடுத்திட முடியும் என்பது கேள்விக்குரியது.

தங்கவேலின் கதைகளில் பல, மரணங்களோடு முடிவுறுகின்றன. சிறுகதை ஆசிரியர்கள் தங்கள் ஆரம்பகாலக் கதைகளில் மரணத்தை, திடீர் விபத்தை, தற்கொலையை முக்கியமான கருப்பொருளாகக் கொண்டுவிடுகிறார்கள். ஆனால், தங்கவேலின் கதைகளில் இழைக்கப்படும் மரணங்கள், கதையின் இயல்புத்தன்மையோடு பொருந்தி வருகின்றன என்பதனையும் நாம் குறித்தாக வேண்டும்.

தனது பத்தொன்பதாவது வயதிலிருந்து தனது இருபத்திமூன்று வயதிற்குள் இந்த அனைத்துக் கதைகளையும் அவர் எழுதி முடித்திருக்கிறார் என்பது நம் அவதானத்திற்கு உரியது. அவர் இலங்கையில் அநுபவித்த மலையக வாழ்வுக் காலத்தோடு, அவரது எழுத்து முயற்சிகள் முடங்கியமை கவலைக்குரியது. கதை சொல்லும் ஆற்றலும், இயல்பாகக் கதையைக் கொண்டு நடத்தும் லாவகமும் எழுத்து வளமும் கொண்ட தங்கவேல், தன் இலக்கியப் படைப்புலகை மீண்டும் தொடர முனைந்தால் அது மகிழ்ச்சியான செய்தியாய் இருக்கும்.

தன்னை எழுத்துத்துறைக்குள் ஊக்குவித்த ஆசிரியர் அமரர் க.தங்கவடிவேல் அவர்களை நன்றியுடன் நினைவுகூருகிறார். தங்கவேலு அவர்கள் தனது 2வது கதையை எழுத்தாளர் திரு. யோ. பெனடிக்றபாலன் அவர்களின் அறிமுகத்துடன் 'தினபதி' நாளேட்டில் 27.07.1968ல் "உலகத்திற்கு விடிகிறது...!" என்ற தலைப்பில் க. தங்கவடிவேல் என்ற புனைபெயரிலேயே எழுதியிருக்கிறார். ஆனால் அதற்குப்பின் அந்தப் புனைபெயரை அவர் உபயோகித்ததாகத் தெரியவில்லை. பின்னர் அவர் 'குறிஞ்சித்தங்கம்' என்ற பெயரையே உபயோகித்திருக்கிறார். தான் புனைந்துகொண்ட 'குறிஞ்சித் தங்கம்' என்ற பெயரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்திருககும் 'தங்கம்' என்பது தங்கவடிவேல் மாஸ்டரைக் குறிக்கும் என்கிறார், தங்கவேல். மலையகத்தில் உயர்ந்த நோக்குடன், அம்மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறையோடு சேவையாற்றிய தங்கவடிவேல் மாஸ்ரர் போன்ற பேராசான்களே தீபஸ்தம்பங்களாக ஒளிவீசி நிற்கிறார்கள். வடபுலத்தில் சாதியப் போராட்டத்தில் முன்னின்ற, சமூக நீதிக்காகப் போராடிய பெருமகன், மலையக மக்களின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டியதில் வியப்பில்லை. பொன், கந்தையாவின் வார்ப்பில் உருவானவர்கள், அவன் இலட்சியங்களைத் தாங்கள் வாழுமிடங் களில் எல்லாம் சுமந்து சென்று விதைத்திருக்கிறார்கள்.

அடுத்து, பதுளை, கந்தேகெதரையில் தையற்கலைஞராகப் பணியாற்றிய சதாசிவம் அவர்களுக்கும் தங்கவேல் இத்தொகுப்பில் நன்றி கூறுகிறார். அறுபதுகளில் கந்தேகெ தரையில் மார்க்சியக் கருத்துக்களைப் பரப்புவதில், மார்க்சிய இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதில், சதாசிவம் அவர்கள் தீவிரமாகப் பணியாற்றியவர். தமிழகத்தில், நீலகிரி மாவட்டத்தில் கொளப்பள்ளியில் சதாசிவம் அவர்களைப் பல ஆண்டுகளுக்கு முன் சென்று பார்த்திருக்கிறேன். கனம் பண்ணவேண்டிய மனிதர் அவர்.

இந்த இருபெரும் ஆளுமையாளர்களின் இலக்கியப் பசலையில் துளிர்த்த பசுஞ்செடி, மனிதம் எனும் பனித்துளி சூடிய தன் மலர்களை, முதல் கொத்தாக நமக்குப் பரிசளிப்பது மகிழ்ச்சிக்குரியது.

இதுகால வரை மலையக இலக்கியத்தில் பேசப்படாத ஒரு எழுத்தாளராக இருந்த நிலையில் கறிவேப்பிலைகள் என்ற இத்தொகுப்பின் மூலம், சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கவேலு, தன் இலக்கிய அந்தஸ்தை மலையக இலக்கியத்தில் நிறுவியிருக்கிறார். மலையகத்தைவிட்டுத் தமிழகம் செல்ல நேர்ந்தவர்களில், இப்படி எத்தனை இலக்கிய ஆளுமைகளை நாம் இழந்திருக்கிறோம் என்ற தெரியவில்லை. தங்கவேலு அவர்களின் மீள்வரவை மலையக இலக்கிய உலகம் உற்சாகப் பண் பாடி வரவேற்கிறது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெளிவத்தை ஜோசப்

தலைவர்,
மலைநாட்டு எழுதாளர் மன்றம்.

இந்தத் தொகுப்பின் தலைப்பே அது கூறவரும் கதைமாந்தர்களின் வாழ்வியல் உண்மைகளை உறுதிப்படுத்தும் தகைமையைக் கொண்டிருப்பது மகிழ்வானதே.

உணவை சுவைபடுத்தும் கறிவேப்பிலை இறுதியில் குப்பைத் தொட்டியில் வீசப்படுவதைப் போலவே நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அல்லற்படும் இப்பாட்டாளி மக்களும் அதிகார வர்க்கத்தினரின் வளத்துக்கும், சுகத்துக்குமாக உழைத்து, உழைத்து இறுதியில் ஒன்றுமில்லாமல் துரத்தப்படும் துயர் சுமைக்கான குறியீடு இது.

இத்தொகுதியிலுள்ள கதைகளும் அதில் வரும் பாத்திரங்களும், கதை மாந்தர்களின் செயற்பாடுகளுக்கப்பால் கதாசிரியரின் கள வர்ணனைகளும், வாசகனுக்குக் காட்ட முனையும் இலங்கையின் மத்திய மலைப்பிரதேசத்தின் தேயிலை, ரப்பர் தோட்டங்கள்.

இத்தோட்டங்களில் வேலை செய்வோர் தென்னிந்தியக் கிராமங்களில் இருந்து வறுமை காரணமாகப் புலம் பெயர்ந்து வந்தவர்கள். 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து மரண யாத்திரை மேற்கொண்டு மலைநாட்டுக்கு குடிபெயர்ந்து லட்சக்கணக்கான உழைப்பாளித் தமிழ் மக்கள் ஆங்கில அரசாலும் அவர்கள் உருவாக்கிய தோட்டங்களின் வெள்ளைக்காரத் துரைமார்களாலும், துரைமார்களின் ஏஜெண்டுகளான சின்னத் துரைமார்கள், பெரிய கங்காணிகள் போன்றவர்களாலும் காவு கொள்ளப்பட்ட வரலாறுகள் துயர் தோய்ந்தவை.

தோட்டங்களுக்குள் தனித்தனியான இராச்சியங்கள் நடைபெற்றன. அவர்களின் நிர்வாகத்துக்கு ஏற்றாற்போல் தொழிற்சட்டங்கள் உருவாக்கப்பட்டன. தட்டிக்கேட்க ஆளில்லாத காரணத்தால் இவர்கள் கட்டிவைத்தும் அடிக்கப்பட்டனர். விலங்குகளை சாட்டையால் அடித்து வேலை வாங்குவதைப்போல் இத்தோட்ட மக்களும் வேலை செய்ய வதைக்கப்பட்டனர். இருப்பினும் அதிகமான தொழிலாளர்கள் கூட்டமாக ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்வதால் தங்களுக்கெதிராக இவர்கள் மற்றவர்களுடன் குறிப்பாக நகர்ப்புறத் தொழிலாளர்களுடன் இணைந்து செயற்பட முடியும் என்பதால் வேறு எவருடனும் பேசிப் பழகவோ, இணையவோ விடாமல் தோட்டங்களுக்குள்ளேயே தனிமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி வைப்பதில் தீவிரமாக இருந்தனர். சட்டங்கள் மூலமும் இதைச் செயற்படுத்தினர். இந்த அந்நியப்படுத்தல்கள் மூலம் இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கும், தொப்புள் கொடி உறவினர்களான தமிழக மக்களுக்கும் கூட அறியப்படாதவர்களாகவே வைக்கப்பட்டு விட்டனர்.

இந்த நூலுக்கான ஆசிரிய உரையில் குறிஞ்சி தங்கம் க. தங்கவேலு அவர்கள் "இந்தக் கதைகளின் நிகழ்களம், நிகழ்காலம் எத்தகையது, எந்தச் சூழ்நிலையைக் கொண்டிருந்தது என்பவைகளை சிறிதளவாவது புரிந்து கொண்டால்தான் இந்தக் கதைகளின் கதாபாத்திரங்களை நீங்கள் நன்கு உள்வாங்கிக் கொள்ள முடியும்" என்று கூறுவதற்கும் இந்த அந்நிய மாக்கப்பட்ட நிலைமைகளே காரணம். இது நிகழ்களம் பற்றியது! நிகழ் காலம் பற்றிப் பேசுகையில் இந்தக் கதைகள் எழுபதுகளில் வெளிவந்திருக்க வேண்டும் என்கின்றார். இது இந்த மக்கள் பற்றிய எழுத்துக்கள் பற்றியது!

இந்த மக்களின் உழைப்பும் அதன் பலனான கோப்பி, தேயிலை, இரப்பர் போன்ற உற்பத்திகளின் ஏற்றுமதியும், இலங்கையின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதாக இருந்தும் கூட இவர்களைப் பற்றிய அக்கறையும், இவர்கள் பற்றிய அறிதல், புரிதல்களும் ஒரு நூற்றாண்டுக்குப் பின்பும் யாரிடமும் இருந்ததாகத் தெரியவில்லை. வரலாற்று ரீதியான ஆய்வுகளோ, சமூகவியல் ரீதியான அணுகற் பதிவுகளோ, புனைவு ரீதியான இலக்கியப் படைப்புக்களோ இருந்ததாகத் தெரியவில்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் (ஆய்வுகளாக) இந்த உழைக்கும் அப்பாவி மக்களை எதிரிகளாகவும், பஞ்சம் பிழைக்க வந்த பரதேசிகளாகவுமே காட்ட முனைந்துள்ளன. பெருந்தோட்ட மக்கள் பற்றிய எழுத்துக்களாக அரசியல் யாப்புகள், சட்டப் பிரகடனங்கள், இலங்கை, இந்திய உடன்படிக்கைகள், பாராளுமன்ற விவாதங்கள் போன்றவைகளும் இருந்துள்ளன.

1930 களில் வெளிவந்த புதுமைப் பித்தனின் "துன்பக்கேணி", "மணிக்கொடி" - 1934, கோ. நடேசய்யரின் "இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு" - 1937, நாடகம் கோ. நடேசய்யரின் திரு. ராமசாமி "சேர்வையின் சரிதம்" - 1931 போன்றவைகள் இந்த மக்கள் பற்றிய புனைவுசார் கலை இலக்கியங்கள் என்றாலும் இலக்கிய வரலாற்றுக்கான எடுத்துக்காட்டுகளாக இவை அமைந்தனவே தவிர துன்பக் கேணிகளான இத்தேயிலைத் தோட்டங்களுக்குள் அந்தரப் பிழைப்பு நடத்தும் இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறையை, அறிமுகத்தை, வேதனைகள் மிகுந்த அவர்களது வாழ்வியல்களை வெளி உலகத்துக்குச் சொல்வதாக அமைய வில்லை. எடுத்துச் செல்வதாகவும் அமையவில்லை.

ஏறத்தாழ ஒன்றேகால் நூற்றாண்டுகளுக்குப் பிறகு இந்த மக்களைப் பற்றி எழுந்த இவ்வெழுத்துக்கள் (1815-1936) மேலும் ஒரு 30, 40 ஆண்டுகளுக்குப் பிறகே மலையக இலக்கியவாதிகள், ஆய்வாளர்கள் போன்றோரால் உள்ளும், புறமுமாக அறிமுகப் பிரபல்யமும் பெற்றமை மறுக்கக் கூடாதவை. வரலாறு கூறுதல், வரலாற்றை அறிந்துகொள்ளல் போன்றவற்றில் தமிழர்களாகிய நாம் காட்டும் அசட்டைகள் நமது சமூகத்துக்கு நாம் செய்யும் அநீதிகள், துரோகங்கள் ஆகும்.

மலையகம், மலையக மக்கள், மலையகத் தமிழ் இலக்கியம் போன்ற சொற்பிரயோகம் 1960 இல் இருந்தே அரசியல், சமூக இலக்கிய, பண்பாட்டுத் துறைகளில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன என்று ஈழத் தமிழ் வரலாற்று ஆசிரியர்களும் எழுதத் தொடங்கிய காலமாக எழுபதுகள் அமைந்தன. ஒன்றரை நூற்றாண்டு காலமாக மனிதத்துவமற்ற முறையில் ஒடுக்கப் பட்டும், வஞ்சிக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் கிடந்த மலையக மக்கள் பற்றிய அவ்வப்போது ஒருசில படைப்புக்கள் வந்திருந் தாலும் மலையகம் என்னும் பிராந்தியத்துக்கே உரிய பிரக்ஞை யுடனும் ஒரு உத்வேக எழுச்சியுடனும் மலையக படைப்புக்கள் மலையக எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட காலம் 1960 க்குப் பிந்திய காலமே ஆகும்.

வீரகேசரி போன்ற பெரும் பத்திரிகைகள் இந்தத் தோட்ட மக்கள் பற்றிய எழுத்துக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்ததுடன், மலையகச் சிறுகதைப் போட்டி நடத்தி பரிசளித்து இளம் மலையக எழுத்தாளர்களை உற்சாகப்படுத்திய, ஊக்குவித்த காலம் 60 க்கும் பிந்திய காலம். அப்படி நடத்திய நான்கு போட்டிகளில் முதல் மூன்று பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து “கதைக்கனிகள்” எனும் பெயரில் ஒரு நூலாக வெளியிட்டது வீரகேசரி. இந்தச் சிறுகதைப் போட்டிகளுக்கும், கதைக்கனிகள் நூல் வெளியீட்டுக்கும் ஒரு மூலவேராகவும் இயங்கு விசையாகவும் இருந்து செயற்பட்டவர் வீரகேசரியின் துணை ஆசிரியர் குழுவைச் சார்ந்தவரும், வீரகேசரியில் தோட்ட மஞ்சரி பொறுப்பாசிரியருமான எஸ்.எம். கார்மேகம் அவர்கள். அவருக்கு வலதுகரமாய் இருந்து காரியமாற்றி கதைக் கனிகள் நூல் வெளிவர உழைத்தவர்கள் வீரகேசரியில் அப்போது அவருடன் பணியாற்றிய எச்.எச்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமசிங்க, கே. கோவிந்தராஜ் இருவரும் இல்லையேல் இந்த வெளியீடு வெற்றி பெற்றிருக்குமோ தெரியவில்லை என்று பதிப்புரையில் மனமுருகுகின்றார் கார்மேகம்.

1971 இல் வெளிவந்த இந்நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், இலக்கிய ஆர்வலர்களும் இந்தக் கதைகள் பற்றியும் அவை காட்டி நிற்கின்ற தேயிலைத் தோட்டங்கள் பற்றியும் அத்தோட்டங்களுக்குள் அடக்கி வைகப்பட்டுள்ள பாட்டாளி மக்கள் பற்றியும் அக்கறையுடன் உரையாடத் தொடங்கினர். தமிழ்ப் புத்தகாலயம் வெளியிட்ட பேராசிரியர் இரா. தண்டாயுதம் அவர்களின் "தற்காலத் தமிழிலக்கியம்" என்னும் நூல் இந்தக் கதைக்கனிகள் பற்றியும் அது காட்டும் புலம் பெயர்ந்த தமிழ் தொழிலாளர் பற்றியும் ஒரு தனி அத்தியாயம் கொண்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகப் பொருளியல் விரிவுரையாளரும், பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மலையக இலக்கிய விமர்சகரும், ஆய்வாளருமான மு. நித்தியானந்தன் அவர்கள் வைகறைப் பதிப்பகம் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து மலையக நூல்களை வெளியிடத் தொடங்கிய காலமும் இந்த மலையக இலக்கிய எழுச்சிக் காலமான 60 க்குப் பிந்திய 70 களே "நாமிருக்கும் நாடே...." - 1979, "ஒரு கூடைக் கொழுந்து" - 1980, "வீடற்றவன்" - 1981. இவைகளை வெளியிட்ட இந்த மூன்று நூல்களில் முதல் இரண்டும் சிறுகதைத் தொகுதிகள், "வீடற்றவன்" சி.வி.யின் குறுநாவல். முதல் இரண்டு சிறுகதை நூல்களும் அரசு சாகித்திய விருது பெற்றன.

கறிவேப்பிலைகள் நூலாசிரியர் இக்கதைகள் 70 களில் வந்திருக்க வேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டது அர்த்தமுள்ளது. ஒரு 50 ஆண்டுகளுக்குப் பிறகு காலம் எனும் தூசுக்குள் மறைந்து கிடந்த என்னை மீட்டெடுத்து இந்நூல் வெளிவர தூண்டுகோலாய் அமைந்தவர் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் எச்.எச். விக்கிரமசிங்க என்றும் குறிக்கின்றார். 50 ஆண்டுகளுக்கு முன் 1971 இல் கதைக்கனிகள் வெளியீட்டுக்காக கார்மேகம் அவர்கள் நன்றி தெரிவித்த அதே விக்கிரமசிங்கதான் என்பது கவனத்துக்குரியது.

இளம் பருவத்து நினைவுகளை அசைபோடுவதும், அதில் ஆழ்ந்து கிடப்பதும் மிகவும் பிடித்தமானதும், சுகமானதுமான விஷயம்தான். பிறந்து வளர்ந்த மண், ஓடித் திரிந்து விளையாடிய மண் பாதைகள், லயங்களுடன் லயங்களை இணைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்குப் பாதைகள், படிக்க வந்த பதுளை மாநகர், அதன் வீதிகள், கல்லூரிகள், திரையரங்குகள், உடன் படித்த நண்பர்கள் என எத்தனை நீண்ட நினைவுகள். மின்னலென மனதில் வெட்டி ஒளிரும் இளமைக்கால நினைவுகளை அசைபோட வைப்பவர் பதுளைக்காரரான தங்கவேலு, இந்தக் கதைகளின் கதாசிரியர்.

நான் படித்த பதுளை சென். பீற்றஸ் கல்லூரியில் சில காலமும், பின்பு ஊவா கல்லூரியில் மு. நித்தியானந்தனுடனும் கல்வி கற்றிருக்கின்றார். வல்வெட்டித்துறை தங்கவடிவேல் ஆசிரியரே தன்னை மாணவக் காலத்தில் எழுதத் தூண்டியவர் என்கின்றார். எழுபதுகளில் இன்னொரு பதுளைக் காரரான "ஒரு கூடைக் கொழுந்து" ராமையாவின் படம் மல்லிகையின் முகப்பில் வெளிவந்தபோது அட்டைப் படக் கட்டுரையை எழுதியவர் தங்கவடிவேல்தான்! சினிமாத்தனமான கதைகள் எழுதக்கூடாது, வாசகனை சிந்திக்க வைக்கும் கதைகளைப் படைக்க வேண்டும் என்று தன்னை சரியான தடத்திலிட்ட கந்தே கெதர தையற் கலைஞரான சதாசிவத்துக்கும் நன்றி கூறுகின்றார் நூலாசிரியர்.

கந்தே கெதர என்றதும் சார்னியா தமிழ் மகா வித்தியாலயமும் அதில் ஆசிரியப் பணியாற்றிய யோ. பெனடிக்ட் பாலன் நினைவுகளும் மனதை நெகிழ வைப்பவை. யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த யோ. பெனடிக்ட் பாலன் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியரான பிறகு 10 வருடங்கள் மலையகத்தில் ஆசிரியப் பணியாற்றினார். அதிலும் கந்தே கெதரவை உள்ளடக்கிய சார்ணியா தமிழ் வித்தியாலயத்தில் 1964 இல் இருந்து 1969 வரை ஆசிரியராக இருந்துள்ளார். இந்த மலையக அனுபவங்களே இந்த மக்கள் மீதான பரிவையும், பாசத்தையும் ஏற்படுத்த இவர்கள் மேல் ஏவி விடப்படும் அராஜகத்துக்கு எதிராகத் தனது படைப்புக்கள் மூலம் குரல் கொடுக்க முடிந்தது. 1960 இல் சென்னை பாரி நிலையம் வெளியிட்ட இவருடைய "சொந்தக்காரன்" நாவல் மலையக நாவல் வரலாற்றில் தனி இடம் பெற்றது.

தையற்கலைஞர் சதாசிவம் பற்றிய பிரஸ்தாபம் எனக்கு தையற்கலைஞர் மு.வே.பெ. சாமியை நினைவு படுத்தியது. பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சாமி இதழ்கள் வெளியீடு, நாடகம் மேடையேற்றுதல், எழுத்து, பேச்சு என இந்த மக்களின் உயர்வுக்காக ஓடித்திரிந்தவர். பதுளை லோவர் வீதியில் தையற் கடை வைத்திருந்தார். முன்னேற்றப் பண்ணை என்னும் பதிப்பகம் அமைத்து நூல் வெளியிட முயற்சித்தார். 1962 இல் "யார் கொலைகாரன்" என்னும் மு.வே.பெ. சாமியின் சிறு நாவல் பதுளை முன்னேற்றப்பண்ணை வெளியீடாக வந்திருந்தது. 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் கொழும்பு பழைய சோனகத் தெருவில் தையற்கடை வைத்திருந்தார். 83 இல் இடம்பெற்ற கலவரத்தின் போது எல்லாவற்றையும் இழந்து நிற்கதிக்கு ஆளானார். அகதிகளுடன் அகதியாக யாழ்ப்பாணம் சென்றவர், 1983 களின் பின் பிறந்த ஊரான பதுளை வந்து 1996 இல் மரணமானார். எழுத்து எப்படி சாவதில்லையோ அதேபோன்று எழுத்தாளனும் சாவதில்லை!

பதுளை ஊவா கல்லூரியில் படித்த மு. நித்தியானந்தனையும் இந்த நூல் என்னுரையில் நினைவு கூறுகின்றார் தங்கவேல். ஈழத்தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான நிகழ்வுகளில் முக்கியமான ஒன்று பதுளையில் பிறந்த நித்தியானந்தனின் இலக்கிய உலக நுழைவு. ஊவாக் கல்லூரிக் கல்வி, பல்கலைக்கழக உயர்கல்வி, பேராசிரியர் கைலாசபதியுடனான உறவு, நெருக்கம், தோழமை, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவி, வைகறையின் உதயம், அவைக்காற்றுக் கலைக்கழகம், பாவேந்திராவுடனான இணைவு, யாழின் இன விடுதலைப் போராட்டமும், அரச அட்டூழிய நிகழ்வுகளும், பல்கலைக்கழக உயர் பீடத்தினுடனான முரண்பாடுகள், கைதாகி மட்டக்களப்புச் சிறையடைப்பும், புலிகள் நடாத்திய சிறையுடைப்பும், மேலைநாடுகளுக்கான புலம் பெயர்வு போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்வு அது.

மலையக மக்களைப் போலவே அடக்கியும், பேசப் படாமலும் மூலையில் கிடந்த மலையக இலக்கியத்தையும், அது குறிக்கும் மலையக மக்களையும் சர்வதேச அளவில் பேச வைத்தவர். அதற்காகப் பாடுபட்டு உழைப்பவர். தனது வைகறை மூலம் 1980 இல் நித்தியானந்தன் என்.எஸ்.எம். ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" சிறுகதைத் தொகுதியை வெளியிட்டிருக்காவிட்டால் இலக்கிய உலகம் அவரை என்றோ மறந்திருக்கும். ராமையா எழுதிய 14 சிறுகதைகளில் 12 கதைகளை உள்ளடக்கிய அவருடைய ஒரே ஒரு நூல் "ஒரு கூடைக் கொழுந்து". 1990 செப்டம்பரில் ராமையா மரணமானதன் பின் எச்.எச். விக்கிரமசிங்க ஒரு மீள் பதிப்பையும் வெளியிட்டார்.

தோண்டத் தோண்ட மேலெழும் இலக்கிய நினைவுகளைத் தூண்டிவிடும் குறிஞ்சித் தங்கம் க. தங்கவேலு அவர்களை எழுத்து வட்டத்துக்குள் மீட்டெடுக்கும் விக்கிரமசிங்க அவர்களுக்கும், என்னிடமும் ஒரு உரை எழுதிக்கேட்ட இந்நூலாசிரியருக்கும் எனது நன்றிகள்.

**தெளிவத்தை ஜோசப்**

தலைவர், மலைநாட்டு எழுதாளர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

கொழும்பு - இலங்கை

பதுளை கந்தகெதர கொல்லு மண்டித் தோட்டத்தில் 20-10-1947 இல் பிறந்து புதுவாழ்வு காணுவதற்காகத் தாயகம் திரும்பி தற்போது புதுக்கோட்டையில் வாழும் நூலாசிரியா தங்கவேலு அவர்களின் கைவண்ணத்தில் உருவான இச்சிறு கதைத்தொகுப்பையிட்டு அவருக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீண்ட காலமாகவே மலையக எழுத்தாளர்களின் வாழ்வுப் பணியும், அவர்தம் எழுத்துக்கள் என்பவற்றை ஆவணப்படுத்தி அரும் பெரும் பணி ஆற்றிவரும் நூல் வெளியீட்டாளரும், சிரேஸ்ட பத்திரிகையாளருமான எச்.எச். விக்கிரமசிங்கவின் முயற்சியில் தங்கவேலு அவர்களின் இவ் இலக்கியப்படைப்பு தமிழ் கூறும் நல்லுலகின் கரங்களுக்கு இன்று கிட்டியுள்ளது.

தங்கவேல் பிறந்த மண் பதுளை கொல்லுமண்டித் தோட்டம், எனது பிறப்பிடமும் பதுளை. ஊவா மாகாணத்தின் இலக்கிய வரலாற்றை நுணுகி நோக்கினால் மலையக மற்றும் தேசிய இலக்கிய வளர்ச்சிக்கு பெரும்பங்கினை வழங்கியதில் அதன் படைப்பாளர்களுக்கு ஒரு பெருஞ்சிறப்புண்டு. அப்பங்களிப்பில் தங்கவேலு அவர்களுக்குத் தனிச் சிறப்பான ஓரிடம் உண்டு என்பதை இச்சிறுகதைத் தொகுப்பு பிரதிபலிக் கின்றது. சிறுகதை எழுத்தாளர் ஜோசப் அவர்கள் தமது சிறுகதைகளின் மூலம் தமது ஊரான தெளிவத்தைக்கு உலகளாவிய பெரும் பெயரை ஈட்டிக்கொடுத்தது போன்று தங்கவேலு தமது பிறந்த இடமான கொல்லுமண்டித் தோட்டத்தை உலகளாவிய தமிழ்ச் சிறுகதை அரங்கிற்கு இட்டுச் சென்று புகழ் மணக்கச் செய்கின்றார்.

தங்கவேலு அவர்கள் புலம்பெயர்ந்து சென்று தமிழகத்தில் புதுவாழ்வைத் தொடங்கியிருந்தாலும் அங்கும் அவரது இலக்கியப் பணி தொடர்கின்றது. தான் பிறந்த மண்ணையும் அதில் அவலத்துடனும் சுரண்டப்பட்டு விளிம்பு நிலையிலும் வாழ்ந்து வரும் மக்கள் பற்றிய வாழ்வியல் நிலைமைகளைத் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகளுக்குப் பொருளாகக் கொண்டு எழுதிய சிறுகதைகளே இவை. ஓரிலக்கிய வகை என்ற முறையில் அது வீழ்ச்சி காணும் ஒரு படைப்பிலக்கியம் எனச் சொல்லப்பட்டாலும் தமது சொல்லாற்றல் மற்றும் கலைநேர்த்தியான படைப்புகளால் சிறுகதை வளர்ச்சிக்குத் தங்கவேலு போன்ற பல மலையகப் படைப்பாளிகள் உரமூட்டி வந்துள்ளனர். இன்றுள்ள மலையகப் படைப்பாளிகளில் நன்கு தூக்கலாக, தனித்துவமான இடத்தை இலக்கிய உலகில் கைப்பற்றிக் கொண்டவர்கள் சிறுகதைப் படைப்பாளிகளே எனலாம். இவ்வகையில் தங்கவேலு வீரகேசரி, தினபதி ஆகிய பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தார். தாயகத்தின் வாழ்வியல் சிக்கல்கள் இவரது இலக்கியப் பயணத்துக்குத் தடையாக அமைந்திருந்தன என்பது சோக வரலாறு.

அங்கும் தனது படைப்பாற்றலை மீட்டெடுத்து, புலம் பெயர்ந்த நிலையிலும் தன் மக்களைப் பற்றிச் சிந்தித்து இலக்கிய பணியாற்றி வரும் அவருடைய பணியைப் பெரிதும் பாராட்டு கின்றோம். இவர் போன்ற பல இலக்கிய சமூக ஆளுமைகளை மனிதாபிமானமற்ற ஒப்பந்தங்களின் காரணமாக மலையகம் தொலைத்து விட நேர்ந்தது என்பது மலையக வரலாற்றில் மிக நெருடலான ஒரு துன்பியல் கட்டமாகும்.

இலக்கிய உயிர்ப்புடன் தங்கவேலு அவர்கள் இச்சிறுகதைத் தொகுப்பினூடாகத் தமிழ்ச் சிறுகதை அரங்கிற்கு மீள்வருகை தந்து எமது மேலான பாராட்டைப் பெறுகின்றார்.

பேராசிரியர் **சோ. சந்திரசேகரன்**
கொழும்பு - இலங்கை.
01-07-2021.
Email: s.sanpha44@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உங்களிடம் சில நிமிடங்கள்...

நீங்கள் இந்தச் சிறுகதைத் தொகுப்பிற்குள் புகுமுன், உங்களிடம் சில வார்த்தைகள்.

இந்தக் கதைகளின் நிகழ்களம், நிகழ்காலம் எத்தகையது, எந்தச் சூழ்நிலைகளைக் கொண்டிருந்தன என்பதைச் சிறிதளவாவது புரிந்து கொண்டால்தான், இந்தக் கதைகளின் கதாபாத்திரங்களை நீங்கள் நன்கு உள்வாங்கிக் கொள்ள முடியும்.

இக்கதைகள் 1970-ம் ஆண்டுகளில் வெளி வந்திருக்க வேண்டும். சூழ்நிலைத் தாக்கங்களால் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னால் வெளிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. இக்கதைகள் வெளிவர தூண்டுகோலாய் இருப்பவர், மலையகத்தின் மூத்த பத்திரிகையாளரும் 1960களில் முற்பகுதியில் மலையகத்தின் எழுச்சி நாயகன் இர. சிவலிங்கம் அவர்களின் பாசறையில் வளர்ந்த வருமான மலையக அரசியல், கலை இலக்கிய செயற்பாட்டாளர் திரு. எச்.எச். விக்கிரமசிங்க அவர்கள். காலமென்ற தூசுக்குள் அமிழ்ந்து, புதைந்து போயிருந்த என்னை, இருப்பிடத்தை மிகவும் சிரமப்பட்டு, கண்டறிந்து, என்மீது படர்ந்திருந்த தூசுகளைத் தட்டி, அகழ்ந்து, மீட்டெடுத்து வெளிக்கொண்டு வந்த அவருக்கு நன்றி. மேலும் எனது கதைகளிலொன்றைத் தந்துதவிய தற்போது லண்டனில் வசித்து வருபவரும், எனது பள்ளிக்கூட நண்பரும், சமூக வரலாற்று ஆய்வாளரும் மேனாள் சிரேஷ்ட பொருளிய விரிவுரையாளருமான ஈழத்து மலையக இலக்கிய செல்நெறி திரு. மு. நித்தியானந்தன் அவர்களையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது. அவருக்கும் எனது நன்றிகள்.

1970ம் ஆண்டிற்கு முன்னர், இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் வாழ்ந்து, தங்களின் கடும் உழைப்பால் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தங்களை வரித்துக் கொண்ட மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதைகள்தான் இவை.

இன்று நாம் பேசுகிற தொப்புள் கொடி உறவுகள் என்று சொல்லிக் கொள்ளும் இலங்கைத் தமிழர்கள் இரண்டு பிரிவினர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒரு பிரிவினர், 1700-1800 ஆண்டுகளில், வெள்ளையர்களால், இலங்கையின் மலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளை வெட்டியழித்து, தேயிலைச் செடிகளையும், ரப்பர் மரக்கன்றுகளையும், கோப்பிச் செடிகளையும் பயிர் செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட நம் முப்பாட்டன்களினதும் முப்பாட்டிகளினதும் வழித்தோன்றல்கள். இவர்களின் வாழ்க்கை, எதிர்பார்த்துச் சென்றது போல் மலர் படுக்கைகளாக இருக்கவில்லை. மாறாக, போக்குவரத்து வசதிகளின்றி, பல மைல்களைக் கால்நடையாக நடந்து, கடந்து, தாங்கள் பணிபுரிய வேண்டிய இலக்குகளையடைவதற்குள், நோய் வாய்ப்பட்டு, பட்டினியாலும், முதுமைத் தளர்ச்சியினாலும் மரணித்தவர்கள் தவிர எஞ்சியவர்கள், தாங்கள் வேலை செய்ய பணிக்கப்பட்ட இடங்களை கடுஞ் சிரமத்திற்குப் பின் அடைந்து, கடுங்குளிரில் உடல் நடுங்கி, எரிக்கும் வெயிலில் உடல் கருகி விஷப் பாம்புகளாலும், பூச்சிகளாலும் கடியுண்டு, அடிமைகளாய் வேலை வாங்கப்பட்டனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலி அரை வயிற்றுக் கஞ்சிக்கே போதுமானதாக இருந்தது. காலப்போக்கில் அரசியல் மாற்றங்களால் அலைக்கழிக்கப்பட்டு, பூர்வகுடிகள் நாங்கள் தான் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிங்களவர்களின் மிருகத்தனமான தாக்குதல்களுக்கு ஆளாகி இன்றும் மூன்றாம் தர பிரஜைகளாக வாழ்ந்து மடிந்து கொண்டிருப்பவர்கள்.

இரண்டாவது பிரிவினர் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள். இலங்கை சிங்களவர்களின் ஒரு தலைப்பட்சமான பேயாட்சியை எதிர்த்து, சுதந்திர மக்களாக வாழ வேண்டுமென்ற தணியாத தாகத்துடன் தனி ஈழத்திற்காகப் போராடுபவர்கள். இவர்களைத்தான் இன்று நம்மவர்கள் "தொப்புள் கொடி உறவுகள்" என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள். இவர்கள்தான் நமது தொப்புள் கொடி உறவுகளா? இன்றும் கிராமங்களில் உங்களின் அண்டை அயலார் இல்லங்களில் வசிப்பவர்களின் உறவுகள் இலங்கை மலையகப் பகுதிகளில் வாழ்வதை அறிய முடியும். உங்களின் உறவுகள் அல்லது உங்கள் கிராமங்களில் வசிப்பவர்களில் சிலர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களாக இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இன்றும் மலைத்தோட்டங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தானே நமது தொப்புள் கொடி உறவுகள்? இவர்களுக்காக நாம் ஏதேனும் செய்ததுண்டா? இவர்களின் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்று சிந்தித்தாவதுண்டா? முற்றிலும் நம்மால் புறக்கணிக்கப்பட்ட மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள். அந்த மக்களில் சிலரை உங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கதைகளில் அறிமுகப்படுத்தியுள்ளேன். இவர்களைச் சந்திப்பவர்களின் இதயம் ஒரு விநாடியேனும் அம்மக்களுக்காக நெகிழ்ந்திடுமாயின், அது ஒன்றே இக்கதைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாக ஏற்று மகிழ்வேன்.

இந்தக் கதைகள் கருவாகி உருவாக காரண கர்த்தாவாக இருந்த, வல்வெட்டித் துறையைச் சேர்ந்த என் ஆசான், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. தங்கவடிவேல் ஆசிரியர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்தான் என்னை கையைப் பிடித்து, பரபரவென இழுத்துக் கொண்டு வந்து எழுத்துலகிற்கு தள்ளிவிட்டு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தவர்.

பொதுவெளியில் 'தினபதி' என்கிற நாளேட்டில் எனது இரண்டாவது சிறுகதையான "உலகத்திற்கு விடிகிறது...!" என்ற தலைப்பில் எழுத்தாளர் யோ. பெனடிக்ற்பாலனின் சிபாரிசில் வெளிவந்தது. அவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் 'நித்தி' அவர்கள் தனது பல்வேறுபட்ட இலக்கிய செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த போதம் எனது கதைகளை மதிப்பீடு செய்து முன்னுரை வழங்கியுள்ளார். அவருக்கும், இலங்கை மலையக எழுத்தாளர் மன்றத்தலைவரும், சிறுதை, நாவலாசிரியருமான திரு. தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியுள்ள பேராசிரியர் திரு. சந்திரசேகரனுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆரம்பத்தில் எழுதிய கதைகளை படித்துப் பார்த்துவிட்டு, சினிமாத்தனமான கதைகளாக எழுதாதீர்கள். வாசகனை சிந்திக்க தூண்டும் கதைகளாக, படைப்பிலக்கியமாக எழுதுங்கள் என்று என்னைச் செதுக்கியவர், 'கந்தே கெதர' என்ற ஊரில் தையற்கலைஞராக தொழில் செய்து கொண்டிருந்த திரு. சதாசிவம் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

**க. தங்கவேலு**
பிளாட் எண். 6
அபிராமி நகர்,
திருக்கோகர்ணம் அஞ்சல்,
புதுக்கோட்டை - 622002.
அலைபேசி : 9942025295

இவண்

**"குறிஞ்சித் தங்கம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மனம் விழித்தபோது | 31 |
| 2. | கறிவேப்பிலை | 42 |
| 3. | சின்னக் கங்காணிக்கு அப்படியும் ஒரு ஆசை...! | 50 |
| 4. | யாகாவாராயினும் தன் நிறைகாக்க... | 56 |
| 5. | உரம் | 70 |
| 6. | உலகத்திற்கு விடிகிறது...! | 75 |
| 7. | நீர்க்கோலம் | 84 |
| 8. | நிரந்தர அமைதியைத் தேடி... | 98 |
| 9. | வாழ்வின் விளிம்பிலே அவள்...! | 117 |
| 10. | இவர்களும் திருடர்களே! | 124 |
| 11. | மனித உருவில்... | 134 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மனம் விழித்தபோது...

"அப்பா, மாஸ்ரர் பத்து சதம் சல்லி கொண்டார சொன்னாருப்பா."

செல்லையாவின் மூன்று புதல்வர்களும் ஏக காலத்தில் கோரஸ் பாடினார்கள்.

ஸ்தோப்பில் போடப்பட்டிருந்த சிறிது உயரமான திண்ணையில் உட்கார்ந்து, தேயிலைச் செடிகளுக்குள் வேலை செய்யும்போது ஆடைகள் கிழிந்து போகாவண்ணம் இடுப்பில் கட்டிக் கொள்ளும் பீத்த படங்கை (கிழிந்த மெல்லிய சணல் சாக்கு) தைத்தபடி செல்லையா கேட்டான்...

"ஏஞ்சல்லி இப்ப ஒங்களுக்கு?"

"மாஸ்ரர் தமுழ் தின விழான்னாரு. எல்லாரும் சல்லி (காசு) கொண்டாரனுமாம். சல்லி கொண்டாராட்டி அடிப்பேன்னாரு."

நாளைக்கு சல்லி கொண்டு போகவில்லையென்றால் அந்தப் பிஞ்சுக் கைகளில் மாஸ்ரரின் பிரம்பு சுளீர் சுளீரென விழும்போது ஏற்படப் போகும் வேதனையை இப்பொழுதே அனுபவிப்பதைப்போல குழந்தைகள் கெஞ்சுகின்றனர்.

"போங்கடா... ஸ்கூலுக்குப் போகாம எல்லாம் வூட்ல கெடங்க. சல்லி சல்லின்னு ஏன் உசுர வாங்குறீங்க? ஏந்தலை தாண்டா மிச்சமா இருக்கு. இந்த மாசக் கடசியில எவங்கிட்ட சல்லி இருக்கும்? மனுசன் திங்க இல்லாம சாகிறான். இவனுங்கள் வெலா நடத்துரனுகளாம், வெலா."

அவன் ஆத்திரப்பட நியாயம் இருந்தது. மாதம் முப்பது நாளும் அரை வயிற்றுக் கஞ்சியோடு மாடாய் உழைத்து, மாதக் கடைசியில் முப்பது சதம் கூட கையில் இல்லாத துர்பாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் துயரப்படும்போது விழாவென்றும், விளையாட்டுப் போட்டியென்றும் காசுகளை கேட்டு நச்சரிக்கும்போது...

அவன் ஆத்திரப்படாமல் எப்படி இருக்க முடியும்?

பகலில் இருந்து தலை விண் விண்ணென்று தெறிக்கிறது. வாசற்படியில் உரைத்து, நெற்றிப் பொட்டில் தேய்த்துக் கொள்ள ஒரு வெள்ளைப் பூண்டு இல்லை.

அரிசி போட்டு நான்கு நாட்களாகி விட்டன. வீட்டில் ஒரு பொட்டு அரிசி இல்லை. வேலை முடிந்த பிறகு நாட்டுக்குப் போய் அப்புஹாமியின் சேனையில் "முள்ளுப் போட்டு" கொடுத்து விட்டு, அதற்கு கூலியாக வாங்கிக் கொண்டு வந்த மையம் பூத்த மரவள்ளிக்கிழங்கை அவன் மனைவி வெட்டி தோல் உரித்துக் கொண்டிருக்கிறாள். இந்த கிழங்கை இரவிலும் நாளைக் காலையிலும் வைத்துச் சமாளித்துக் கொள்ளலாம். நாளை பகலுக்கு என்ன செய்யலாம்? அரிசி போட இன்னும் மூனு நாள் இருக்கு. அது வரைக்கும்?

ஈர தேயிலை மிலாறை (சுள்ளி) அடுப்பிற்குள் தள்ளி பூத் பூத் தென்று ஊதுகிறாள்.

கரிகோச்சி என்ஜினிலிருந்து வருவது போல அடுப்பிலிருந்து கரும் புகை "புகு புகுவென" சுழன்று எழும்புகிறது.

"அறைக்கதவு" திறக்கப்படும் சத்தம் கேட்டு செல்லையா நிமிர்ந்து பார்க்கிறான்.

வாசற்படியில் ஒரு புதிய உருவம்.

இளமை மினுமினுப்புடன் வாலிப உருவம். யார் அது?

செல்லையாவிற்கு திகைப்பாய் இருக்கிறது. கண்களை சுருக்கி உறுத்துப் பார்க்கின்றான். 'அட ராமு'.

"வாங்க தம்பி. சொகங்களா? எப்ப வந்தீங்க?"

"நல்ல சொகங்க. நேத்துதான் வந்தேன்." - ராமு பதில் சொல்லியபடியே உள்ளே வந்து, தான் வைத்திருந்த அந்த வண்ணத் துவாலை (கைத்துண்டு)யை திண்ணையில் விரித்து உட்காருகிறான்.

ராமு கொழும்பிலிருந்து நேத்துதான் வந்தான். பணியலயத்து சுப்பனின் மகன். சுப்பனுக்கு ஏழெட்டுப் பிள்ளைகள் குஞ்சும் குழவனுமாக மூத்தவன்கள் இரண்டு பேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் பேர் பதிந்து வேலை செய்கிறார்கள். அவர்கள் ரெண்டு பேரும் கலியாணம் முடித்து குழந்தை குட்டியோடு வெவ்வேறு குடும்பமாக வாழ்கிறார்கள்.

தங்களைப் பெற்று வளர்த்தவர்களும் இருக்கிறார்கள் என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்படுவதில்லை. பற்றாக்குறை உறவையும் பாசத்தையும் எவ்வளவு கொடூரமாக துண்டித்து விடுகிறது? சின்னஞ் சிறுசுகளோடு அந்த முதுமை பெற்றோர் அடைகிற துன்பங்களும் துயரங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. அப்போது ராமு சுட்டிப்பையன். எல்லோரும் வேலைக்குப்போன பிறகு லயங்களில் அவனது சாம்ராஜ்யம் தான் நடக்கும். யாருடைய தோட்டத்தில் மாங்காய் இருந்தாலென்ன? ராமு சாப்பிட்டு மிஞ்சியது தான் மரத்துக்காரனுக்கு. எந்த தோட்டத்தில் கரும்பு இருக்கட்டும். அது ராமுவின் வாயில் இனிக்காமல் இருக்காது. எங்கேயாவது பப்பாளியும் இருக்கிறதா? அங்கே தாமு தயக்கமின்றி போய் வருவான். சின்னப் பயல்கள் தலையில் கட்டோடு திரிகிறார்களா? அது ராமுவின் "கெட்ட புள்ளால்" குருவிக்கு வைத்த குறி அவர்களின் தலையில் தப்பாமல் பட்டிருக்கும். ஒவ்வொரு நாளும் அந்தியில் எல்லோரும் வேலை விட்டு வந்த பிறகு லயங்களில் பெண்கள் காரசாரமாக ஒருவரையொருவர், அவரவர்களின் மறைமுக ரகசியங்களைக் கூறி விமர்சித்துக் கொள்கிறார்களா? அது நிச்சயமாக ராமு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகத்தான் இருக்கும்.

இத்தனை களேபரங்களுக்கும் காரணமான ராமு ஒருநாள் வீட்டில் சண்டை பிடித்துக் கொண்டு ஓடிப்போனான்.

கொழும்பிலிருந்து வந்திருந்த முருகேசனுடன் ஓடிப்போய் விட்டான் என்பது நாளைந்து நாட்களுக்குப் பின்பு தான் எல்லோருக்கும் தெரிய வந்தது. கால ஓட்டத்தில் பெரும்பாலும் அவனைப் பற்றிய நினைவுகள் மறந்து போய் விட்டிருந்தன.

சுமார் ஐந்து ஆறு வருடங்களுக்குப் பின் இப்போதுதான் வந்திருக்கிறான். இந்த ஐந்தாறு வருடங்களில் ராமு என்னமாய் வளர்ந்திருக்கிறான், அவனது அப்பனைப் போல. என்னமாய் கொழுத்திருக்கிறான் தேயிலைத் தோட்டத்து கண்டக்டரைப் போல. பரட்டைத் தலையுடன், குண்டிப்புறம் கிழிந்து தொங்கும் கலிசானை (சார்ட்ஸ்) இடது கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றுடம்போடு மலைக்கு தேத்தண்ணி கொண்டு வந்த பய ராமுவா இவன்? அப்பப்பா என்ன மாற்றம்? "டேய் படவா" என்று கூப்பிட்டு, அவனது குறும்புச் செயல்களுக்காக எத்தனையோ நாள் தூஷணத்தில் ஏசிய செல்லையாவின் வாய் கூட, இப்போது அவனது தோற்றத்தின்மீது ஏற்பட்ட ஒரு மரியாதைப் பயத்தோடு, "எப்ப வந்தீங்க தம்பி" என்று கேட்கிறது. இவ்வளவிற்கும் ராமுவின் வளர்ச்சி, அவனது தோற்றத்தில் ஏற்பட்டிருக்கும் பெரிய மாற்றமே காரணமாகிறது.

அறுபது ரூபாய்க்கு வாங்கிய கடிகாரத்தை MGR பாணியில் வலது கையில் கட்டிக்கொண்டு MGR படம் பதிக்கப்பட்ட பெனியன் வெளியில் தெரியும் வகையில் ஒரு நைலான் சேர்ட்டையும் போட்டுக் கொண்டு கொழும்பு IRC கணக்கில் வெள்ளை சாரத்தை (கைலி) கணுக்காலிற்கு மேல் ஒரு சாணுக்கு மேலே உயர்த்திக் கட்டிக் கொண்டு முகத்திலே கருகருவென வளர்ந்திருக்கும் மீசையை நேர்த்தியாய் மைனர் மீசையாய் வெட்டிக் கொண்டு....

"ஓ ராமு எவ்வளவு நல்லாயிருக்கிறார்?"

அவனைப் பார்க்கும் தோட்டத்து ஆட்களுக்கு உள்ளுக்குள் ஒரு பிரமிப்பு. இளசுகளுக்கு கொஞ்சம் பொறாமையும் எட்டிப் பார்த்தது. அவன் பேச்சிலே ஒரு மாற்றம். பேசுவதே ஒரு தனிப்பாணி.

"என்னவா கேக்குறீங்க? ஒரு நாளைக்கு நாற்பது அம்பது கொத்து உளுத்தையும் பருப்பையும் அரைச்சு முடிக்கிறன். அரவை கல்லைப் பார்த்தீங்கன்னா நீங்க வாயில விரல் வைப்பீங்க. இவ்வளவு பெரிசா இருக்கும்." அவன் எழுந்து இரண்டு கைகளையும் விரித்து, வட்டம் போட்டு காட்டுகிறான். நானும் போன புதுசுல கல்ல பாத்து நல்லா பயந்துட்டேன். பலகிட்டா ரொம்ப லேசு. சும்மா குளவிக்கல்ல புடிச்சா நெருப்புதான். அய்யா உட்கார்ந்தார்னா ஒரு டீப் கம்ப்ளீட்டு பண்ணிட்டுதான் எழும்புவாறு (தன்னையே அய்யா என்று சொல்லிக் கொள்கிறான்.) காலையில ஒரு வாட்டி. பெறகு மூனு மணிக்கு ஒரு வாட்டி வடைக்கு அரைக்கனும். அவ்வளவுதான் வேல. குளிச்சு கிளிச்சிட்டு சேட் மாட்டிக்கிட்டு, படத்திற்கு கெளம்பிடுவேன். இல்லாட்டி 'கோல்பேசில' போய் உட்காந்துட்டு, சுண்டலை வாங்கி அரைச்சுக்கிட்டு காத்து வாங்குவேன். கொழும்பு வாழ்க்கைனா வாழ்க்கைதான். இப்புடியா இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுமண்டி தோட்டத்தில கெடந்து வெயில்ல காய்ஞ்சி, மழையில நனைஞ்சி, குளிருல நடுங்கி, பூச்சி பட்டைக்கு பயந்து, நாள் முழுக்க ஔச்சி வயிற நெரம்ப திங்கிரதுக்கில்லாம கஸ்டப்படரோம்னு நெனஞ்சீங்களா? எந்த நேரமும் 'குசினி' (சமையலறை)யில டைட்தான். நாங்க தின்னு மிச்சந்தான் வெளியில யாவாரத்துக்கு..."

அவன் தன்னை சுத்தி உட்கார்ந்து கதை கேட்பவர்களுக்கு கொழும்பை சுவர்க்க லோகமாக சித்தரித்துக் காட்டுகிறான். கொழும்பு ஹோட்டல்களில் சமையலறை வேலையைப் போல உலகில் எந்த தொழிலுமே நமக்கு பொருத்தமானது இல்லை என அவன் உறுதிப்படுத்துகிறான்.

பின்னே என்ன? அஞ்சாறு வருசத்துக்கு முந்தி சீ! சீ! என பேர் வாங்கின ராமு சாப்பாடு தங்குமிடம் தவிர மாதம் (ரூபா 150/-) நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வாங்குரான்னா... கொழும்பு நிச்சயமாக சொர்க்கந்தான். கதை கேட்பவர்களுக்கு அதில் ஒரு துளியும் சந்தேகமில்லை. சுற்றி நின்று கதை கேட்ட சிறுவர்கள் நாங்களும் பெரியாளாய் வந்த பிறகு கொழும்புக்கு சைவ ஹோட்டலுக்குத்தான் போக வேண்டுமென மனதுக்குள் சங்கல்பம் செய்து கொள்கின்றனர். நன்கு படிக்க வேண்டும். நல்ல வேலைக்கு போக வேண்டும். இந்த கொத்தடிமை வாழ்க்கைச் சூழலில் இருந்து வெளியே வரவேண்டும் என்ற சிந்தனைக்கே அங்கு இடமில்லை.

செல்லையா யோசிக்கிறான்!

தனக்கும் ஏழெட்டு பிள்ளைகள். மூன்று ஆம்பிளைகளும் ஐந்து பொம்பிளைப் பிள்ளையளும். பெரிய புள்ளைகள்ள நாலு பேர் தவிர பதினொரு வயசில மாரியம்மா. இவளுக்கு அடுத்து ஒன்றரை வயது இளையவன் செல்வராசு. இவனுக்கு பிறகு இன்னும் இரண்டு பொடியன்கள்.

"ராமு, நம்ம செல்வராசையும் கொழும்புக்கு கூட்டிக்கிட்டு போய் ஒரு வேல வாங்கிக் குடுவே!"

ராமு கொழும்பை கரைச்சு குடிச்சுட்டு வந்திருக்கிறான். அவனுக்கு கொழும்பில் தெரியாதவங்க யாரும் இருக்க மாட்டாங்க. அவன் சொல்வதை மற்ற முதலாளி மாருங்க கேட்பாங்க. அவனால் எத்தனை பேருக்கும் வேலை வாங்கிக் கொடுக்க முடியும். செல்லையா முழு நம்பிக்கையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறான். அந்த நம்பிக்கையை சிதறடிக்க ராமுவுக்கு மனமில்லை. தன்னால் முடியாதே என தயங்கினால் தனது "கிரேட்" உடைந்து போகுமென மனதிற்குள் அச்சம் கொள்கிறான். 'ஓ, அன்றைக்கு ஒருநாள் ஒரு பொடியனுக்கு சப்ளையர் வேல தேடி அம்பாள் ஹோட்டலிற்கு போனபோது, சப்ளைக்கு ஆள் தேவையில்லை. எல எடுக்கவும் தண்ணி வைக்கவும் சின்ன பொடியன்கள் தேவையென அந்த ஹோட்டல் டீ மேக்கர் சொன்னானே! ஓட்டலுக்கு ஆள் தேவையாயென முதலாளிமாரைப் போய் முதலில் கேட்பது இல்லை. அந்த ஹோட்டல் டீ மேக்கரைத்தான் போய் விசாரிப்பது வழக்கம். டீ மேக்கர் அந்த ஹோட்டலிற்கு ஆள் தேவையென சொன்னால் மட்டுமே முதலாளியை தொடர்பு கொள்வார்கள். இதுதான் கொழும்பில் ஹோட்டல்களின் எழுதப்படாத விதி.

"ஓ. செல்வாவுக்கு மட்டுமல்ல, ஒங்க மாரியம்மாவுக்கும் ஒரு வேலை புடிச்சு குடுக்கிறேன். அங்கே ஒரு தெரிந்த மொதலாளி புள்ள பாத்துக்க (பேபி சிட்டர்) ஒரு புள்ளை வேணுமின்னு சொன்னாரு. மாரியம்மாவைப் பார்த்த பெறகுதான் அந்த நெனப்பே வந்துச்சு. ரொம்ப நல்லவுங்க. அவுங்க புள்ள மாரி பாத்துக்குவாங்க. மாசா மாசம் பத்து, பத்து ரூபாயா வீட்டிற்கு அனுப்பி வைச்சுருவாங்க. என்ன சொல்றீங்க?

செல்லையாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி!

மகனுக்கு வேலை கேட்கப் போய் மகளுக்கும் வேலை கிடைக்கிறதே! இப்போதைய சூழ்நிலையில் இரண்டு பேர்களின் சாப்பாடு மிச்சமாகிறதே! செல்லையா தம்பதிகளுக்கு ராமு ஒரு தெய்வமாக காட்சியளிக்கிறான். வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் திணறி, பட்டினியால் கிடந்து, துடிதுடித்து, அணு அணுவாய் செத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இரண்டு பிள்ளைகளுக்காவது இந்த சித்திரவதைகளிலிருந்து விடுதலை கிடைக்கப் போகிறதே என நினைக்கிறபோது அவர்களின் நெஞ்சம் மகிழ்ச்சியால் பூரித்துப் போகிறது.

ராமு தொடர்ந்தான்.

"நான் மொதல்ல செல்வாவைக் கூட்டிக்கிட்டு போறன். அங்க போய்ட்டு, அந்த மொதலாளிகிட்ட இன்னொரு வாட்டி கேட்டுகிட்டு, புள்ள வேணும்னாங்கன்னா ஒங்களுக்கு கடதாசி போடுறன். சல்லி (பணம்) கொடுப்பாங்க வழிச் செலவுக்கு. அதையும் ஒங்களுக்கு அனுப்பி வைக்கிறன். என்னைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுறீங்கன்னு கடுதாசி (கடிதம்) போட்டுட்டு ரயில்ல வாங்க. நா' கோட்டை டேசன்ல வந்த ஒங்கள பாத்து கூட்டிட்டு போறன், என்ன சரியா?"

ராமு செல்வாவோடு புறப்பட்டு போய்விட்டான்.

அடுத்த ஐந்தாவது நாள் இருபத்தைந்து ரூபா மணியார்டரும் கடிதமும் ராமுவிடமிருந்து வந்திருந்தன.

பதுளை போஸ்டாபிஸ்றகுப் போய் மணியோர்டரை பணமாக மாற்றுவது இவ்வளவு கஷ்டமாக இருக்கும் என செல்லையா விற்கு முன்பே தெரியாமல் போய் விட்டது. தெரிந்திருந்தால் தபால் ராமையாவை கூட்டி வந்திருப்பான். போஸ்டாபீஸ்சில் வேலை பார்ப்பவர்களை தோட்டத் தொழிலாளிகள் அனைவரும் தெரிந்து வைத்துக் கொள்ள முடியுமா, என்ன? அங்கு வேலை பார்ப்பவர்களில் யாராவது ஒருவர் சாட்சி கையெழுத்து போட்டால் மணியோர்டரை பணமாக மாற்றித் தருவதாகச் சொல்லி விட்டார்கள். யாரைத் தேடுவது? என்ன செய்வது? எப்படி மணியோர்டரை மாற்றிக் கொள்வது? குழம்பித்தான் போனான். ஐந்து ரூபாய் தருவதானால், தான் சாட்சி கையெழுத்து போடுவதாக ஒரு பியூன் செல்லனின் காதில் கிசுகிசுத்தான். முன்பின் பார்த்தறியாத அவன் செல்லையாவை நன்கு தெரியும் என சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, ஐந்து ரூபாயைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு சென்று விட்டான்.

செல்லையாவிற்கு மலைப்பாய் இருந்தது. காலையில் ஆறு மணிக்கே குளிரைத் தடுக்க துண்டைப் போர்த்துக் கொண்டு பெரட்டுக் களத்திற்கு (Parade ground) போய் பேர் (பெயர்) கொடுத்து விட்டு ஏழு மணிக்கெல்லாம் மலையில் ஏறி எரிக்கும் வெயிலில் உடல் கருகி, கொட்டும் மழையிலே சொட்டச் சொட்ட நனைந்து நடுங்கும் குளிரில் விரல்கள் விரைத்துப்போய் வலியெடுக்க, நாள் முழுதும் உழைத்தால் ஒருநாள் ஊதியம் 3 ரூபாய் 10 சதம் சம்பளமாக கிடைக்கும்.

ஒரு நிமிடத்திற்குள் ஒரு கையெழுத்தைப் போட்டு 5/- ரூபாய் சம்பாதித்து விட்டான் ஒரு பியூன்.

ஏன் இந்த வேறுபாடு என சிந்திக்க அவனால் இயலவில்லை. அதற்கு அவனுக்கு பழக்கமோ அவகாசமோ இல்லை.

'நாளைக்குப் புறப்படுகிறோம். நாளை மறுநாள் காலையில் எங்களை கோட்டை ஸ்டேசனில் சந்திக்கவும்' என எழுதப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஸ்ட்கார்டை தபால் பெட்டியில் போட்டுவிட்டு 'பீங்காரவ தவரனைக்கு' (கள்ளு, சாராயம் விற்குமிடம்) போய் தண்ணி போட்டுவிட்டு ஒரு 'ராத்தல் பானை' வாங்கி அக்குளில் இடுக்கிக் கொண்டு அலுக்கொல்லை ஏற்றப்பாதையில் ஏற ஆரம்பித்தான்.

மறுநாள்...

மாரியம்மாளுடன் பதுளை ரயில்வே ஸ்டேசனுக்கு செல்லும் பஸ்ஸில் பயணம் செய்கிறான் செல்லையா. வெற்றிலை எச்சிலை வெளியே துப்ப வசதியாக யன்னலோரம் உட்கார்ந்து கொண்டான். முன் சீட்டில் யாரோ ஒரு "பணக்கார அம்மாவும்" மாரியம்மாளின் வயதில் ஒரு பிள்ளையும் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்த சிறுமி அந்த அம்மாளின் பிள்ளையாக இருக்க முடியாது. கலைந்த தலை, கிழிந்து தைத்த சட்டை, வாடிச் சேர்ந்த முகம். முகத்தில் செழுமையான "பணக்கார களை" இல்லையே. அந்த அம்மாளின் வேலைக்கார சிறுமி என முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருக்கிறது.

மலையகத்தின் கரடு முரடான பாதையில் முரட்டுத்தனமாக பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது. அதன் குலுக்கலில் பிரயாணிகளின் வயிறுகள் குலுங்கிக் கொண்டிருந்தன.

"குவாக்" அந்த வேலைக்கார சிறுமி யன்னலுக்கு வெளியில் தலையை நீட்டி வாந்தி எடுக்கிறாள்.

பக்கத்தில் அமர்ந்திருக்கும் எஜமானியின் முகத்தில் அருவருப்பு அப்பிக் கிடக்கிறது. கண்களில் நெருப்பு ஜூவாலை யாகிறது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றன. வாந்தி யெடுக்கும் குற்றத்திற்காக அந்தச் சிறுமியை திட்டித் தீர்க்கிறாள். சிறுமியின் உச்சந்தலையில் 'நச்சென' ஒரு குட்டு. சிறுமி நிலை குலைந்து போகிறாள். வலியின் வேதனை ஒருபுறம். வாந்தி எடுக்கும் உபாதை ஒருபுறமாக அவள் தேம்பித் தேம்பி அழுதபடியே மீண்டும் வாந்தியெடுக்கிறாள். செல்லையாவின் மனம் பதறுகிறது. 'டீசல்' மணம் அவளுக்கு ஒத்து வரவில்லை. அதற்கு அந்தப் பிள்ளையை திட்டுவதா? தலையில் ஆத்திரத்தில் குட்டுவதால் வாந்தி நின்று போயிடுமா? என்ன?

வாந்தியெடுப்பது தன்னுடைய குழந்தையாயிருந்தால் அந்த எஜமானி என்ன செய்திருப்பாள்? இப்படித்தான் திட்டுவாளா? அல்லது குட்டுவாளா? அதே நேரத்தில் வாந்தி யெடுத்த சிறுமியின் பெற்றவள் பக்கத்திலிருந்திருந்தால் எவ்வளவு ஆதரவைக் காட்டியிருப்பாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓ. அவள் வேலைக்காரி. வேலைக்காரிக்கும் எஜமானிக்கும் உள்ள தொடர்பு அப்படித்தானிருக்கும்.

ஸ்டேசனில் பஸ் நிற்க, அவர்களும் இறங்குகிறார்கள். செல்லையாவும் தன் மகளோடு இறங்கி ஸ்டேசனுக்குள் போய் கொழும்பிற்கு இரண்டு பிரயாணச் சீட்டுகளைப் பெற்று வேட்டியின் ஒரு முனையில் முடித்து, இடுப்பில் சொருகி பத்திரப்படுத்திக் கொள்கிறான்.

ஜிகு ஜிகுவென புகையைக் கக்கிக்கொண்டு ட்ரெயின் வந்தது. எல்லோரும் பெட்டிக்குள் ஏறிச் சென்று இடம் பார்க்கிறார்கள். செல்லையாவும் மாரியம்மாளும் ஒரு கம்பார்ட்மெண்டில் இடம் கிடைத்து உட்கார்ந்து கொள்கிறார்கள். இவர்கள் இருக்கும் கம்பார்ட்மெண்ட்டை கடந்து அந்த எஜமானியும் அவளுக்கு பின்னால் தனது சக்திக்கு மேற்பட்ட பாரமுள்ள சூட்கேஸை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு அந்த சிறுமியும் போகிறார்கள். அடுத்த கம்பார்ட்மெண்டில் அந்த எஜமானிக்கு மட்டும் ஒரு இடம் கிடைத்து உட்கார்ந்து கொள்கிறாள். சிறுமி இடமின்றி நின்று கொண்டிருக்கிறாள்.

அவளைப் பார்க்க செல்லையாவிற்கு பரிதாபமாக இருக்கிறது.

“இங்கவாம்மா குழந்தை. இதுல உட்காரு”. அவன் சற்று நெருக்கி உட்கார்ந்து கொண்டு அவளுக்கு உட்கார இடம் கொடுக்கிறான். ஆதரவு பொங்கும் செல்லையாவின் குரலைக் கேட்டதும் அவள் முகம் என்னமாய் மலர்கிறது? வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறாள். மாரியம்மாளைப் பார்த்து நட்புடன் சிரிக்கிறாள்.

“எங்கேம்மா போறீங்க?”

“கண்டிக்கு போறோங்கையா.”

“அந்த அம்மா யாரு?”

“அந்த அம்மா கண்டியில இருக்கிறாங்க. நா அவுங்க வீட்ல வேல செய்யுறேன்.”

“இங்கே எங்க வந்தீங்க?”

“கந்தே கெதரயில இருக்கிற அவுங்க மக வூட்டுக்கு.”

“ஒங்க அம்மா அப்பாவெல்லாம் எங்க இருக்காங்க?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூண்டுலோயாவில." கேள்விக்கு பதில் சொல்லியபடியே அவனையும் ஒரு கேள்வி கேட்டு வைக்கிறாள்.

"நீங்க எங்க போரீங்க?"

"நாங்க கொழும்புக்கு போறோம். அங்கே ஒரு வீட்ல வேலைக்காக ஏ மவள கூட்டிக்கிட்டு போறேம்மா." அத்துடன் நிறுத்திக் கொள்ள அவனுக்கு மனம் வரவில்லை. தனது மகளை வேலைக்காக கொண்டு விடப்போகும் வீட்டில் உள்ளவர்கள் அந்தப் பிள்ளையின் எஜமானியைப்போல் கொடுமையானவர்கள் இல்லையென அவளுக்கு சொல்ல நினைக்கிறான். அவ்வளவும் ராமுவின் பேச்சிலிருந்து கணித்துக் கொண்ட சில யூகங்கள், அவ்வளவுதான்! அவர்களை நல்லவர்களாகக் கற்பனை செய்து பேசுவதன்மூலம் தன் மனதை ஏமாற்றிக் கொள்ளப் பார்த்தானோ அல்லது அந்த பிஞ்சு உள்ளத்தை ஏமாற்ற நினைத்தானோ தெரியவில்லை. அவன் தொடர்ந்தான்.

"அவர்கள் ரொம்ப நல்லவர்களாம். குழந்தையை பார்த்துக்கனும். மத்த நேரத்தில் சின்ன சின்ன வேலைகள்தானாம். நல்ல சாப்பாடு தருவாங்க. உடுப்பு தருவாங்க, இந்தப் புள்ளய அவுங்க சொந்த புள்ளய மாதிரி பாத்துக்குவாங்கலாம்." மேலும் தொடர்ந்து பேச ராமுவுக்கு தெரியவில்லை. அவர்களைப் பற்றிய பொய் கற்பனையை தொடர முடியவில்லை. முகத்தில் வலிய ஏற்படுத்திக் கொண்ட ஒரு போலிப் பெருமிதத்தோடு அந்தச் சிறுமியைப் பார்த்தான்.

"இப்படித்தாங்க எங்க அய்யாவும் சொல்லி என்னை அனுப்பினாங்க. நான் மூணாவது வரைக்கும் தோட்டத்து ஸ்கூல்ல படிச்சேன். எனக்கு படிக்க ரொம்ப ஆசைங்க. படிச்சு "நோனா" வாகனும்னு ஆசைங்க. எங்கப்பா விடல. போய் சின்னப்புள்ளய வச்சுக்கிட்டு, அதுங்கிட்ட வெளையாடிக்கிட்டு இருக்க வேண்டியதுதான். ரவையில படிச்சுக் குடுப்பாங்க. ஒன்னைய அவுங்க புள்ளய மாதிரி பார்த்துப்பாங்கன்னுதான் என்னையும் கொண்டு போய் விட்டாங்க. அங்கே போனா புள்ளைய பாத்துக்கிற வேலை மட்டுமல்ல, எல்லா வேலயும் நாந்தான் செய்யனும். கெணத்துல இருந்து தண்ணி அள்ளனும். அவுங்க உடுப்பெல்லாம் துவைக்கனும். வீடு கழுவனும். வீடு உள்ளேயும், வீட்டைச் சுற்றியும் கூட்டனும். கொஞ்சம் அசந்து உக்காந்திட்டா அந்த அம்மா தலையில குட்டி வேல சொல்லுவாங்க. பாத்திரமெல்லாம் வௌக்கி வைக்கனும்...." அவள் குரல் தழுதழுத்தது. "...வூட்ல எங்கம்மாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவும் செய்யுற வேலையெல்லாம் இங்கே நாந்தாஞ் செய்யுறன். ராவுல பத்து மணிக்கு மேலதான் தூங்கப் போகனும். காலையில நாலு மணிக்கெல்லாம் எழுப்புவிட்டுருவாங்க. நிம்மதியா தூங்கக் கூட முடியாது. ஒருநாள் கை தவறி வீதர் (கிளாஸ்) தம்ளர் ஒடஞ்சு போச்சு. அந்தம்மா கரண்டிய பழுக்க வச்சு கைல சூடு போட்டாங்க. இங்க பாருங்க!" அவளது கண்களில் இருந்து கண்ணீர் அருவி யாய்க் கொட்ட உள்ளங்கையை விரித்துக் காட்டினாள். அந்த பிஞ்சு உள்ளங்கையில் ஒரு விரல் அகலத்திற்கு சூட்டுத் தழும்பு இருந்தது. அதைப் பார்த்து செல்லனின் உடல் சிலிர்த்தது. பழுக்க காய்ச்சி அந்தக் கரண்டி இப்போது அவனது இதயத்திற்குள் புகுந்தாற் போன்று வலி, வேதனையில் அவனது நெஞ்சம் கனக்கிறது.

அவனது கண்கள் கலங்கின.

அந்தக் கையை ஒரு கணம் வெறித்துப் பார்த்தான். பின் பக்கத்தில் அமர்ந்திருந்த மாரியம்மாளின் முகத்தைப் பார்த்தான். அவளது கண்களிலும் இரண்டு துளிகள் மொட்டுக்களாய் உருண்டு திரண்டு நின்றன. தனக்கும் இப்படியொரு அவல நிலையை ஏற்படுத்தி வைக்காதே அப்பா என அவனதுகாலில் விழுந்து மன்றாடுவது போல் இருந்தது.

அவனது இதயத்தில் ஒரு புதிய ஒளி பிறக்கிறது. அந்தப் புதிய ஒளியின் துணை கொண்டு, இந்த இரு வர்க்கத்தினரி டையே உள்ள உறவை ஊடுருவிப் பார்க்கிறான். ஒரு தெளிவு பிறக்கிறது. அந்தத் தெளிவு தந்த தீர்வோடு யன்னலுக்கூடாக பார்வையை வெளியே செலுத்தினான்.

ரயில் ஏதோ ஒரு ஸ்டேசனில் நின்றிருந்தது. மாரியம் மாளையும் கையில் பிடித்துக் கொண்டு அவசர அவசரமாக கீழே இறங்கினான் செல்லையா.

தொழிலாளர்கள் வாழ்ந்தாலென்ன மாண்டாலென்ன என்று அலட்சியப்படுத்தும் நிர்வாகத்தினரைப் போல, யார் ஏறினால் என்ன இறங்கினாலென்ன என்ற அலட்சியத்துடன் ரயில் "ஊ" வென ஓலிமிட்டவாறு கொழும்பை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

பதுளைக்கு இரண்டு பயணச் சீட்டுகளை வாங்கிக் கொண்டு "உடரட்ட மெனிக்கா"விற்காக காத்து நிற்கிறார்கள் செல்லையாவும், மகளும்.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கறிவேப்பிலை

இயந்திர இரைச்சலிற்குள்ளும் மனித இரைச்சலிற்குள்ளும் "பேக்டரி" (தேயிலை தொழிற்சாலை) மூழ்கிக் கிடக்கிறது. ராட்சத அடுப்பிற்குள் போடப்படும் விறகு கட்டைகள் இயந்திர ரம்பம் மூலம் துண்டிக்கப்படும் உராய்வு ஓசை தாளந்தவறாத ஒரு லயத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "ஓர்க்ஷாப்பில் மடார் மடாரென்று எதையோ சம்மட்டியால் அடிக்கும் ஓசையும் இடை இடையே எழுந்து அடங்குகிறது.

ஹெட் டீமேக்கரின் அதிகாரக் கட்டளைகள் இடை இடையே திடீர் திடீரென எழுந்து தேய்கின்றன.

பெரிய துரையின் கார் தேயிலை தொழிற்சாலையின் முகப்பிலிருந்து புறப்படவும் கொழுந்து லொரி வந்து நிற்கவும் சரியாக இருக்கிறது. அரை குறையா திறந்து வைக்கப்பட்டிருந்த கண்ணாடி யன்னலை நன்றாகத் திறந்து வெளியே பார்க்கிறேன்.

பச்சைப் பசேலென்று ஓங்கி உயர்ந்த மலைச் சிகரங்களில் வெண்மே மகங்கள் முத்தமிட்டுச் செல்கின்றன. "செண்டா கட்டி மலை" நான்தான் மலைகளின் ராணி என்பதைப் போல கம்பீரமாக காட்சியளிக்கிறது. மலைகளில் தவழும் தென்றல் என் முகத்தில் மோதி சில்லிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தப் பசுமை மயக்கம் தந்த இனிமை ஒரு கணம்தான். மீண்டும் சுயஉணர்வு பெறுகின்றேன்.

பேக்டரி அசுர இயக்கத்திற்குள் தன்னை இழந்து ஒலிமயமாகி கம்பீரமாய் நிற்கிறது.

இந்த நான்கு மாடி கட்டிடத்திற்குள் தான் எங்களது வாழ்க்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாடியில் 'வாட்டம்' பார்த்துவிட்டு கீழே இறங்கி வருகின்றேன். சற்று நேரம் ஓய்வு எடுப்போம் என்ற மந்த கதியில் இலை தட்டுபவர்களின் விழிகளில் என் உருவம் தட்டுப்படுகிறது. அவர்களின் செயலில் வேகம் கூடுகிறது. அவர்கள் மனித இயந்திரங்களாய் மாறுகின்றனர். அவர்களின் ஓய்வற்ற வேலையின் வேக இயக்கத்தைப் பார்க்க எனக்குப் பரிதாபமாகத்தானிருக்கும். என்ன செய்வது?

ரோல் காம்பிராவிற்குள் நுழைகின்றேன். அங்கு நான் கண்ட காட்சியினால் என் விழிகள் வியப்பால் விரிகின்றன. அது செல்லனாகத்தான் இருக்க முடியும். ஆபத்தான இடத்தில் காலை வைத்துக்கொண்டு அவ்வளவு வேகமாக வேலையில் ஈடுபட அவன் ஒருவனால் தான் முடியும். அவனைக் கடந்து பேக்டரியின் மறுமுனைக்குச் செல்கின்றேன்.

தேயிலைத்தூள் நிரப்பப்பட்ட பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அறைக்குள் நுழைகின்றேன். உயர்ரக தேயிரைத் தூளின் மணம் நாசியில் நுழைகிறது. அந்த இனிய மணத்தின் சுகந்தத்தை உள்வாங்கி உள்ளத்திற்குள் பதுக்கி வைத்துக் கொள்கிறேன். இந்த தேயிலைத் தூளைக் கொண்டு தயாரிக்கப்படும் தேனீரின் சுவையே அலாதிதான். நாவில் நீர் ஊறுகிறது.

ஆனால் இந்தத் தூளை தயாரிக்கும் தொழிலாளர்கள் அதன் சுவையை அநுபவிக்க முடியாது. காற்றிலே தவழ்ந்து வரும் நறுமணத்தை உள்வாங்கி... உள்வாங்கி... இந்தளவிலேயே அவர்களின் சுவையின்பம் நின்றுவிடும். அந்தளவில் திருப்தி யடைந்துவிட வேண்டியதுதான்.

ஏற்றுமதிக்கான இந்த பிரத்தியேக ரக தேயிலைத்தூள்தான் லட்சோப லட்ச ரூபாய்களை லாபமாக பெற்றுக் கொடுப்பவை. அன்னிய செலாவணியை கோடிக்கணக்கில் ஈட்டித்தரும் இவற்றை உற்பத்தி செய்ய உழைக்கும் மக்கள் இருக்கின்றனரே- அந்த உழைக்கும் வர்க்கத்தினரைப் பார்க்கும்போது வேதனை யாகத்தான் இருக்கிறது. தொழிலாளர் வர்க்கம் எப்போதும் எங்கேயும் ஏமாற்றப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

செம்மண் நிறத்தில் அழுக்கேறிய காக்கி கால்சட்டையை மாத்திரம் அணிந்து கொண்டு, தலையில் சுமையுடன் செல்லும் கதிரவனின் உடம்பில் ஒரு பனியன் கூட இல்லைதான். அரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாண கோலத்தில், கறுத்த, வியர்வை வழிந்தோடும் அவனது தோலில் எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கின்றன.

இந்த தோல் போர்த்திய எலும்புக் கூடுகளின் உழைப்புதான் அந்த லட்சோப லட்ச ரூபாய்கள். சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கும் மேலாக, யாருடைய லாபத்திற்காகவோ, தன் உழைப்பை, உதிரத்தை, உயிரையும் கூட தியாகம் செய்து கொண்டிருக்கின்றனர் இந்த மலையக மக்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இந்த அவல வாழ்வு நீடிக்கப் போகின்றதோ?

தொழிலாளியே நீ இறந்துவிடாதே! உன்னிடமிருந்து நாங்கள் சுரண்ட வேண்டிய உழைப்பு நிறைய இருக்கிறது. ஆகவே நீ உன் உடலின் உயிரையாவது வைத்துக் கொண்டிரு என்றுதானே அரிசி என்ற பெயரில் மண்ணையும், கல்லையும் பிச்சைக் காசையும் வீசுகின்றனர்.

அந்நிய நாட்டின் பொருளாதார நிலை செழித்து உயர வேண்டுமென்பதற்காக இந்நாட்டு குடிமகனின் உழைப்பு உறிஞ்சப்படுகின்றது. இந்த தேயிலைத் தூளிற்கு கொடுக்கப்படும் விலை இந்த மலையக மக்களின் கடின உழைப்பின் விலை. இவர்கள் வியர்வைத் துளிகளாய் சிந்திய இரத்த துளிகளின் விலை.

"காங்கை (சூடு) அளவாக இருக்கட்டும். அதிகம் வாட்டம் போய் விடப் போகிறது, கவனம்!" நான் தான் கட்டளை யிடுகிறேன். எவ்வளவோ அக்கறையுடன், வெப்பத்திற்குள் புழுங்கிக் கொண்டு, வியர்வை ஆறாக பெருக வேலை பார்க்கும் அவர்களை முடுக்கிவிட இப்படி கட்டளையிடுவதற்காக மட்டுமல்ல, அவர்களின் உழைப்பை முதலாளி வர்க்கத்திற்காக உறிஞ்சுவதற்காகவுந்தான் எனக்கு சம்பளம் கொடுக்கின்றனர். என்ன செய்வது? எனக்கும், குடும்பமொன்றும், அவர்களுக்கு வயிறு என்றும் ஒன்று இருக்கிறதே! இதற்காகவே நான் அவர்களை அதிகாரம் பண்ணித்தானாக வேண்டும்....

அடுப்பிலிருந்து ளிவரும் 'வெக்கையை' ராட்சத விசிறி அந்த தளம் முழுமைக்கும் வீசிக் கொண்டிருக்கிறது.

பகல் ஷிப்ட் வேலைக்காரர்களின் அன்றை உழைப்பின் இறுதி நேரம். இவர்கள் வீட்டிற்கு கிளம்புகிறார்கள். இரவு பணியாளர்கள் வந்து வேலையை தொடர்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லனும் வீட்டிற்கு கிளம்பிவிட்டான்.

தொழிற்சாலை முகப்பில் கொழுந்து லாரியில் இருந்து இறக்கிய மூட்டைகளை 'பாரம்' (பொறுப்பில்) எடுத்துக்கொண்டு செக்ரோலில் (பதிவேடு) மூட்டைகளின் எண்ணிக்கையை தோட்ட வாரியாக எழுதிக் கொண்டிருக்கின்றேன்.

செல்லன் என்னை நோக்கித்தான் தயங்கி தயங்கி வருகின்றான்.

"ஐயாவு, வேல எல்லாம் முடிச்சிட்டேனுங்க..."

"முடிச்சுட்டா நீ வீட்டிற்குப் போக வேண்டியதுதானே?"

"ஆமாமுங்க...." அவன் தலையைச் சொரிகின்றான். எதையோ என்னிடம் எதிர்பார்க்கும் ஒரு 'பாவம்' அதில் தொனிக்கிறது.

"என்னப்பா, செல்லன் விசயத்தைச் சொல்லேன்."

"ஊட்டுக்கு விருந்தாடி வந்திருக்காங்க. அரிசி வாங்கோனும். ஒரு அஞ்சு ரூவா காசு இருந்து குடுத்தீங்கன்னா... சம்பளம் போட்டதையும் மொத வேலையா குடுத்துருவேங்க..."

அவன் இதைப் போன்ற உதவியை என்னிடம் எதிர்பார்த்து, முன்பு ஒரு முறை வந்திருந்தான். அப்போது அவன் சொன்ன வார்த்தைகள் என் சிந்தனையில் நிரடுகின்றன.

"யாருட்டையும் கை நீட்டி வாங்க மாட்டேனுங்க. புள்ள குட்டிக்காரனானப்புறம் இதையெல்லாம் பாத்தா முடியுங்களா? அதுக பசியில துடிக்கையில நமக்கு எதுக்குங்க கவுரவம்? அதும்போக பொய் சொல்லி களவு எடுத்தாத்தானே வெக்கப்படனும்? எல்லாருங் கிட்டையுங்களா கேக்கப் போறோம்? ஒங்களைப் போன்ற மவராசன்ங்க ஏளைங்க நெலமையைப் புரிஞ்சுக்கிட்டு மனசோட ஒதவி செய்யுறவங்க கிட்ட ரெண்ட மூன வாங்கிக்கிட்டு சம்பளம் போட்டதுங் குடுத்துருவேனுங்க."

உண்மைதான்!

கொடுக்கல் வாங்கல்களில் செல்லன் நாணயமானவன் தான். வறுமையில் வாடும் உள்ளம் நாணயத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறது?

"சரி 'அந்திக்கு (மாலையில்) வீட்டிற்கு வா, பார்க்கலாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாங்க ஐயாவு. இந்த ஒதவிய எனக்குச் செய்யனுங்க. ஐயாக்கிட்டச் சொல்ரதுக்கு என்னாங்க. 'ஏ பெரிய மவள பொண்ணு கேட்டுதா' வந்துருக்காங்க. அதுக்கும் இருவத்தினாலு வயசாச்சுங்க. குமர் பொண்ணுங்கள வூட்ல வச்சுருக்கிறதுதான் இந்த காலத்துல, மடியிலே நெருப்ப கட்டிக்கினு இருக்கிறாப்புல இருக்குதுங்களே! காலா காலத்துல அதுகள ஒருத்தங்கிட்ட புடிச்சு குடுத்திட்டோம்னா நம்ம கவல இல்லாம உசுற விட்டிடலாங்க. இதுக்கு பொறவு பொறந்த புள்ளைகளும் வயசுக்கு வந்துடுச்சிங்க. ஏதோ நம்ம கை கால்கள் நல்லா இருக்கையிலேயே அதுகளுக்கு ஒரு நல்ல காரியம் செஞ்சு வச்சுட்டோம்னா நம்ம கவல தீர்ந்ததுங்க. இப்ப வந்திருக்கிறவுங்க தூரத்து சொந்தம்னாலும் நல்ல குடும்பங்க. ஏதோ அந்தக் கடவுள் கண்ணத் தொறந்து பாத்தாருன்னா எல்லாம் நல்லபடியா முடிஞ்சிருங்க."

அது சரிதான். ஒனக்கு எல்லாமா எத்தனை புள்ளைங்க? அஞ்சு பேருங்க. அதுல ரெண்டு பேரு ஆம்பிளைங்க. ஒருத்தன் தோட்டத்து இஸ்கூல்ல நாலாவதும், மற்றவன் மூணாவதும் படிக்கிறாங்க."

"ஏன் பொம்பிளைப் பிள்ளைகளை படிக்க வைக்கலையா?"

"இல்லைங்க. எங்கமாதிரி ஏளைங்க வூட்டு புள்ளைங்க படிச்சு தான் என்ன செய்யப் போறாங்க? நாளைக்கு போய் குசுனி (அடுப்பங்கரை)யுல போய் கரிப்பானையைத்தானே புடிக்கனும்?"

கரிப்பானையைத்தான் புடிக்குனுமின்னாலும் படிக்க கூடாது என்று அர்த்தமில்லையே? ஏதோ அறிவிற்காகவும் படிக்கலாமில்ல?"

"ஐயா சொல்றது வாஸ்தவம். ஆனா ......"

"சரி, சரி வா போகலாம்."

அன்று மாலை அவனிடம் வெகு நேரம் கதைத்துக் கொண்டிருந்தேன். அவனுக்குத் தான் எத்துணை அபிலாஷைகள்? அவனது வாழ்க்கையில் நேர்ந்த மன அவலங்கள் தான் எத்தனை? என்னிடத்தில் அவன் மனந்திறந்து பேசுகிறான். உணர்ச்சி மயமான அந்த நேரத்தில் எங்களுக்குள் இருந்த ஏற்றத்தாழ்வுகள் அகன்றுப் போய் விட்டன. நான் ஒரு அதிகாரி அவன் ஒரு தொழிலாளி என்ற வர்க்க பேதம் மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டிருந்தது. எனக்கு கீழ் பணிபுரியும் ஒரு தொழிலாளி என்ற நினைப்பே இல்லாமல், ஒரு சக மனிதன் என்ற ரீதியில் ஏற்பட்ட அந்த நெருக்கச் சூழ்நிலையில் நான் என்னை மறந்து அவனது இன்ப துன்பத்தில் மானசீகமாய்ப் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

மகன்கள் இருவரையும் பதுளையில் உள்ள பள்ளிக் கூடத்தில் படிக்க வைத்து, உத்தியோகக் காட்சியில் காண வேண்டும். பெண் பிள்ளைகளைத் திருமணஞ் செய்து கொடுத்து, பேரப் பிள்ளைகளை கொஞ்சி மகிழ வேண்டும். பூத்துக் காய்க்கும் மரங்களாய், பசுமையாய் பார்த்த மன நிறைவில் கண் மூடவேண்டும் என்ற நியாயமான, சராசரி மனிதனுக்குள் ஏற்படும் ஆசைகள் அவனது உள்ளத்தில் பொங்கித் ததும்பி, நிறைந்து நிற்கிறது.

"ஏதோ ஆம்புளப்புள்ளகளுக்கு 'கண்ணைத் தொறந்து' வைப்போம். பின்னாடி அதுக நெலமுல சந்தோஷமாய் காலத்தை ஓட்டலாமுங்க,"

என்று அவன் கூறிய வார்த்தைகள் ஒரு சராசரித் தந்தையின் மன நிலைமை எனக்கு படம் பிடித்துக் காட்டின.

வறுமையின் கோரப் பிடிக்குள் தங்களை இழந்து வதைபட்டுக் கொண்டிருக்கும் அத்தொழிலாளர்களின் வாழ்க்கை என்ற சோக நாவலில் - நாட்கள் என்ற ஏடுகள் மிகவும் சிரமத்திற்குள் தான் புரட்டப்படுகின்றன. அந்த ஏடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான போராட்டக் களங்களாகத் தான் காட்சியளிக்கின்றன.

ஒரு ஏழைத் தொழிலாளியின் உள்ளத்து உணர்ச்சிகளிற் ஒரு சிறிதைத்தான் நான் அறிந்தேன். அந்த ஒரு உள்ளத்திற்குள்ளே எத்துணையோ ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களின் இதய குமுறலை கேட்க முடிகிறது.

வசதியான வீடின்றி, போதிய உணவின்றி, வாழ்க்கையில் நம்பிக்கையேயின்றி எத்துணை மனித உயிர்கள் வாடுகின்றனவோ? எதிர்கால சுபீட்ச வாழ்வின் கனவுகளைச் சுமந்து கொண்டு, அந்த கனவு தரும் சுகத்திலேயே திருப்தியடைந்து வாழும் மனித உயிர்கள் எத்தனையோ? மானசீகமான அந்த திருப்தி தரும் சுகானுபவத்திலேயே நிறைவு காணும் இந்த ஜீவன்கள் நிதர்சனமான நிம்மதிக்காக ஏங்கி ஏங்கி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வாழ்க்கை என்ற ஏடுகள் காலச் சூறாவளியில் வலிய புரட்டப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன.

நாட்கள் காலவெளியில் கரைந்து போய்க் கொண்டிருக் கின்றன. முழுமையாக ஒரு வாரம் உருண்டோடி மறைந்து விட்டது.

மகளின் திருமண ஏற்பாடுகள் தொடர்பில் செல்லன் என்னிடம் அடிக்கடி கலந்து பேசுவான். நானும் என்னாலான உதவிகளையும் யோசனைகளையும் கொடுத்துக் கொண்டிருக் கின்றேன்.

இன்று காலையில் திருமண அழைப்பிதழை எடுத்துக் கொண்டு ஓடி வந்தான். அடுத்த வாரம் தனது மகளுக்கு திருமணம் நடக்கப் போகிறது என்பதில்தான் அவனுக்கு எத்தனை சந்தோஷம்?

"செல்லா மகளின் திருமண நிகழ்ச்சியிலேயே மனதை நழுவவிட்டுவிட்டு வேலையில் கோட்டை விட்டுராதே!"

'ரோல் காம்பிரா' வைக் கடந்து, அந்த மாடியிலிருந்து கீழே படியில் இறங்கிக் கொண்டிருக்கின்றேன். அடுப்பிற்குள் பெரிய துண்டிக்கப்பட்ட விறகு கட்டைகளை போட்டுக் கொண்டிருக் கிறான் கதிரவன்.

'ஐயோ' என்ற அலறல் முழுமை பெறாது திடீரென மௌணித்து விட்டது. அந்த ஒலி மேன் மாடியில் இருந்துதான் வந்திருக்க வேண்டும்.

இயந்திர இரைச்சல் திடீரென நின்றுவிட்டது. ரோல் காம்பிராவிற்குள் தொழிலாளர்கள் திமு திமுவென ஓடுவதை பார்க்க முடிந்தது.

நாங்களும் ஓடுகிறோம்.

என்னவோ ஏதோவென்று இதயம் தவிக்கிறது நெஞ்சம் படபடக்கிறது.

ரோல் காம்பிராவிற்குள் நுழைந்த நான் மறுகணம்

"ஐயோ செல்லா" என்று அலறுகின்றேன். எனது அலறல் தொழிற்சாலைக்குள் ஓங்கி ஒலித்து அடங்குகிறது.

செல்லனின் உடல் கன்வேயர் பெல்ட்டில் சிக்கிக் கொண்டு, நொறுங்கிச் சிதறி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க சகிக்கவில்லை. என்னெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறது.

சற்று முன் முழுமையான மன நிறைவில், மகிழ்ச்சி பூரிப்பில் நின்று கொண்டிருந்த செல்லனின் உடலா இது? ரத்தம் சொட்டச் சொட்ட, எலும்புகளும் சதைத் துண்டுகளுமாக.... என்ன கோரமான காட்சி?

"ஐயையோ, இப்படி என்னை அநாதரவாத விட்டுட்டு போய்ட்டீங்களே. நாங்கள் இனி என்ன செய்யப் போகிறோம்? எங்களையும் உங்களோடு கூட்டிட்டுப் போயிடுங்களே..." அவனது மனைவினதும் குழந்தைகளினதும் பிலாக்கண ஓலம் இதயத்தை கசக்கிப் பிழிகிறது. நெஞ்சம் வலிக்கிறது.

'நான் மனதிற்குள் 'ஓ'வென அலறி கதறுகிறேன். கண்களில் நீர் சொட்டுகிறது. பார்ப்பவர்கள் அழுகிறார்கள். இயந்திரம் அழுகிறது. வெளியே மழை. இயற்கையும் அழுகிறது.

மகள்களின் திருமணக்கோலம்...

மகன்களின் உத்தியோக காட்சி...

அக்குடும்பத்தின் எதிர்காலம்....

அந்த ஏழை நெஞ்சத்தின் ஆசைக்கனவுகள்... அவர்களின் அபிலாஷைகள், எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தும் செல்லனோடு சேர்ந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விடுமோ?

தந்தையை இழந்து தவிக்கும் புதல்வர்களுக்கும் கணவனை இழந்து துடிக்கும் மனைவிக்கும் தோட்ட நிர்வாகம் உறுதியாய் இறுதியாய் கொடுத்த முடிவு, "கவலையீனத்தால் ஏற்பட்ட இந்த விபத்திற்கு எங்களால் நஷ்ட ஈடு (இழப்பீடு) தரமுடியாது.

இந்த முடிவை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு வாளாவிருந்து விடவேண்டியதுதானா? அவர்களின் விமோசனத்திற்கு வழியே இல்லையா?

தொழிற்சாலை வழக்கம்போல் இயந்திர இரைச்சலிற்குள் மூழ்கிப் போகிறது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சின்னக் கங்காணிக்கு அப்படியும் ஒரு ஆசை...!

"தவறணை".

ஒரு மனிதனாய் உள்ளே நுழைந்து, தனது தனித்துவத்தை இழந்து, இரு மனிதர்களாய் தட்டுத் தடுமாறி வெளியே வரும் பட்டினத்து தவறணையல்ல. அந்த தேயிலைத் தோட்டத்திற்கு தேவையான தேயிலைக் கன்றுகளையும், சவுக்கு மரம் போன்ற இதர மரக்கன்றுகளையும் வளர்க்கும் இடம். நீங்கள் "நர்சரி" என்று கேள்விப்பட்டிருப்பீர்களே அதுதான்.

இளங்கன்றுகள் மொழுமொழுவென செழிப்புடன் வளர்ந் திருக்கின்றன. சுமார் அறுபது, அறுபத்தைந்து தொழிலாளர்கள் சுறுசுறுப்புடன் ஓடியாடி வேலை செய்கின்றனர். அவர்களின் மொழியில் சொல்வதானால் வேலை நெருப்பாக நடந்து கொண்டிருக்கிறது. கண்காணிமார்களின் கட்டளைக் குரல்கள் அடிக்கடி எழுந்து, பரவி அந்த மலைப் பள்ளத்தாக்கிற்குள்ளேயே அமுங்கிப் போகிறது.

சுமார் இருபது தொழிலாளர்கள் புதிதாக நட்டு வைத்திருக்கும் "வங்கிக்கன்று"களுக்கிடையே, ஈட்டி போன்று செதுக்கப்பட்டிருக்கும் மரக்குச்சிகளினால் மண்ணைக் குத்தி இலேசாக கிளறிக் கொண்டிருக்கின்றனர். செடிகளின் வேர்களை அறுத்து விடாமல் நீர்மட்டும் உள்ளே இறங்கும் வகையில் கிளற வேண்டும். மழை பெய்து வெகு நாட்களாகிவிட்டன. மர ஈட்டியால் தங்கள் பணியை தொடர்ந்து செய்ய இயலாமல் அவர்கள் சிரமப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பன் நிமிர்ந்து சின்னக் கங்காணியைப் பார்க்கிறான். சின்னக் கங்காணியும் கண்டக்டரும் ஏதோ தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'என்ன?' என்ற கேள்விக் குறியோடு அவர் சுப்பனை பார்க்கின்றார்.

"ஈட்டி குச்சியால குத்திக் கிளற முடியாது. மண் இறுகிப் போச்சு. 'சுரண்டிய' வச்சு லேசா கொத்தலாமுங்களா?"

"செடி வேரில் காயம் பட்டுவிடாம கொத்தி கிளறுங்க."

கண்டக்டரின் அனுமதி கிடைத்துவிட்டது. இப்போது தொழிலாளர்களின் முகத்தில் ஒரு ஆறுதலான பொலிவு ஏற்படுகிறது. வேலையின் சிரமத்தில் பாதி குறைந்து விட்டதே!

"அதோ 'வெள்ளை மண் கேவுல' பெரிய துரையின் கார் வருகிறதே."

சின்னக் கங்காணி சுட்டி காட்டுகிறார். கண்டக்டர் திடுக்கிட்டு திரும்பி பார்க்கின்றார். பெரிய துரையின் கார் தவறணையை நோக்கி வருவதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டே தேயிலைத் செடிகளுக்கிடையே ஊடுருவிச் சென்று, செடிகளில் துளிர்த்திருந்த பனி நீரால் தனது மடிப்பு கலையாத காற்சட்டையை சிறிது நனைத்துக் கொள்கிறார். சிரமப்பட்டு வேலை பார்க்கிற அடையாளம்.

திருப்தியான அளவு அவரின் காற்சட்டை நனைந்ததும் அவர் வெண் மணற் பாதைக்கு வருகிறார். அதற்குள் பெரிய துரையின் காரும் தவறணைக்குள் நுழைந்து நிற்கிறது. வேறு இடத்தில் வேலை பார்த்துவிட்டு அப்போதுதான் தவறணைக்குள் நுழைவதைப் போன்ற பாவனையில் வேகமாக நடந்து வருகிறார், துரையை நோக்கி.

தவறணையின் மையமான இடத்தில் துரை நின்று நான்கு புறமும் சுற்றி, சுற்றி மேலோட்டமான பார்வையை வீசிக் கொண்டே, கண்டக்டரிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருக்கிறார். துரையின் வேகமான கைவீச்சு அவர் சினத்துடன் இருக்கிறார் என்பதைத் தான் தெரிவிக்கும்.

'அதென்ன? புதுக்கன்றுகளுக்கிடையே சுரண்டியால் குத்திக் கிளறிக் கொண்டிருக்கிறார்களே! செடிகளின் வேர் அறுந்து போனால் செடிகள் பட்டுப் போகுமே?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலினால் கருத்துச் சிவந்திருந்த துரையின் முகம் மேலும் சினத்தினால் சிவக்கிறது. துரையின் பூனைக் கண்களும் சிவந்து பயங்கரமாய்த் தெரிகின்றன.

"ஏய் கங்காணி இங்கே வா." துரை அலறுகிறான். சின்னக் கங்கானியின் உடல் பயத்தினால் நடுங்கிப் போகிறது. பலிபீடத்தை நோக்கிச் செல்லும் ஆட்டுக்குட்டியின் பரிதாப நிலையில், அவர் அஞ்சி அஞ்சி துரையை நோக்கிச் செல்கிறார்.

"யார் சுரண்டியால கொத்தச் சொன்னது? ஈட்டி குச்சி எங்கே?"

சின்னக் கங்கானி கண்டக்டரைப் பார்க்கின்றார்.

"ஐயோ என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே" என்று கண்டக்டரின் விழிகள் கெஞ்சுகின்றன.

துரை மீண்டும் கேட்கின்றான்.

"யார் சுரண்டியால் கொத்தச் சொன்னது, நீதானே?"

துரையிடம் பதில் சொல்ல முடியாது. எந்த விதமான பதிலைச் சொன்னாலும் அது தப்போ, சரியோ, ஒரே விதமான விளைவைத்தான் தரும். அது துரையின் சுபாவம். அவனது முகத்தை கூர்ந்து பார்ப்பதோ அல்லது பதில் பேசுவதோ அவனுக்கு சிறிதும் பிடிக்காது. எரிந்து விழுவான்.

"ஏய் எல்லாம் வேலையை நுப்பாட்டு. சுரண்டியை போட்டுட்டு மர ஈட்டியால குத்து. ஏய் கங்காணி நீ ரெண்டு மணிக்கு ஆபிஸிற்கு வா!"

ஸ்காட் துரை காரில் ஏறிப் போய் விட்டான்.

சின்னக் கங்காணி கண்டக்டர் நின்ற திசையை திரும்பிப் பார்க்கின்றார்.

கண்டக்டர் 'சோம்பால' தூரத்தே வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தான்.

இரண்டு மாதங்களுக்கு முன்.

அப்போது இலங்கை முழுவதும் உள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்திருந்தனர்.

இவர்களின் தோட்டத்தில் மூன்று கட்சிகள் இயங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை நிறுத்தத்தில் மூன்று கட்சிகளுமே, ஒருமித்து பங்கேற்றிருந்தன. இப்படி மூன்று கட்சிகளும் ஒருமித்து சேர்ந்து வேலை நிறுத்தத்தில் பங்கேற்றிருந்தது பாராட்டுதலுக்கு உரியதுதான்.

வேலை நிறத்தம் வெற்றிகரமாக ஐந்தாவது நாளாக தொடர்ந்து கொண்டிருந்தது.

அன்று மாலை துரை அழைப்பதாக செய்தி வந்தது, சின்னக் கங்காணிக்கும், இதர கட்சித் தலைவர்களுக்கும் வேறு நிர்வாகிகளுக்கும்.

சின்னக் கங்காணிக்கு தோட்டத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. அவரது வார்த்தைகளுக்கு கட்சித் தலைவர்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. அவரது பேச்சை இதர நிர்வாகிகளும் மதித்தனர். இந்த செல்வாக்கு நிலைமையை 'கண்டக்டர் சோம்பால' துரைக்கு தெரியப்படுத்தியிருந்தான்.

துரையோடு சமமாக நாற்காலியில் அமர்ந்து தேனீர் அருந்துவது என்பது சாதாரண விசயமா? அந்த அற்புதம் அங்கு நடந்தது. அனைவருக்கும் கரண்சிகள் கொடுக்கப்பட்டன. சின்னக் கங்காணிக்கு பெரிய கங்காணி பதவி கொடுப்பதாகவும், தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் 'லேசான' வேலை கொடுத்து, பின் படிப்படியாக கங்காணி பதவிக்கு உயர்த்து வதாகவும் துரை உறுதிமொழி கொடுத்து வழியனுப்பினார்.

பிறகு என்ன?

கொள்ளு மண்டி தோட்டத் தொழிலாளர்கள் மறுநாள் வேலைக்கு திரும்பினார்கள்.

துரைக்கு வெற்றி. தொழிலாளர்கள் தோற்கடிக்கப் பட்டார்கள்; சுயநலக்காரர்கள் தலைவர்களாக இருக்கும்வரை - அவர்களின் பேச்சை கண்மூடித்தனமாக, மந்தைக் கணக்கில் கேட்டு நடக்கும் வரை தொழிலாளர்களுக்கு விடிவு ஏது?

அன்றைய நிகழ்ச்சி நினைவிலாட துரை கொடுத்த உறுதிமொழிகள் இன்று நிதர்சனமாகிவிடும் என்ற எண்ணத்துடன் ஆபிஸை நோக்கிச் செல்கிறார், சின்னக் கங்காணி.

துரையின் கோபம் தணிந்திருக்கும். அவர் அன்று கொடுத்த உறுதிமொழிகளை இன்று கண்டக்டர் மூலம் நினைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினால் ஒருவேளை இன்றைக்கே பெரிய கங்காணியாக பதவி உயர்வு பெற்றுவிடலாம். 'அலுவலகத்தை விட்டு வெளியே வரும்போது நான் பெரிய கங்காணிதான்.'

பெரிய கங்காணியாக பதவி உயர்வு அடைந்து விட்டதாகவே அவர் மனம் உறுதியாக நம்பியது. அந்த எண்ணமே அவரது நடையில் ஒரு பெருமிதத்தை, ஒரு மிடுக்கை ஏற்படுத்தியது. கண்களில் கூட ஒரு செருக்கு ஒளிரத் தொடங்கியது. தான் பெரிய கங்காணியாக மாறிய பிறகு தனக்கு எத்தனை மதிப்பு கிடைக்கும்? எப்படியெல்லாம் அதிகாரம் பண்ணலாம். கண்டக்டரைப் போல, இல்லை ஒரு சின்னத் துரையைப் போலவே எல்லா வேலை தளங்களுக்கும் ஒரு 'விசிட்' அடிக்கலாம். நண்பகல் குளித்துவிட்டு வயிறு நிரம்ப உண்ட களைப்பில் ஒரு குட்டித் தூக்கம் போடலாம்...!

வலது கால் பெருவிரலில் கல் ஒன்று இடித்துவிட்டது. கல் இடித்ததா? இவரல்லவா கல்லில் இடித்துக் கொண்டார். திடீரென சிந்தனை தடைபடுகிறது.

தேயிலைத் தூரில் வளர்ந்திருக்கும் 'மீனாக்குலை' (Fern - பன்னத்தாவரம்)யைப் பறித்து அத்துடன் சவுக்கு மர இளந்தளிறும் சுண்ணாம்பையும் சேர்த்து உள்ளங்கையில் வைத்து கசக்கி அதை பெருவிரல் காயத்தில் வைத்து கட்டிவிடுகிறார். 'ஒரு கட்டுப் போதும். பட்டுப் போய்விடும்.'

வலது கால் பெரு விரலல்லவா இடிபட்டது. நிச்சயமாக இது நல்ல சகுனந்தான்.

இப்பொழுதே பெரிய கங்காணியாக பதவி உயர்வு பெற்றுவிட்ட மனநிறைவு.

அலுவலக முகப்பில் தொழிலாளர் சிலர் நின்று கொண்டிருக் கின்றனர். அவர்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கலாம். அவற்றிற்கெல்லாம் துரையிடம் பேசி தீர்வு பெற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சினைகளுக்கு தீர்வு இவர்களுக்கு சாதகமாக முடியுமோ என்னவோ? 'தன்னைப் பொறுத்தமட்டில் தீர்வு எனக்கு சாதகமாகத்தான் இருக்கப் போகிறது.'

'சின்னான் கங்காணி' கிளார்க் கூப்பிடுகிறார்

சின்னக் கங்காணி, தலைலேஞ்ச் (தலைப்பாகை) எடுத்தவாறு உள்ளே நுழைகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செலாங்கையா' (வணக்கம்) தெரிவிக்கிறார்.

'ம். ஏன் நீ சொரண்டியால கொத்தச் சொன்ன? தேயிலைக் கன்னு வேரு எல்லாம் அறுந்துபோய் பட்டுப் போகனுமா?...

"இல்லைங்க தொரே, வேருல காயம் படாமத்தான்...!"

"ஏய் என்னா இல்லே? நா பாத்தாச்சு. ஒனக்கு இருபத்தஞ்சு ரூபா தெண்டம். மூணு மாசம் வேல இல்லே. ஓடிப் போ." அடித்து வெரட்டாத குறை.

"ஐயா அது..."

"ஏய் பேச வேணாம். கெட் அவுட்."

அவரது உடல் கூனி குறுகி விட்டது. தனது குற்றமில்லை என்ற தனது பக்க நியாயத்தைக் கூட சொல்ல முடியாத சூழல். கண்டக்டர் 'சோம்பால' தனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதைப் போல, 'இருபத்தைந்து ரூபா தண்டனையை 'செக்ரோனில்' குறித்தக் கொண்டிருக்கிறார்.

கிளை பரப்பிய எண்ணங்கள் ஒரே வினாடியில் பொசுங்கிப் போயின. ஆசைகள் அவிந்து போன நிலையில், தலை குனிந்து வேலையிழந்த சின்னக் கங்காணியாகவே அலுவலகத்தை விட்டு வெளியே வந்து, தேயிலைச் செடிகளினூடே செல்லும் ஒற்றையடிப் பாதையில் 'லயத்'தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. யாகாவாராயினும் தன் நிறைகாக்க...

"டேய் மச்சி, ஏய்!"

திலகரத்தினத்தின் குரல் போல் இருக்கிறதே என குரல் வந்த திசையை நோக்கி பார்வையை திருப்பினான் ராஜு.

சிறிசேனாவின் டீக்கடையின் முன்னால் ஒரு கையில் பிளேன் டீ கிளாஸுடனும் மறுகையில் ரோஸ்ட் பன்னுடனும் நின்று கூப்பிடுவது திலகரட்ணமேதான்.

"டீ சாப்பிடலாம் வா!" ராஜுவிற்கும் ஒரு 'பிளேண்டீ' ஆர்டர் செய்துவிட்டு, கண்ணாடி அலமாரியிலிருந்து ஒரு ரோஸ்ட் பன்னையும் எடுத்தான் திலகரட்ணம். "இன்று மதியம் 'ப்ரீ' தானே?"

"ஆமாம்."

"அக்ரபத்தனை தமிழ் மகா வித்தியாலத்தில், கல்வி நூற்றாண்டு விழாவையொட்டின கைப்பணி பொருட்காட்சி நடக்குதாம். போவோமா?"

"போகலாம்! பால் கலக்காத கறுப்புச் சாய தேனீரின் மணம் நாசிக்குள் புகுந்து, சுவாசப் பையில் நிறைந்து ஒருவித புத்துணர்ச்சியை தர தேனீர் வயிற்றுக்குள் இறங்கி சுறுசுறுப்பை தருகிறது. ரோஸ்ட் பன்னும் பிளேன்டீ தரும் கூட்டுச் சுவையே தனிதான்.

தமிழ் மகா வித்தியாலயத்தின் முகப்பில் திருவள்ளுவர் அமர்ந்த நிலையில் அவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞானமும் அறிவுத் தொழில் நுட்பமும் ஒருங்கிணைந்து உருவாகிய அழகு மிளிரும் பல விதமான கைவினைப் பொருட்கள், மலையக குழந்தைகளிடம் இவ்வளவு திறமைகளும் ஒளிந்து கிடந்தனவா? அறிவுச் சுடரை தூண்டிவிட்டு செம்மைபடுத்தினால் உலகம் புகழக்கூடிய அறிவு ஜீவிகளை உருவாக்கி விடலாம் என்ற உண்மை அங்கு வெளிச்சம் காட்டுகிறது.

ராஜூ கல்வி பயிலும் காலத்தில் "சென்ட் பீட்ஸ்" கல்லூரியில் இதைப் போன்ற ஒரு விஞ்ஞானப் பொருட்காட்சி நடந்து கொண்டிருந்தது. தனது மெக்கானிக் நண்பரொருவரின் உதவியால் 'மெலிபன் பிஸ்கட் பெட்டியில்' டிரான்சிஸ்டர் ரேடியோ ஒன்றினை செய்து வைத்துக் கொண்டு, தனது சிந்தனையால் செய்யப்பட்டது என்று 'தம்பட்டம்' அடித்துக் கொண்டது நினைவிற்கு வந்தது. அப்போது நடந்த சிறு சிறு சம்பவங்களை அசை போட்ட வண்ணம் ஒவ்வொரு காட்சிப் பொருட்களையும் பார்த்துச் சென்று கொண்டிருந்தனர்.

அது ஒரு வயல் பாத்தி. ஓர் இளம் மங்கை அதன் பக்கத்தில் நின்று விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவனுக்கு முன்னால் சென்று கொண்டிருந்து மாணவர் கும்பலொன்று அவளிடம் ஏதோதோ சம்பந்தமில்லாத வினாக்களை கொடுத்து திணறடித்து விட்டு, இறுதியாக 'பயிர் நன்கு விளைந்திருக்கிறது. அறுவடைக்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன' என இருபொருள் படும்படி பேசிவிட்டு நகர்ந்தனர்.

ராஜூவும் திலகரட்ணமும் அவர்களை பின்தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள்.

'மாதிரி' தேயிலைத் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப் பட்டு மேசை மீது வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற் சாலையின் கூரை மீது 'ஜாஸ்மின்' என்ற பெயர் ஆங்கில எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த தொழிற்சாலை ஜாஸ்மின் தோட்டத்து தொழிற்சாலை போலும். தொழிற் சாலைக்குப் பக்கத்தில், வெவ்வேறு சிறிய கோப்பைகளில் மாதிரி தேயிலைத் தூள் வைக்கப்பட்டுள்ளன. தேயிலைத் தூளின் மணம் காற்றிலே கரைந்து சுவாச கோசங்களை நிறைக்கிறது. அந்த சுகந்தத்தை உள்வாங்கிக் கொண்டு, வலது பக்க கூறையை ராஜூ பார்க்கிறான். 'இந்திராணி' என்ற பெயர் அழகிய எழுத்துக்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிர்கின்றன. அவன் மனதில் ஒரு இன்ப பரவசம் கிளர்ந்தெழுகின்றது.

ஓ இந்த அழகிய பெயர் அவளுக்கு சொந்தமானதே. அவளும் இங்கு தானே படிக்கிறாள். எங்கே அவள் பெயருக்குரியவளை தேடும் தீவிரம். விழிகள் நான்கு புறமும் அலைபாய்கின்றன. சின்னஞ்சிறிய வேறொரு சிறுமியல்லவா இங்கு விளக்கம் சொல்ல நிற்கிறாள்.

"உன் பெயர் என்னம்மா? இது உங்கள் தயாரிப்பா?"

"என் பெயர் மாலா. இது அவர்களுடையது."

எதிர் வரிசையில் அமர்ந்திருக்கும் அவளைச் சுட்டிக் காட்டுகிறாள்.

"ஆகா! அவளேதான். என் உள்ளம் கவர்ந்த கன்னி அவள்தான். ராஜுவின் மனம் குதூலிக்கிறது. ஒவ்வொரு நாளும் எந்த முகத்தரிசனத்திற்காக ஏங்கிப் போய் நிற்பானோ அம்முகத்திற்குரியவளேதான்!"

"நீங்க இங்கே இருக்கிறீர்களா?" என்று கேட்டவாறு அவள் பக்கத்தில் சென்ற ராஜு, அங்கு காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த பழைய முத்திரைகளைப் பார்க்கின்றான். பல்வேறு முத்திரைகளைப் கொண்டு, அந்த பாடசாலைக் கட்டிடத்தை அமைத்திருக்கிறாள். முத்திரைகளை உற்றுப் பார்க்கிறான். தானும் ஒரு முத்திரை சேகரிப்போன் தானே? தன்னிடத்தில் இல்லாத சில முக்கியமான முத்திரைகள் அவளிடத்தில் இருந்தன.

"இது போல் உங்களிடம் வேறு முத்திரைகள் உண்டா?"

"இல்லை. சொல்லி எடுப்பிச்சன்."

"நல்லாயிருக்கு. அருமையான சேகரிப்பு."

"நன்றி. மிகவும் கஷ்டமான வேலை."

"ஆமாம். சிரமம்தான். இந்த தேயிலைப் பேக்டரியின் சொந்தக்காரர் நீங்கள் தானே?"

"ஆம். 'ஜாஸ்மின்' தேயிலைத் தோட்டத்து பேக்டரியின் மாதிரி வடிவம் போலில்லை?"

"இல்லையென்று யார் சொன்னது? அச்சு அசலாக! 'ஜாஸ்மின்' தோட்டத்து தேயிலை தொழிற்சாலையை அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்த்துக் கொண்டு வந்துவிட்டீர்களே என்று தான் எண்ணிக் கொண்டிருந்தேன். அது போகட்டும். "தேயிலைத் தூள் விற்பனைக்கு உண்டா?"

"நாங்க பிரைவேட்டா தேயிலைத் தூள் விற்பனை செய்வது இல்லை. எங்க ஒப்பந்தப்படி அமெரிக்காவிற்கு மட்டுந்தான் ஏற்றுமதி செய்கிறோம்;" தமாசாக கண்ணைச் சிமிட்டுகிறாள்.

"ஓ! அப்படியா?"

"இந்த பேக்டரியில் வேலை காலி இருந்தால் சொல்லுங்களேன்? நாங்களும் வேலையில்லாமல் தான் இருக்கிறோம்."

"மன்னிக்கவும். இங்கு தற்சமயம் வேலை காலியில்லை."

"அட்லீஸ்ட் ஒரு கிரீப்பர் சான்ஸாவது...? இது தான் என்னோட அட்ரஸ். சான்ஸ் இருந்தால் தெரியப்படுத்துங்கள்."

"ஓகே. சிரித்தபடி அவனது முகவரி எழுதப்பட்டிருந்த சீட்டைப் பெற்றுக் கொள்கிறாள். அவனது உள்ளம் துள்ளிக் குதிக்கிறது. திலகரத்னம் அவனது கையில் ஒரு "கிள்ளு" கிள்ளுகிறான்."

மறுநாள். உலகம் புதிதாய் மலர்ந்த காலைப் பொழுது. அது ஒரு சிறிய நகரம் என்றாலும், காலை நேர பரபரப்பு தொற்றிக் கொண்டது. பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும், பணிக்கு செல்பவர்களும், வியாபார நோக்கில் வருபவர்களும் போவோர்களுமாக தெரு உயிர்ப்புடன் இருக்கிறது.

இலங்கை வானொலியில் பிறந்த நாள் வாழ்த்துகள் ஆரம்பமாகும்போது தான் "பத்தனாவத்தை" பஸ் வரும், அவனின் தேவதையை சுமந்து கொண்டு.

அவனது அலுவலகம் முதல் மாடியில் இருக்கிறது. அவன் ஜன்னலோரம் நின்று கொண்டு "பத்தனாவத்தை" எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். பிறந்த நாள் வாழ்த்து பாடல் முடிந்து, பிறந்த நாள் காணும் பிஞ்சுகளின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இன்னும் பஸ்ஸைக் காணோமே? மனம் பரபரக்கிறது. 'சந்திரா ஸ்டோர்' வளையில் நிலைகுத்திப் போயிருந்த அவன் விழிகளில் திடீரென மகிழ்ச்சி கொப்பளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், அவன் எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்த அந்த பஸ், அவனது இதயராணியை சுமந்து கொண்டு வந்து நின்றது.

பஸ்ஸிலிருந்து மாணவர்கள் தான் முதலில் இறங்கு கின்றனர். தொடர்ந்து மாணவிகளும் இறங்குகிறார்கள்.

எங்கே அவள்? விழிகள் பரபரக்கின்றன.

அதோ அவளும் இறங்குகிறாள். புத்தகங்களை மார்போடு அணைத்துக் கொண்டு, உதட்டில் புன்னகை தவழ, ரோட்டை ஒட்டியிருந்த நடைபாதையில் தோழிகளுடன் நடந்து வருகிறாள். அவளைப் பார்த்தவுடன் அவனது உடலில் ஒரு இன்பப் பரவசம் அலையாய்ப் பாய்கிறது.

புத்தகங்களை மார்போடு அணைத்துக் கொண்டு, தெருவிலே பார்வையைப் புதைந்தபடி, கூட வரும் தோழியிடம் எதையோ சொல்லி சிரித்தபடி அவள் நடக்கிறாள். அவள் சற்று திரும்பி இடது புறமாக மாடியை பார்த்தால், அவன் அங்கு ஜன்னலோரம் நின்று கொண்டு அவளை விழிகளால் விழுங்கிக் கொண்டிருப்பதை பார்த்து விடுவாள். அவள் ஏன் பார்க்கப் போகிறாள்? அவனது அலுவலக அறை அங்குதான் இருக்கிறது என்பது அவளுக்கு தெரிய மாட்டாதே!

அவளெதிரில் போய் வரவேண்டுமென்று அவனது இதயம் தவிக்கிறது. முகவரியைக் கொடுத்துவிட்டோம். இரண்டு நாட்கள் பொறுத்திருந்து நேரில் போய் கதைக்கும் மங்கள 'சடங்கை' வைத்துக் கொள்வோம். அவன் தனக்குள்ளே சமாதானமாகிக் கொள்கிறான். அலுவலக வேலைகளில் சற்று தடுமாற்றமாகத் தான் இருக்கிறது.

எந்த ஒரு பிரச்சினையையும் தன்னுள் வாங்கி சீரணித்து நிதானமடைந்து விடும் வயது அவனுக்கு இல்லையென்றாலும் அந்த மனப்பக்குவம் அவனிடத்தில் நிறையவே இருந்தது.

ஆம்ஸ்ட்ரோங் நிலவில் கால் பதிக்குமுன்னரே, வாழ்க்கைச் செலவினங்கள் (விலைவாசி) செவ்வாயை எட்டிப்பிடித்து விட்ட நிலையில், யாருமே உழைப்பில் இல்லாமல் ஒரு குடும்பத்தை எப்படி கட்டியாள்வது?

அப்படியொன்றும் பெருந் தொகையான பென்ஷன், ராஜூவின் தந்தை மிஸ்ரர் ஜெயசிங்கத்திற்கு கிடைத்து விடவில்லை தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்சன் பணம் கரைவதற்குள்ளாக, மூத்த மகள் கமலாவிற்கு திருமணத்தை தடபுடலாக நடத்திவிட்டார். எத்தனை நாட்களுக்கு தபாலாபிஸில் போட்டு வைத்திருந்த பணம் காணும்? வீட்டிலே ஒன்பது உயிர்கள்.

வாழ்ந்து கெட்ட குடும்பம் என்று சொல்வார்களே! அதை இவர்களின் குடும்பத்தை பார்த்துத்தான் சொல்லியிருப்பார்களோ? அவன் சிறப்பாக வாழ்கிறானே என்ற மனப் பொருமல், தனது கையாலாகாத மைத்துனருக்கு ஒரு வேலை வாய்ப்பு. அதன் மூலமாக தனது இருபத்தைந்து வயதைக் கடந்து விட்ட மகளுக்கு ஒரு திருமணம் என்கிற விடிவு காலம். இவ்விரு நிகழ்ச்சிகளும் செவ்வனே நிறைவேற மிஸ்ரர் ஜெயசிங்கத்திற்கு கிடைக்கச் செய்ய வேண்டிய ஒரு மாத வேலை நீக்க நோட்டீஸ்தான் ஒரே வழி என்பதை கண்டக்டர் தர்மலிங்கம் புள்ளி வைத்தாற்போல் கணக்கு போட்டுக் கொண்டு, தனது கைங்கரியங்களில் இறங்கினார். அவரது அதிர்ஷ்டம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தி விட்டார்.

ஒன்றின் அழிவிலே மற்றொன்றின் உயிர்ப்பு. ஒருவரின் வீழ்ச்சியிலே மற்றொருவரின் எழுச்சி. இந்த கேவலம் தானே இன்றைய உலகில் சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாகிக் கொண்டிருக்கிறது.

எப்படியோ, யார் யாருடைய கை கால்களைப் பிடித்தோ ராஜூவிற்கு இத்தனியார் நிறுவனத்தில் வேலை வாங்கிக் கொடுத்து விட்டார் மிஸ்ரர் ஜெயசிங்கம்.

கண்ணுக் கெட்டாத தூரத்தில் ராஜூவிற்கு உத்தியோகம். ஏதோ கை நிறைய சம்பளம் கிடைக்கிறதென்றாலும், வவுச்சரில் கையொப்பம் இடும் தொகையில் 75% வீதம் தான் கையில் கிடைக்கிறது.

வீட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை, பலவிதமான உணர்வு கிளர்ச்சிகளுக்கு காரணமாகி விடுகிறது.

உழைப்பிற்கு பின் ஏற்படும் உடல் அசதியும் சோர்வும் தந்தைக்கு சினத்தைத்தான் ஏற்படுத்தி விடுகிறது. அந்த சினம் அநாவசிய நச்சரிப்புகளுக்கும், காரணமற்ற கோபதாபங்களுக்கும் அதனாலேற்படும் மன அவசத்திற்கும் காரணமாகி விடுகிறது.

சதா புறுபுறுத்துக்கொண்டே இருப்பதின் மூலம் தந்தை ஓரளவு மன அமைதி கொள்கிறாரோ, என்னவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அவரது இயல்பாகவே மாறிப் போய் விட்டிருந்தது.

இந்த தொலைதூர வாழ்க்கைகூட ஒரு சந்தோஷத்தைத் தான் தருகிறது. வீட்டில், பற்றாக்குறையால் ஏற்படும் நச்சரிப்புகள், சண்டைக் குழப்பங்கள், உரத்த சத்தக் குரல்கள் எல்லாம் இப்போது செவியில் புகாத வகையில், இந்த தனியான வாழ்க்கை ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையாகத் தானிருக்கிறது. அண்ணன், தங்கை, தம்பி என்ற பாச உறவுகள் மட்டும் அப்போதைக்கப்போது மனதில் ஒருவித ஏக்கத்தை ஏற்படுத்தி விட்டுப் போகின்றன.

என்னதான் குடும்ப பொறுப்பு தன்மீது விழுந்தாலும், சராசரி மனிதனுக்கு இருக்க வேண்டிய ஆசாபாசங்கள் மனித உணர்வுகள் அற்றுப் போய்விட வில்லை. வாழ்க்கையில் சற்று சிரமம் குறைகிறது என்று தெரிந்ததுமே மற்ற இன்ப நுகர்ச்சிகள் தங்களின் ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்ளத்தான் முயற்சிக்கின்றன.

சதா குடும்பக் கஷ்டங்களை நினைத்து, நினைத்து வேதனை பட்டுக் கொண்டிருக்க எந்த மனிதன் தான் விரும்புவான்? உள்ளத்திற்கும் ஒரு மாற்றம், ஓர் அமைதி, ஒரு சாந்தி தேவைதானே? அதுவரையில் பிழை இல்லைதான்.

இந்த சாந்தி, அமைதி, மாற்றம் எல்லாம் அவளைக் காதலிப்பதன் மூலம் தான் கிடைக்கும் என்ற அழுத்தமான எண்ணம் இந்திராணியைச் சந்தித்த பிறகு ஏற்பட்டதில்தான் பிழை இருக்கிறதோ?

இந்திராணியிடமிருந்து அவன் எதிர்பார்த்த கடிதம் வந்தபிறகு, ஒவ்வொரு நாள் மாலையும் அவர்களின் சந்திற்பிக்காக வந்து போய்க் கொண்டிருந்தது. பிரக்டீஸ், ஈவ்னிக் கிளாஸ் என்ற காரணங்கள் புதிது புதிதாய் முளைத்து, அவளை மாலை வேளையில் அவனைச் சந்திப்பதற்காக தள்ளிக் கொண்டு வந்து விடுகின்றன. ஆபிஸ் முடிந்ததும் அவனோடு கதைத்துக் கொண்டு, தேயிலை மலையில் சிறிய பாதையில் தோளோடு தோள் உரசிக் கொண்டு நடக்கையில் சொர்க்கமே காலடியில் கிடப்பதைப் போன்ற உணர்வில் திளைத்துக் கொண்டிருந்தனர்.

இளமையில் ஏற்படும் இயற்கை உணர்வின் துடிப்பும், வேகமும் சிந்திச் சிதறும் பருவந்தானே அவர்களுடையது. அவர்களின் இணைப்பில் ஒரு வேகம் இருப்பது இயற்கைதானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆரம்பத்தில் ஏங்கித் தவித்த, எதிர்பார்த்த சாந்தி கிடைக்கத்தான் செய்தது. அமைதி பிறக்கத்தான் செய்தது. திருப்தி இருக்கத்தான் செய்கிறது.

காலம் எந்தவிதமான குழப்பமும் இன்றி, எதற்கும் ஏங்காமல், காதல் சேற்றில் காலை விடாமல் தன் பாட்டில் ஓடிக் கொண்டிருக்கிறது.

ராஜூவின் மாதச் சம்பளம் நூற்றைம்பது ரூபாய்தான். மாதா மாதம் தவறாமல் நூறு ரூபாய் வீட்டிற்கு அனுப்பிக் கொண்ருக்கின்றான். இந்த நூறு ரூபாய் எட்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு எத்தனை நாட்கள் போதியதாகும்?

பாட்டி திடீரென தனது சொந்த பந்தங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, உலக பந்தங்களை அறுத்தெறிந்து விட்டு அமைதியில் மீளாத்துயிலில் ஆழ்ந்தபோது செலவிற்கு வீட்டில் பணமா இருந்தது? தனது பிதுர் சொத்தான இரண்டேக்கர் 'காணி'யைத்தான் அடகு வைத்து, கல்லு கருமாதி செய்ய முடிந்தது, ஜெய சிங்கத்தால்.

அதன் பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைச் சமாளிக்க, அடகு வைத்த நிலத்தின் ஒப்பிணையின் பேரில் மேன்மேலும் கடன் வாங்க வேண்டிய நிர்பந்தந்தான் ஏற்பட்டது.

நிலமிருக்கிறது என்ற தெம்பில் இலங்கை பிரஜா உரிமையையும் பெற்றுக் கொண்டாகிவிட்டது. ஆனால் இப்போது, அவர்களின் வாழ்க்கையில் ஒரு பிடிப்பும், ஒரேயொரு நம்பிக்கையுமான நிலமும் ஈட்டில் முழுகிப்போய் விடும் பயங்கர நிலை உருவாகிவிட்டது.

இப்படியொரு நிலைமையைத்தானே அவனது மாமா தர்மலிங்கம் எதிர்பார்த்திருந்தார்.

எப்படியோ, ஒரு துப்பு வைத்து, தனது மகளை ராஜூ மணமுடித்துக் கொண்டால் அவர்களுக்கு கணிசமான ஒரு தொகையும், நிறைய சீதனமும், நிலத்தை மீட்டும் தருவேன் என்ற விடயத்தையும் ஜெயசிங்கத்தின் காதில் லேசாக போட்டு வைத்தார்.

தர்மலிங்கம் அப்படியொன்று தூரத்து உறவில் சொந்தம் கொண்டாடுபவரல்ல. ஜெயசிங்கத்தின் இரண்டாவது இளைய சகோதரிதான் தர்மலிங்கத்திற்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தக் கலப்பு. தாய்வழி உறவு. அவர்களின் ஒரே மகள்தான் சகுந்தலா. அப்படியொன்றும் அழகில்லையென்று சொல்லிவிட முடியாது. இலேசான கருமை சாயலில் மாநிறம். தோட்டத்துப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்ட பிறகு மேலே பட்டணத்திற்கு சென்று படிக்கவில்லை.

ராஜு நல்லவன். படித்தவன். கம்பனியில் உத்தியோகம் பார்ப்பவன். கண்ணுக்கு லட்சணமானவன். கை நிறைய சம்பளம் வாங்குகிறான். இதைவிட ஒரு செல்வம் தேவையில்லையென்று தர்மலிங்கம் நிச்சயித்து விட்டார்.

தோட்டப் பகுதிகளில் இப்படியான மாப்பிள்ளைகளுக்கு அதிக கிராக்கிதான். எல்லோருக்கும் ராஜுவை பிடித்துப் போய்விட்டது. தர்மலிங்கமும் ஜெயசிங்கமும் இணைந்து திருமண ஏற்பாடுகளை கவனிக்க கூட்டு நடவடிக்கைகளில் இறங்கி விட்டனர்.

அலுவலக பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் அந்த தந்தி வந்தது.

"அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லை. சீக்கிரம் வரவும்."

தந்தியை படித்துப் பார்த்த ராஜு துடித்துப் போனான். மானேஜரிடம் தந்தியைக் காட்டி, ஒரு வாரம் லீவு பெற்று 10.30க்கு புறப்படும் "பதுளை எக்ஸ்பிரஸ்" பஸ்ஸிற்கு தான் வர முடிந்தது.

மனம் நிலை கொள்ளாத தவிப்புடன் வீட்டு வாசற் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்த அவனை "வாப்பா" என்றவாறு சிரித்த முகத்தோடு அவனது அன்பு அம்மாதான் வரவேற்றாள்.

"அம்மா! என்றவாறே அவளை கட்டிப்பிடித்துக் கொண்டே, என்னம்மா உடம்பிற்கு?"

எனக்கு ஒண்ணுமே இல்லை ராஜு. நான் பூரண சௌக்கியத்துடன் தான் இருக்கேன்."

"பின்னே ஏன் கடுமையான சுகவீனம் என்று தந்தி வந்தது?"

உன்னை உடனே வரச் செய்வதற்காக உன் அப்பா செய்த வேலை."

"போங்கம்மா....! என்ன விளையாட்டு இது? நான் எப்படி துடிதுடித்துப் போனேன் தெரியுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிப்பா. உன் அப்பாவிற்காக குளிப்பதற்கு வாளியில் சுடுதண்ணி வச்சுருக்கேன். போய் குளிச்சிட்டு வா, சாப்பிடலாம்."

அம்மா கதை கதையாய்ச் சொன்னாள். குடும்ப கஷ்டங்களை. நிலம் ஈட்டில் முழுகிப் போய்விடும் ஆபத்தையும் குறிப்பிட்டாள். திருமணத்திற்காக காத்திருக்கும் இரு சகோதரிகளைப் பற்றியும் சொன்னாள்.

தெரிந்ததுதானே! இதையெல்லாம் ஏன் அம்மா சொல்லிக் கொண்டிருக்கிறாள்?

"இதுக்கெல்லாம் என்னை இன்னும் என்ன செய்யச் சொல்றீங்க. எங்காவது போய் கொள்ளையடிக்கவா?"

"ஏம்பப்பா இப்படி கோபப்படுறே? ஒங்க மாமா சகுந்தலாவோட அப்பா இதுக்கெல்லாம் ஒரு யோசனை சொன்னார்."

"என்ன சொல்லியிருப்பார்? சகுந்தலாவை நான் கட்டிக் கொண்டால், கடனெல்லாம் தீர்த்து விடுகிறேன், என்று சொல்லியிருப்பார். அப்படித்தானே?" எகத்தாளமாய்க் கேட்டான், ராஜு.

"ஏம்பா, ஒனக்கு அதில் இஷ்டமில்லையா?" அம்மாவின் குரலில் உற்சாகம் சட்டென காணமாற் போய் விட்டிருந்தது.

"முடியாது. எனக்கு விருப்பமில்லை." சரேலென எழுந்து தோட்டத்திற்குள் போய் நின்று கொண்டான். பூஞ்சிக்காய் (பீன்ஸ்) கொடியொன்று பற்றி படர கொழுவின்றி காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தது. ஆட்டுக்குட்டியொன்று கற்பாறையில் நின்று கொண்டு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. அங்கே இந்திராணி நிற்பதைப் போன்ற பிரமை. என்னைக் கைவிட மாட்டீர்களே எனப் பரிதாபமாக இந்திராணி கேட்பதைப் போலிருக்கிறது.

"இல்லை. இல்லை. கைவிடவே மாட்டேன்." அவன் தன்னை மறந்த நிலையில் சற்று உரத்த குரலில் சொல்லி விடுகிறான்.

"எப்பப்பா வந்தே?" மாமா தர்மலிங்கம் வருகிறார்.

"கொஞ்ச நேரத்திற்கு முன்னாடிதான் வந்தேன்."

"கடையால வர்றன். அப்போது நான் வரட்டா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா போய் விட்டார்.

சகுந்தலாவும் அத்தையும் வந்து பார்த்து விட்டு போனார்கள். ஓ! சகுவும் சற்று கவர்ச்சியாகத்தான் இருக்கிறாள். "இந்துவின் அழகிற்கு முன்னால் இவளெல்லாம் எந்த தூசுக்கு?"

சாப்பாடு ஆயிற்று. உடலும் மனமும் ஆயாசப்பட்டது. கட்டிலில் படுத்தான்.

"என்னப்பா தூங்கிட்டியா?" அம்மா வருகிறாள். தனது இரண்டாவது முயற்சி என்ன பலனைத் தரப் போகிறதோ என்று எண்ணியவாறே வருகிறாள். அவனை ஏன் வரச் சொன்னார்கள். அந்த விடயத்தில் இதுவரை என்னென்ன காரியங்கள் நடந்தேறின என்றெல்லாம் கூறி முடித்தாள்.

ராஜு பதிலேதும் பேசாமல் அம்மா சொல்வதை முழுதும் கேட்டுக் கொண்டான். அவனது சிந்தனை குழம்பிப் போகிறது. ராஜுவிற்கு உண்மை நிலவரம் புரிய ஆரம்பிக்கிறது. குடும்பத்தின் இன்றைய நிலையை மாற்றுவதற்கு வேறு வழியே இல்லையென்பதும், இந்துவை மறந்துதான் ஆகவேண்டுமென்ற யதார்த்தம் உறைக்கத் தொடங்கிவிட்டது.

இதற்காக இந்துவை கைவிட முடியுமா? அவள் இல்லாமல் தான் வாழ முடியுமா? அவளில்லாத வாழ்க்கை எத்துணை கொடுமையானதாக இருக்கும்? அவளைப் பிரிய வேண்டுமென்ற எண்ணமே இவ்வளவு வேதனையைத் தருகிறது என்றால் நடைமுறையில் அது எத்தகைய துயரத்தைத் தரும்? இந்தப் பிரிவை அவள் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறாள்?

ராஜுவின் கடமையுணர்வு சிறிது சிறிதாக மேலோங்குகிறது. குடும்பத்தில் மூத்தவன் என்ற நிலையில், அவன் குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் சுட்டிக் காட்டுகிறது.

கடமைக்கு முன்னால் எந்தக் காதலும் தோற்றுத்தான் போகுமோ?

இப்போதைக்கு அவன் தான் இந்தக் குடும்பத்தின் ஆணிவேர். அவனது நிழலில்தான் அவனது குடும்பம் வாழ வேண்டிய நிர்பந்தம். அவன் தனது சுயநலத்திற்காக, தனது மகிழ்ச்சிக்காக, 'சகு'வை மணந்து கொள்ளாவிட்டால் அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் இருள் மூடிப் போகாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவனை இடறி விழச் செய்துதான் முன்னுக்கு வர முயற்சிக்கும் இன்றைய உலகில் அந்தக் கம்பனி உத்தியோகம் எத்தனை நாளைக்கு? இன்னும் ஏழு நாட்களில் ஈடு திருப்பாவிட்டால் இரண்டேக்கர் காணியும் முழுகிப் போய்விடும். பிறகு இருப்பிடத்திற்கு எங்கே போவார்கள்? அந்த இரண்டேக்கர் காணிக்குள் தானே அந்தக் குடும்பத்தின் நம்பிக்கை, எதிர்காலம் அனைத்துமே முடங்கி இருக்கிறது? அந்த ஒரேயொரு பற்றுக்கோடும் போய்விட்டால்.... போய்விட்டால்...?

ராஜூவிற்கு நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

கடமைக்காக, காதலைத் தியாகம் செய்தேயாக வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்குள் தான் தள்ளப்பட்டு விட்டதை எண்ணி வேதனையில் குமைகிறான்.

ராஜூ தன் திருமணத்தோடு, இடமாற்றமும் பெற்றுக் கொள்கிறான்.

இந்திராணி ஈவ்னிங் கிளாசிற்கு போகிறேன் என்று வந்தவள் தனது சிநேகிதி வீட்டிற்குப்போய் அரட்டை அடித்துக் கொண்டிருந்து விட்டு, சரியாக ஐந்து மணிக்கெல்லாம் தான் வழக்கமாக ராஜூவை சந்திக்கும் இடத்தில் நிற்கிறாள்.

நேரம் கரைந்து கொண்டிருக்கிறது. அவள் மனம் தவிக்க ஆரம்பிக்கிறது. 'அவரை எங்கே காணோம்' இன்னும் ஏன் வரவில்லை?'

நேரம் செல்லச் செல்ல அவள் பொறுமை இழந்து விடுகிறாள்.

நெஞ்சுக்குள் தவிப்பு கொந்தளிக்கிறது. அவர் எங்கே? அவர் எங்கே? மனம் பிதற்றுகிறது. அவன் பணிபுரியும் கிளை அலுவலகம் நோக்கி நடக்கிறாள்.

ஆபீஸ் பூட்டிக் கிடக்கிறது.

'அவர் எங்கே? ஆபீஸ் வேலையாக, அவசரமாக எங்காவது போயிருப்பாரோ?' இருக்கட்டும் நாளைக்கு பேசிக் கொள்கிறேன். ஒரு இனம் புரியாத வேதனையுடன், தனக்குள் ஏற்படுத்திக் கொண்ட சமாதானத்துடன், தவித்த இதயத்துடன் வீட்டிற்கு போக பஸ் ஏறுகிறாள்.

மறுநாளும் அதே நிலைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தடுத்த நாட்களிலும் ஏமாற்றமும் வேதனையும் தான்.

எங்கே போனார்? தவிப்பு எல்லை மீறுகிறது. இன்று அவரது ஆபீஸிற்கே போய் விசாரித்தால் என்ன?

ஒரே நபர் அலுவலகம் அது. நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் பைலை புரட்டிக் கொண்டிருக்கிறார்.

"சார்."

அவர் நிமிர்ந்து பார்க்கின்றார். என்ன என்று வினவுவதைப் போல புருவங்கள் உயர்த்துகிறார்.

"இதற்கு முன்னால் இங்கே வேலை பார்த்தவர்...."

"ஓ, ராஜுவைக் கேட்கிறீர்களா? போன வாரம் அவரது அம்மாவிற்கு சுகவீனமென்று தந்தி வந்ததாம். புறப்பட்டுப் போனவர் மேலும் இருவார லீவ் பெற்றுக் கொண்டாராம், ஹெட் ஆபிஸில்."

"சார் அவர் எந்த ஊர்...."

"தெரியாதும்மா."

அவளுக்கு வாய்விட்டு அழவேண்டும் போல் இருக்கிறது. தொண்டைக் குழிக்குள் பந்தாய் அடைப்பது போன்ற உணர்வு. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டே, ராஜு அறை எடுத்து தங்கிக் கொண்டிருந்த கடைக்குச் சென்று அங்கிருந்த கேஷியரிடம் வினவுகிறாள்.

ராஜுவின் தம்பி என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வந்து அறையைக் காலி செய்துவிட்டு போனதாக அவர் சொன்னதும் வானமே இடிந்து தன் தலையில் விழுந்ததைப் போன்று உணர்ந்தாள். அவளால் எதையும் சிந்தித்துப் பார்க்க இயலவில்லை. சிந்தனை குழம்பி அப்படியே தன்னை மறந்து நிற்கிறாள். கண்கள் கலங்கி இரண்டு துளிகள் கன்னத்தில் வழிகின்றன.

"ஏன் தங்கச்சி அப்படியே இடிஞ்சபோய் நிற்கிறீங்க?" கேஷியரின் கேள்வி அவளை தன்னுணர்வு பெற வைக்கிறது. ஒன்றுமில்லையென்ற தளர்ந்துபோய் நடந்து வெளியே வருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு வேளை அப்படியிருக்குமோ? என்னை ஏமாற்றி விட்டுத்தான் போய் விட்டாரோ?"

அவரது வீட்டு முகவரியைக் கூட நான் வாங்கிக் கொள்ளாமல் போனேனே. ஐயோ இறைவா அவரை நம்பி என்னையே என் நிறையையே பறிகொடுத்து விட்டேன். பைத்தியம் பிடித்தவளைப் போன்று வீட்டை அடைந்தவளை, மேசையில் கிடந்த கடிதம் வரவேற்றது. அனுப்பியவர் முகவரி இல்லை. அவள் பெயருக்கு வந்திருந்தது. அவசர அவசரமாக பிரித்து படிக்கிறாள்.

ராஜூதான் எழுதியிருந்தான். தனது கடமைக்காக காதலை தியாகம் செய்கிறேன் என்றும், அவளைத் தன் சிந்தனையிலிருநது எதுவுமே பிரிக்க இயலாதென்றும், தன்னை மன்னித்து மறந்து விட்டு வேறொருவரை மணந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்றும் எழுதியிருந்தான். தனக்கு இப்படியொரு ஏமாற்றம் ஏற்படும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. தனது இருப்பிட முகவரியைக் கூட குறிப்பிடாமல், திட்டம் போட்டு தன்னை ஏமாற்றி விட்டதாகவே அவள் குமைந்து போகிறாள்.

கடந்த ஒரு மாதமாக 'குளிக்கவில்லை' என்ற உண்மை காலையில் தானே உறுதியானது. இனி என்ன செய்வது? எத்தனை நாட்களுக்கு தன் உண்மை நிலையை தன் தந்தையிடமும் தனயனிடமும் மறைத்துக் கொள்ள முடியும்?

எத்தனை உறுதிமொழிகள்? எத்தனை சத்தியங்கள்? இன்று அவையெல்லாம் என்னவாகின?

அப்பா, அண்ணா உங்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்? உங்களுக்கெல்லாம் நான் துரோகம் செய்து விட்டேன். நான் இனி எப்படி வாழமுடியும்? எனக்கு வாழ்வே வேண்டாம். நான் போகிறேன். இந்த ஏமாற்றுகார உலகில் நான் வாழ விரும்பவில்லை. ஏதோ வெறி கொண்டவளைப்போல ரயில் பாதையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறாள். தூரத்தே ரயில் வந்து கொண்டிருக்கிறது. 'உடரட்ட மெனிக்கே' ரயில் ஓர் அசுரப் பசியுடன் பயங்கரமாக ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்து கொண்டிருக்கிறது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உரம்

ஏறத்தாழ ஆறு வருடங்களுக்கு முன் தவறணையாக இருந்த அந்தப் புதுமலை இன்று டி.ஆர்.ஐ. என்று சொல்லப்படுகிறது. நாசியில் வழியும் மூக்குச்சளியை புறங்கையாலே துடைத்துக் கன்னம் முழுவதும் அதனைக் கோடிட்டுக் கொள்ளும் நான்கு வயதே நிரம்பிய கோபாலன் முதல் தோட்ட நிர்வாகிகள் ஈறாக அந்தப் பெயர் நுழையாத வாயில்லை.

டி.ஆர்.ஐ. 2024 தேயிலைச் செடிகள் மொழு மொழுவென வளர்ந்திருக்கின்றன. மலைச்சரிவிற்கேற்ப 'சுலோப்' வெட்டப் பட்டுள்ள அச்செடிகள் குளுமையான பசுந்தளிர்களை எக்கச் சக்கமாய் பிரசவித்து, மகிழ்ந்து, குலுங்குகின்றன.

பெக்டரியை பின்னணியாகக் கொண்ட அந்த மலையுச்சியிலிருந்து பள்ளத்தைப் பார்த்தால் அதன் கொள்ளை அழகில் உள்ளத்தை நழுவவிட்டு....! பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் காட்சி தரும் அச்செடிகளின்மேல் உருண்டு சென்றாலென்ன என்று தவிப்பாய் இருக்கும். அத்தனை ரம்மியமான அழகு!

பார்ப்பதற்கு அழகாய்த்தான் இருக்கிறது.

தேயிலைச் செடிகளுக்கு ஊடாக கால்களை வைத்து நடக்கிறபோது நிச்சயமாய் உயிர்போய்த்தான் வரும். அச்செடிகள் பரவலாக படர்ந்து ஒன்றோடு ஒன்று பிண்ணிப் பிணைந்து....!

ஆமாம் கால்கள் கூசுகின்றன. வயிறு என்று ஒன்று இருக்கும் வரை கூச்சத்தைப் பார்த்தால் முடியுமா?

"ஏ, அங்கே என்னடா செய்யுறீங்க? உரத்தை அள்ளிக் கொண்டு சுருக்கா வாங்கோ!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரக் குரலில் கட்டளையிடும் சின்னக் கங்காணி முருங்கை மர நிழலில் நிற்கிறார். யூரியா உரத்தை சாக்குகளில் நிரப்பித் தோளிலே சுமந்த வண்ணம் தொழிலாளர்கள் வருகின்றனர்.

அவர்களின் உடல்களை உரப்பௌடர் போர்த்தி இருக்கின்றன. பிசுபிசுக்கும் வியர்வையில் அவ்வுரம் நனைந்து வெள்ளை நிறத்தில் பட்டை பட்டையாக காட்சியளிக்கின்றது, சிவனடியார்களை நினைவுறுத்துவது போல்.

அவர்கள் வலது கையிற் பிடித்துள்ள 'சிகரெட் சிண்டு' மூடியினால் உரத்தை அள்ளி தேயிலைச் செடிகளுக்குள் இம் விடாது இறைத்துச் செல்கின்றனர்.

ஆச்சரியமாய் இருக்கிறதா?

ஆமாம், தோட்டத் தொழிலாளர்களின் ஒவ்வொரு செயலுமே நமக்கு நிச்சயமாய் ஆச்சரியத்தைத்தான் தரும்!

கால்களை வைக்க கூச்சம் தரும் அவ்விருண்ட செடிகளுக்குள், பாம்புகள், விஷ பூச்சிகள், இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் எதையும் கண்டு கொள்ளாமல் அனாயாசமாக ஏறியும் இறங்கியும் செல்லும் அவர்களும் மனிதர்கள்தான்!

தோட்ட நிர்வாகத்தின் அதிகாரக் கரங்கள் அவர்களின் குரல்வளையைப் பிடித்து நெறிக்கின்றன. அந்த மரண அவஸ்தையிலே தான் அவர்கள் அப்படி ஓடுகின்றனர். அவர்களை ஓட ஓட விரட்டுகின்றார் சின்னக் கங்காணி.

ஆமாம்! ரோட்டோரம் முருங்கை மர நிழலில் நின்று அதிகாரக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தவர், இப்போது ஏன் திடீரென தேயிலைச் செடிகளுக்குள் ஏறிச் சொல்ல வேண்டும்?

"ஏனா? இதோ பெரிய துரையின் இடுப்பளவு உயர நாய் இரைக்க இரைக்க ஓடி வருகின்றதே, தெரியவில்லையா?"

"ஏய் கங்காணி, இங்கே வா."

பெரிய துரை, உண்மையில் பிழையின்றி தான் தமிழ் பேசுகின்றார். தமிழ் வார்த்தைகளை ஆங்கிலத்தில் படித்த அபரிமிதமான ஞாபக சக்தி.

"எத்தனை ஆள்? எத்தனை ஏக்கர் இன்னக்கி முடிக்க ஏலும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாப்பது ஆளுங்க. நாப்பது ஏக்கர் முடிக்கலாமுங்க."

"ஏய் என்னா இது? நாற்பது ஆளு; நாப்பது ஏக்கர். ஒரு ஆள்; ஒரு ஏக்கர். நீ சம்பளம் குடுக்கிறதா?"

"இல்லங்க தொரே! ஒரு ஆளுக்கு ஒரு ஏக்கராதான் கொடுக்க முடியுங்க."

"ஏய் வெளையாட வேணாம். ஒரு ஆள் ஒண்ணறை ஏக்கர். இன்னக்கி அறுபது ஏக்கர் முடிக்க வேணும்."

"ஐயா, கொஞ்சம் நின்னீங்கன்னா, நா ஆளுகளை கூப்பிட்டு சொல்லிப் புடுவேங்க."

"சுப்பா! கந்தா" என்று உச்சஸ்தாயியில் வெளிப்பட்ட அந்த அலறல் மலை முகடுகளில் மோதி எதிரொலிக்கின்றது. துரைக்கு அது நாரசமாய் ஒலித்திருக்க வேண்டும். காதுகளைப் பொத்திக் கொண்டார். சின்னக் கங்காணியை பார்க்க பரிதாபமாக இருக்கிறது.

"எல்லோரும் இறங்கி கீழே வாங்கடோய்."

வியர்க்க விறுவிறுக்க கீழே இறங்கி வெண் மணற் பாதைக்கு வந்தவர்கள் அமைதியாய் நிற்கின்றனர். செல்லனின் கால்களில் உள்ள ஊறற் புண்களிலே தேயிலை வாதுகள் கீறிக் கிழித்திருக்கின்றன. புண்களில் ஒழுகும் நிணத்தை அட்டைகள் உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கின்றன. இரத்தத்தை நன்கு உறிஞ்சிடும் அட்டைகள் கருஞ்சிவப்பு நிறத்தில் புளியங் கொட்டைகளைப் போல் உண்ணிகளாய் ஒட்டிக் கொண்டிருக் கின்றன. அவற்றை அகற்ற அவன் பகீரதப் பிரயத்தனப் படுகிறான். துரையின் பூனைக் கண்கள் அதைப் பார்த்து விட்டன. அவன் முகம் அருவெறுப்பால் சுளித்துக் கொள்கிறது. 'பிளடி நான்சென்ஸ்' - அவனது உதடுகள் முணுமுணுக்கின்றன.

காற்றிலே கரைந்து சென்ற அமில வார்த்தைகள் செல்லனின் செவி வழியே புகுந்து நெஞ்சத்தை குடைந்திருக்க வேண்டும். அமைதியாக நிமிர்ந்த அவன் துரையைப் பார்க்கின்றான். துரை அவனைப் பார்க்காததுபோல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறான்.

அவனது இதயக் கடலில் எண்ண அலைகள் மோதி மோதி கலைந்திருக்க வேண்டும். அந்த தாக்க வேகத்தில் அவன் கண்கள் கலங்கின. கீழ் உதட்டை மடித்து கடித்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக தொழிலாளர்களும் அவனைப் பார்க்கின்றனர். அவர்களின் பார்வையிலே வெளிப்படும் கனிவு அவனுக்கு சற்று ஆறுதலைத் தருகின்றது.

"ஐயா சொல்றார். ஒரு ஆளுக்கு ஒன்டரை ஏக்கர். இன்னைக்கு அறுபது ஏக்கர் முடிக்க வேணுமாம்."

"முடியாது, மத்த தோட்டங்கள்ல எல்லாம் ஒரு ஏக்கர்தான் ஒரு ஆளுக்கு. நாங்க ஒண்ணரை ஏக்கர் போட முடியாது."

செல்லன் தானா இப்படி துரையை எதிர்த்துப் பேசுகிறான்? துரையிடம் இப்படி எதிர்த்துப் பேசினால் விளையும் விபரீதங்களை அவன் அறியாதவனா? சக தொழிலாளர்கள் அவனுக்கு ஏற்படப் போகும் அவல நிலைக்காக இரக்கப் படுகின்றனர்.

ஏற்கெனவே தாக்கத்திற்குள்ளாகி நொந்து போயிருந்த செல்லனின் உள்ளம் இரண்டாவது தாக்கத்தில் எரிமலையாய்க் குமுறுகின்றது. தாக்கத்திற்கு எதிர்தாக்கம் புரியும் உணர்ச்சி வேகத்தில் வார்த்தைகள் வெடித்துச் சிதறிவிட்டன.

வெள்ளைக்கார துரையின் முகம் செக்கச் செவேலன்று சினத்தால் சிவந்தன.

"ஏய், எதுத்துப் பேசவானாம். வேலை செய்ய முடியாட்டி நீ வீட்டுக்குப் போ! மத்த ஆள் அந்த வேலையைச் செய்வான்."

"ஆனால், யாருமே வேலை செய்யத் தயாரில்லை."

ஐக்கியத்தின் வலிமையை உணர்த்தும் அந்த வீரியமிக்க வார்த்தைகள் அதிகாரத்திற்கும், அதிகாரத்தின் வலிமைக்கும் ஆட்டம் கொடுத்து விடுகின்றன. ஒரு நொடிக்குள் துரை சுதாரித்துக் கொள்கிறான். இயல்பாக பேச எத்தணிக்கிறான்.

"ஓ. எல்லாரும் வீட்டுக்குப் போ, இன்னக்கி பேரில்லை. ஒரு மாசம் வேலை இல்லே, உங்க நாப்பது பேருக்கும்."

எல்லோருடைய உடலும் உள்ளமும் ஒருமுறை குலுங்கின. செல்லனுடைய மலை போன்ற கம்பீரம் கூட அந்த ஒரு கணத்திலே செத்துவிட்டது. ஒரே மாதம் வேலை இல்லா விட்டால்...? அவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அத்தனை பயங்கரம். ஒரு கொத்து (படி) அரிசி ஒரு ரூபாய் நாற்பது சதம். முப்பது நாள் பெயர் போடும் (வேலை) போதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை வயிற்றுக் கஞ்சி; இந்த நிலையில் ஒரு மாதம் வேலை இல்லையென்றால்?" எல்லோருக்கும் செல்லன் மீது சற்று கோபம் வரத்தான் செய்தது. நியாயந்தானே?

"ஒண்ணரை ஏக்கர் போடச் சொன்னா போட்டுட்டு போறது. இரண்டு மணி நேரமோ இரண்டரை மணி நேரமோ கூடப் போகும். போயிட்டு போவுது."

"ஒண்ணரை ஏக்கர் போட முடிஞ்ச ஆள் மேலே போ!"

தனக்கு ஆதரவு கொடுப்பவர்கள் யாரும் வேலை செய்ய மாட்டார்கள் என்று செல்லன் நினைத்தான். அடுத்த கணமே நிலைமை எப்படி தலைகீழாய் மாறிவிட்டது என்று அவனுக்குப் புரிந்தது. செல்லனைத் தவிர்ந்த ஏனைய தொழிலாளர்கள் தேயிலைச் செடிகளுக்குள் ஏறிச் சென்றனர். சின்னக் கங்காணியும் தலை குனிந்து அவர்களைப் பின் தொடர்ந்தார்.

செல்லன் இப்போது தனியன். இப்போது மட்டுந்தானா? துரை ஒருமுறை அவனைச் சுட்டெரித்து விடுவதைப் போல் முறைத்துப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"நீ போ! உனக்கு இன்னைக்கு பேரில்லை. ஒரு மாசம் வேலை இல்லே!"

செல்லனால் அவனது அப்போதைய நிலையை புரிந்து கொள்ள முடியவில்லையோ, என்னவோ? அவன் நினைவு தெளிந்து திரும்பிப் பார்க்கின்றான்.

மலையடி வாரத்தில் துரையின் வெள்ளை நிற கார் போய் மறைவது நன்றாகத் தெரிகிறது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. உலகத்திற்கு விடிகிறது....!

காரியாலய படிகளை விட்டு கீழிறங்கிய நாகம்மாள் விம்மி விம்மி அழுகிறாள். அவளது கண்கள் அழுது அழுது சிவந்திருக்கின்றன. கன்னங்கள் வீங்கி இருக்கின்றன. அவளது முந்தானையும் ரவிக்கையின் முன்புறமும் கண்ணீரைச் சுவைத்து சுவைத்து பருகிக் கொண்டிருக்கின்றன. நாகம்மாளின் தாயின் கண்கள் நீரைச் சொட்ட சக்தியற்றிருக்கின்றன.

நெஞ்சினுள்ளே குமையும் வேதனையும் துயரமும் கண்களின் வழியாய்க் கசிகின்றன. கால ஓட்டத்தால் கருத்துச் சுருங்கிய கன்னங்களிற் கண்ணீரின் கோடுகள் காய்ந்து விட்டிருக்கின்றன.

"அழுவாதே நாவம்மா, அழுவாதே!"

தனது மகளின் அழுகையை நிறுத்த வெகுவாக முயற்சிக்கிறாள் நாகம்மாளின் தாய்.

சுமார் நானூறு தொழிலாளர்களுடன் சேர்ந்து வாழும் அவர்கள் இப்போது இருவராக மாத்திரமே வேதனைப்படும் போது ஆறுதல் கூற ஒரு மூன்றாவது உள்ளம் அங்கு இல்லை. இந்த நிலையில் சக தொழிலாளர்கள் கைவிட்டு விட்டார்கள் என்ற பிரமையில் அவளது மன வேதனை இன்னும் அதிகரித்தது. அப்படி நினைப்பதற்குகூட அவளுக்கு அச்சமாக இருக்கிறது.

இறந்த காலம் நிம்மதியாகவும், நிகழ்காலம் குழப்பமும் வேதனையும் நிறைந்ததாகவும், எதிர்காலம் தெளிவில்லாமல் இருள் சூழ்ந்ததாகவும் இருக்கிறது.

தங்களை இந்நிலையில் வாழவிட்டுச் சென்ற அண்ணனையும் தந்தையையும் நினைத்தபோது நாகம்மாளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை பன்மடங்காகப் பெருகுகிறது. ஒரு ஆண்மகனின் துணையில்லாத குறையை அவள் இப்போது நன்குணர்ந்து வெதும்புகிறாள்.

உழைக்கும் வர்க்கத்தின் உள்ளம் மிகமிகப் பண்பட்டது. நீதியின் வலிமையிலும் நேர்மையின் விளைவிலும் அபார நம்பிக்கை கொண்டது. அந்த நம்பிக்கை உந்தித் தள்ள, நீதிக்கு வெற்றி கிடைக்கும் என்ற உறுதியான எண்ணத்தில் நீதி கேட்டுச் சென்றனர், அந்த தாயும் மகளும்.

ஆனால், துரை கொடுத்த அந்த நீதியின் முடிவு நெஞ்சின் அடித்தளத்தில் தீக்குழம்பையல்லவா வாரிக் கொட்டிவிட்டது.

'நீதி கேட்டு வந்ததாலல்லவா இந்த நிலை ஏற்பட்டது! நடப்பது நடக்கட்டும் என்று சும்மா இருந்திருந்தால்...!

தங்கள் இருவர் மீதே அடக்க முடியாத கோபமும் ஆத்திரமும் அர்த்தமற்றுப் பொங்கின.

தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தீர்ப்பை விட அதன் பின் ஏற்படப் போகும் விளைவுகளை அவர்களால் எண்ணிப் பார்க்கவே இயலவில்லை.

நடந்து முடிந்து போன நிகழ்ச்சிகளால் கனத்துப் போயிருந்த அந்த தாயின் முதிய நெஞ்சு இனி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை, எதிர்நோக்கியுள்ள வாழ்க்கைப் பிரச்சனைகளை மானசீகமாகப் பார்க்கையில் அவற்றின் விசுவரூபத்தைக் கண்டு மலைத்து விடுகிறது.

அந்த மலைப்பில் வேதனையின் தாக்கம் சற்று அழுத்தமான தாயிருக்கும். அந்த அழுத்தத்தில் அவளின் பலவீனமான உள்ளம் திணறிப் போகிறது.

அது...

புதிய அனுபவம்.

சுமார் அறுபது அறுபத்தைந்து வருட வாழ்க்கையில் முன்னொரு போதும் ஏற்பட்டிருக்காத மன அவஸ்தை.

காலனின் கொடூர கரங்கள் தனது தாலியைப் பறித்துக் கொண்ட போதும், வேலைத் தளத்தில் வெட்டப்பட்டு வீழ்ந்த சவுக்கு மரம் தன் மகனை இரையாக்கிக் கொண்ட போதும் இத்தகைய துன்பம் எழவில்லை என அவள் சொல்லிச் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகிறாள். அழுவதைத் தவிர அவளால் வேறென்ன செய்ய முடியும்?

தன்னைப் பற்றி அவள் கவலையடையவில்லை. தனது ஒரு சாண் வயிற்றிற்கு பிச்சை எடுத்தாவது காலத்தை கடத்தி விடலாம்.

ஆனால் அவளது கவலையெல்லாம் தனது ஒரே மகளைப் பற்றியது தான். இருபத்தொரு வயதை எட்டிப்பிடிக்க துடித்துக் கொண்டிருக்கும் நாகம்மாவை நினைக்கும் போதுதான் மனம் குழம்புகிறது. குணபாலாவைப் போன்ற எத்தனை மனித மிருகங்கள்...?

தனது உடலுலைப்பை எத்தனையோ வருடங்களாக இந்த தோட்ட நலனுக்காக அர்ப்பணித்து விட்டு, தனது கணவனையும், மகனையும் தேயிலைச் செடிகளுக்கு உரமாக்கிய சொந்தத்தில் நீதி கேட்டுச் சென்ற அவளுக்கு கிடைத்த நீதி அவளிதயத்தைத் தான் கசக்கிப் பிழிகிறது. விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னால் நம்பிக்கை சுடர்விட்ட அவள் விழிகளில் இப்போது ஏமாற்றமும் அவநம்பிக்கையும் கண்ணீராய் பொங்கி வழிகின்றன. எதிர்கால வாழ்க்கையை எண்ணி மறுகி நைந்திருந்த அந்த முதிய நெஞ்சு நம்பிக்கை தவிடு பொடியான நிலையில் உளைந்து குமைகிறது.

நீதி, நேர்மை, நம்பிக்கை அனைத்தும் செத்து நாசமாகி விட்ட நிலையில் தன்னைத் தவிர எந்தவித உறவிலும் பற்றுக் கோடில்லாத மகளை நினைத்த போது அந்த தாயுள்ளம் பொருமுகிறது.

சேறும் சகதியுமாகக் குழம்பிய குட்டையைப் போல் அவள் உள்ளமும் குழம்பிக் கிடக்கிறது. அந்த உள்ளத்தில் தெளிவான ஒரு ஆறுதலான சிந்தனை தோன்றவே இல்லை. தெளிவற்ற அவ்வுள்ளம் மேலும், மேலும் தெளிவற்ற சிந்தனைகளையே பிரசவிக்கிறது. அந்தச் சிந்தனைகள் கிளைத்துப் படரும் போது தங்கள் வாழ்வே சூனியமாகி விட்டது என்ற நினைப்பில் அவள் அவளாக இல்லை. துயரத்தின் உருவமாகவே தோற்றம் தருகிறாள்.

காலையிலிருந்து நண்பகல் வரையில் தேயிலை மலையிலே ஏறி இறங்கி 'மட்டம்' வெட்டிய களைப்பில் விளைந்த உடற்சோர்வும், மத்தியானம் சாப்பிடாத பசிக்கிறக்கமும், நெஞ்சிலே விழுந்த அடியின் வேதனையுமாக... நாகம்மா அயர்ந்து உட்கார்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வீட்டு செல்லம்மாள் கேட்டாள்.

"நாகம்மா துரை என்ன சொன்னார்?"

நாகம்மாள் சிரிக்கிறாள். வறட்சி நிறைந்திருந்த அந்த சிரிப்பில் விரக்தியும் வேதனையும் இழையோடுகிறது. நீரின்றி வாடிய செடியின் மொட்டு, பருவ வேதனையால் மலர்ந்த வாடிய மலர் போன்றிருந்தது - அந்த சிரிப்பு, அதில் குமிழியிடும் வேதனை...

அவளின் மன வெளியில் நேற்று நடந்த நிகழ்ச்சி கனவாய் விரிகிறது.

'கவ்வாத்து' வெட்டப்பட்ட தேயிலைச் செடிகள் கிளைத்து படர்ந்து பச்சைப் பசேலென செழிப்பாய் வளர்ந்திருந்தன - பசும் புல் வெளியைப் போல.

செடிகளை, மட்டக் கம்புகளை மேலே போட்டு ஒரே மட்டத்திற்கு கத்தரித்துக் கொண்டிருந்தனர், மட்டம் வெட்டும் இளம் பெண்கள்.

"சுலோப்... சுலோப்.... சுலோப் வச்சு வெட்டு."

வெகு வேகமாக வந்த சூபர்வைசர் குணபாலாவின் குரல் ஓங்கி உயர்ந்த மலைச்சிகரங்களிற்பட்டு எதிரொலிக்கின்றது.

"ஏய் கங்காணி! நீ நேத்து வேல பார்த்ததா? அந்த சின்ன ரோட்டுக்கு மேலே - வெள்ளை மண் கேவுக்கு இங்கிட்டு அந்த முருங்கை பள்ளத்திலே சுலோப் இல்லே. ஒரு ஆள் போடு அங்கே சுலோப் வெட்ட."

அதிகார மிடுக்கில் அலறுகிறான் குணபாலா.

கங்காணி முத்தன் திரும்பிப் பார்க்கிறான் யாரைப் போகச் சொல்லலாம்? 'வள்ளி... ஆறாயி.... ம்... அவளுவ போகமாட்டள்வ; வாயடிப்பா!'

மறுபுறம் சற்று திரும்பி மேலே பார்க்கின்றான். அவன் கண்ணில் நாகம்மா தட்டுப்படுகிறாள்.

'அதோ அந்தச் சவுக்கு மரத்தடியில் நின்று மட்டம் வெட்டுபவள் நாகம்மாவைப் போலல்லவா தோன்றுகிறது..... ஆமாம் அவளே தான்!'

'நாகம்மாவைப் போகச் சொல்லலாம். பாவம். அப்புறாணிப் பொண்ணு. எதுத்துச் பேச வாய் வராது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாகம்மா நீ போய் அந்தச் சுலோப்பை சரிபடுத்திட்டு வாவே.'

மட்டக்கம்பை தேயிலைச் செடிமேல் போட்டு அதன் மட்டத்திற்கு வாதுகளைக் கத்தரித்துக் கொண்டிருந்த நாகம்மாள், திரும்பி கீழே பார்க்கிறாள் - கங்காணி முத்தனை.

பிறகு மௌனமாகக் குனிந்து அந்தச் செடிகளின் வாது(கிளை)களைக் கத்தரித்தபின், கத்தரியையும், மட்டக் கம்பையும் கைகளில் எடுத்துக் கொண்டு வெண் மணற் பாதைக்கு வருகிறாள்.

'அதோ, வள்ளி அந்தச் சவுக்கு மரத்தினை அணைத்துப் பிடித்தவாறு, பக்கத்தில் உள்ள கல்மேல் காலை வைத்து மேலே ஏறிச் சொல்ல முயற்சிக்கிறாள். அணைத்துப் பிடித்துள்ள கையின் பிடி சற்று நழுவி, கால் சற்று சறுக்கினாள்....!'

அதற்கு மேல் அவளால் நினைத்துப் பார்க்க நெஞ்சம் நடுங்கியது.

'இன்னும் கொஞ்ச நேரத்துல முடிச்சிட்டு வேற மலைக்குப் போயிடுவாங்க, இந்த 'நெற' மட்டுந்தானே! நா மட்டும் அந்தப் பள்ளத்தாக்கில போயிட்டு ஒத்தையா மட்டம் வெட்டனும். எதுக்கெடுத்தாலும் இந்த கங்காணி வாயில நாவம்மாதான். அந்த வள்ளிய இல்லாட்டி ஆறாயியக் கூப்பிட்டு சொன்னா, என்ன?'

முணுமுணுத்தவாறே நடக்கிறாள்.

தனிமையில் தான் மாத்திரம் அந்த பள்ளத்தாக்கில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதே என எண்ணிய போது அவளுள்ளத்தில் வேதனை படருகிறது. சற்று அச்சமாகக் கூட இருக்கிறது. விதியே என நொந்து கொண்டவளாய் அதோ மட்டம் வெட்டிக் கொண்டிருக்கிறாள்; அந்த அசடு, பாவம்!

'ஏய் நாவம்மா! அந்த மே வாதை ஆறு அங்குலம் வச்சு வெட்டு, கீ' வாதை கொஞ்சம் கொறை!'

குணபால அவளை நோக்கிச் சிரித்தவாறே கீழே இறங்கி வருகிறான்.

நிமிர்ந்து பார்த்த நாகம்மாள் நடுங்கி விடுகிறாள். அவளிதயம் வேகமாக துடிக்கிறது. முகம் குப்பென்று சிவக்க... உடல் வியர்த்துக் கொட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அவளை நோக்கி முன்னேறுகிறான்.

'அவனது கண்கள் ஏன் அப்படி... பசி கொண்டு வெறி பிடித்த புலியைப் போல?'

நாகம்மாள் நிலை தடுமாறுகிறாள். இனம் புரியாத மன அவஸ்தையில் அவள் தவிக்கிறாள். அவளது சிந்தனை இயக்கமின்றி இருப்பது போல், உலகமே சலனமின்றி அவளைஉற்று நோக்குவது போன்ற பிரமை.

'ஓடுவதா! சத்தம் போடுவதா?'

ஏன் அவளால் எதுவுமே செய்து கொள்ள முடியவில்லை? தன்னையே இழக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறாளா?

அதோ, நாகம்மாவைத் தாவிப் பிடித்து கீழே தள்ளி....

புலியின் வாயிலகப்பட்ட புள்ளிமான் துள்ளினால் என்ன? துடித்தாலென்ன?

நினைவுத் தொடர் அறுந்துவிட, கனவுக் காட்சியும் மறைந்து விடுகிறது.

நெஞ்சின் அடித்தளத்திலிருந்து பொங்கும் அழுகையை தடுக்கும் முயற்சியில் கீழுதட்டைக் கடிக்கிறாள்.

'ஸ்... ஆ, அம்மா!' என முனகிக் கொள்கிறாள். இரத்தம் கன்றிப் போயிருந்த அந்தக் கீழுதட்டைத் தடவிவிட்டுக் கொண்டே அவள் விசித்து விசித்து அழுகிறாள்.

சிறிசேன!

அவன்தான் அந்த தோட்டத்துரை - பெரியதுரை எல்லாமே!

அந்த தோட்டமே அவனுக்குச் சொந்தமானதுதான்.

அவனுடைய மனைவியின் உறவுக்காரன் தான் குணபாலா!

குணபாலா மட்டுமென்ன? அங்கு அதிகாரம் புரியும் அத்துணை பேரும்...! ஆமாம், குடும்பமே!

இன்று இரண்டு மணிக்கு நாகம்மாவை ஓபீஸிற்கு வரச் சொல்லியிருந்தார், துரை - விசாரணைக்கு.

காலையிலிருந்து நண்பகல் வரை உடல் களைக்க வேலை செய்துவிட்டு 'அரைப்பெயர்' வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்த நாகம்மாளும், அவளது தாயும் சாப்பிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சினுள்ளே குமைந்த வேதனையில் பசி ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

ஓபீஸ் திறந்திருந்தது.

உள்ளே துரை சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். அவனது தலைக்கு மேலே வளையம் வளையமாகச் செல்லும் சிகரெட் புகை காற்றிலே கரைந்து அதனோடு ஒன்றிச் சங்கமித்துக் கொள்கிறது. அவனுக்குப் பக்கத்தில் சூப்பர்வைசர் குணபாலா.

ஓபீஸிற்கு வந்த தாயும் மகளும் ஓபீஸ் யன்னலண்டை போய் நிற்கின்றனர். ஓபீஸிற்குள் தொழிலாளர்கள் அனுமதிக்கப் படுவதில்லை.

'நி நாவம்மாவுட்டு அம்மா கருப்பாயி இல்லையா?' துரை கேட்டான்.

விசாரணை ஆரம்பமாகியது.

கைகளிரண்டையும் சேர்த்து குவித்துத் துரையை வணங்கிய கருப்பாயி, 'ஆமாமுங்க, கருப்பாயி தாங்க' என்றாள்.

'நீ கொண்டு வந்த கேஸ் நெசமா?'

"ஆமாமுங்க நெசந்தானுங்க."

"நெசமின்னு சொல்ல ஒனக்கு சாட்சி இருக்கா?"

"இல்லங்க, நாவம்மா தனியாத்தான் மட்டம் வெட்டிக் கிட்டிருந்திச்சு."

"என்னா இருந்திச்சு? அப்புறம் என்னா நடந்திச்சு?"

"............"

மௌனம், காலத்தோடு சேர்ந்து கரைகிறது.

"அது எத்தினை மணிக்கு நடந்திச்சு?"

"நேத்து ரெண்டு மணி இருக்குமுங்க."

"ரெண்டு மணிக்கு நடந்ததா? அந்த நேரம் சூப்பர்வைசர் வேறு மலையில வேல பாத்தாங் சொல்லி, அந்த மலைக் கங்காணி சொல்றாங்,"

"இல்லைங்க சாமி! சூப்போசர், அந்த நேரம் அங்கே தான் போனாருங்களாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏய் நா' இல்லே சொல்றது. நீ இருந்திச்சு சொல்றதில்லையா? பொய்க்காரி...."

'நாங் கொண்டு வந்து வச்ச ஆள். அவென் அப்புடி செய்ய மாட்டான். ஓ மவதான் அவெங் கையைப் பிடிச்சி இழுத்திரிக்கி. அதை யாரோ பாத்தாச்சி. இப்ப நீ பொய் வழக்கு சொல்ற தில்லையா?

"இல்லைங்க சாமி...!"

"என்னா இல்லே? இன்னைக்கி இவெங் சொல்றதி. நாலைக்கி என்னைச் செல்றதி... செவ்வாய்க் கெழமை வா. பத்துச் சீட்டு வாங்கிட்டு போகேலும்."

"ஐயோ. அப்புடியெல்லாம் சொல்லிடப்படாதுங்க. நீங்க தாங்க எங்கள காப்பாத்தனும்". கைகளிரண்டையும் குவித்து குனிந்து வணங்கி... கெஞ்சினாள் கருப்பாயி.

அவள் பின்னால் விம்மல் ஒலி கேட்கிறது.

"சீ. நான்சென்ஸ். கெட் அவுட்."

சிறிசேனா சொல்லவில்லை, சீறினான்.

நெஞ்சிற்குள்ளேயே குமைந்து குமைந்து புழுங்கிக் கொண்டு விம்மிய நாகம்மாள் தேம்பினாள், சிறு குழந்தையைப் போல. அவளால் பேச முடியவில்லை. தொண்டைக்குள் இரும்புக் குண்டு சிக்கினாற்போல ரண வேதனை.

"சாமி எங்களுக்கு வேற தண்டனை ஏதுங் குடுங்க. நீங்க சொன்ன மாதிரி மட்டுஞ் செய்திடாதீங்க."

இறைஞ்சினாள். காலனிடம் தனது உயிரைக் கவர்ந்திட வேண்டாம் என்பதைப்போல.

அநீதி இழைக்கப்பட்டு, நீதி கோரி வந்தவர்களே இப்போது மன்னிப்பு கேட்கின்றனர். தண்டனையை குறைத்து வழங்குங்கள் என்று மன்றாடுகின்றனர். இந்தச் சமூக அமைப்பு அவளை அப்படி இறைஞ்சும்படி குரல் வளையைப் பிடித்து நெரிக்கின்றது. சமுதாயத்தின் ஓரங்க மான அவர்களுக்கு நேர்ந்த கதிதான் நாளை நமக்கும் என அது ஏன் உணரவில்லை?

உணர்ந்து கொண்டும் செயலாற்றக் கூடிய வலிமை அந்தச் சமுதாயத்திடம் இல்லையா? அல்லது அதைப் பிரயோகித்து பலனடையக் கூடிய மனப்பக்குவத்தை அடையவில்லையா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீ, சத்தம் போடாதே! போ வெளியே!"

அவள் கேட்பது அவனுக்குச் சத்தம் போடுவதாக பட்டால், அவனது இந்தக் கூப்பாடு....?

"ஏய் இங்கே அழ வேணாம். அங்கே போ!" விரட்டினான்.

தாயும் மகளும் ஓபீஸ் படியை விட்டு கீழே இறங்கி நின்றனர்.

"நாவம்மா லாம்பை பத்து!"

அவளின் தாயின் வார்த்தைகள் மீண்டும் நனவுத் தொடரை அறுத்தது.

"நேரம் போனதே தெரியவில்லை."

நாகம்மாள் எழுந்தாள். உடற்சோர்வும் உள்ளச் சோர்வும் அவளைத் தள்ளாடச் செய்தன.

அவர்களின் எதிர்காலம் இருண்டதைப் போல உலகமே இருண்டு கிடந்தது. இந்த அஸ்தமனத்திற்கு விடிவு உண்டு, ஆனால்...?

தட்டுத் தடுமாறி அடுப்பிற்கு மேலே ஆணி அடித்து தொங்க விடப்பட்டிருந்த தகர விளக்கை கொளுத்தினாள்.

அந்த நான்கு சதுர அறையிலே தேங்கிக் கிடந்த இருளை விரட்ட அந்த விளக்கின் சுடர் அசைந்து, அசைந்து போராடுகிறது.

ஆனால் அங்கு முடங்கிக் கிடக்கும் அந்த இரு உயிர்களின் ஆசைகளையும், நம்பிக்கையையும் தீய்த்து, அவர்களின் வாழ்விலே சூழ்ந்த அந்தகார இருளை எந்தச் சுடர் அகற்றும்?

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. நீர்க்கோலம்

வாழ்க்கை முழுவதும் அந்த வெம்மை மிக்க நினைவு களினாலே உருக வேண்டியதிருக்கிறது. கடந்த கால நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றையும் தனித்தனியாக இதய மேடையில் நிறுத்தி, உறுத்து, உறுத்துப் பார்த்து ஏதோவொரு வகையில் திருப்திபட்டுக் கொள்கிற மனோ வேகம். நினைத்த மாத்திரத்தில் மறந்துவிட்டு, மற்ற நினைவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிகிற நினைவுகளா அவை? ஒரு சிலருக்கு அது சாத்தியமாகலாம். அவனுக்கு, அவனது மென்மையான இதயத்திற்கு அது சாத்தியமில்லை. சதா அவளைப் பற்றிய நினைவுகளில் ஏங்கி, அந்த எண்ணச் சுழல்களில் தன்னை மூழ்கடித்துக் கொள்வதே அவனுக்குப் பொழுதுபோக்காய் போய் விட்டது. நெஞ்சம் முழுவதும் அவளைப்பற்றிய எண்ண நினைவுகள் தோல்வி கண்ட மனதின், நிராசைகளை மீண்டும் மீண்டும் நினைவு தளத்தில் இருத்தி அசைபோட்டு, ஏதோ ஒரு வித திருப்தியைக் காண்கிற இதய முனைப்பில் அவன் ஆழ்ந்து போகிறான்.

பீச்சிற்கு ஒன்று, சினிமாவுக்கொன்று, ஹோட்டலிற்கு ஒன்று என நேரமொரு பெண்ணுடன் தொடர்பு கொள்ளும் ஆண்களுக்கு மத்தியில்தான் அவனும் கூசி, கூசி வாழ்கிறான். எத்தனையோ பெண்கள் அவன் வாழ்க்கையில் குறுக்கிட்டிருந்த போதிலும், எந்தப் பெண்ணும் அவன் மனதில் தாக்கத்தையோ, சஞ்சலத்தையோ ஏற்படுத்த வில்லை. அவன் படித்த இலக்கியங்கள், அவன் உள்ளத்தை செம்மைப்படுத்தி இப்படி 'மனிதனாக' மாற்றியிருக்கின்றன. சேணம் பூட்டிய குதிரையாய் அவன் மனம் அவளைச் சுற்றியே ஓடிக்கொண்டிருக்கிறது. சுருங்கச் சொன்னால் அவனைச் செதுக்கிய இலக்கியங்களே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது இன்றைய மன அவசத்திற்கு காரணமாகின்றன. ஒருவனுக்கு ஒருத்திதான் என்ற பண்பை, உள்ளத்தில், உணர்வுகளில் அழுத்தமாகப் பதிந்து விட்டன. அம்பிகாபதி, அமராவதி காதலும், காளிதாசரின் சாகுந்தலமும் இதயத்தில் நிலைத்து வாழ்கின்றன. அவனுக்கு அந்த இலக்கியங்களில் அப்படியொரு ஈடுபாடு. அவர்களின் அமரத்துவ காதலைப் போலவே தனது காதலும் இருக்க வேண்டுமென ஆசைப் பட்டவன். அந்தச் காதலின் புனித தன்மையில் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தவன்.

அப்போது அவனுக்கு ஒன்றும் அதிகமான வயதில்லை தான். ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலமது. ஏதோவொரு 'தவணை' முடிந்து பாடசாலை ஆரம்ப தினத்தன்று, அவள் வனமாலா புதிய மாணவியாக வகுப்பிற்குள் வந்திருந்தாள். இன்றைய இயந்திர மயமான காதலைப்பற்றி எதுவுமே அறிந்திராத அந்த பிஞ்சு மனதில் அவள்மீது அன்பு துளிர்த்தது. அவள் மீது அவனுக்கு ஒரு கவர்ச்சி படர்ந்தது. அவளிடம் வெளிப்பட்ட ஏதோ ஒரு கவர்ச்சி அவன் உள்ளத்தை கவர்ந்து இழுக்கிறது. சற்று பெரிய மான்விழிகளில் ஒரு வித காந்தக் கவர்ச்சி. அடிக்கடி அவளைப் பார்க்கத் தூண்டியது.

அவன் மொனிட்டராக (வகுப்பு தலைவன்) இருப்பது எவ்வளவு உதவிகரமாக இருக்கிறது? அவள் வகுப்பில் தோழிகளுடன் கதைக்கிறாள் என்ற சாக்கில் அவளைக் குட்டுவது போல, செவியை கிள்ளுவது போல அவளைத் தொட முடிகிறதே! அப்போதெல்லாம் உள்ளத்திற்குள் ஒரு இன்பக் கிளுகிளுப்பு - ஏற்படத்தான் செய்தது. காலப்போக்கில் அந்த அன்பு காட்டாற்று வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த அன்பை, தனது பார்வையால், பேச்சால், செய்கையால் அவன் வெளிப்படுத்தவும் தவறவில்லை.

சின்ன வனமாலா - அவளது முழுப்பெயர்.

இவளும் படிப்பில் புலிதான். முதலாம் இடம் அவனுடையது. அந்த இடத்தை யாரும் தட்டிப் பறித்துவிட முடியாது. இரண்டாம் இடத்திலிருந்து நான்காம் இடத்திற்குள் அவள் வந்து விடுவாள். பெண்களுக்குள் அவள் முதலாம் இடத்தில் இருப்பாள். அவர்கள் இருவரையும் இணைத்து வைப்பதில், தன்னையறியாமலே பெரும் பங்கு வகித்தவர் ஆசிரியர் திருச்செல்வம் அவர்களே! ஆண்கள் பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வரிசையில் முதலாவதாக அவனை அமர்த்தி வைப்பார். வகுப்பை கவனித்துக் கொள்ள, அவனுக்கு உதவியாக, உதவி மொனிட்டராக அவளை நியமித்தார். அவனுக்கு இதயத்தில் மகிழ்ச்சி பொங்கியது. ஆசிரியரை மனமாற வாழ்த்திக் கொண்டான். இருவரும் நன்றாக படிப்பதால் ஆசிரியர்கள் மத்தியில் அவர்களிருவரின் மேலே அலாதி பிரியம் இருந்தது.

மொனிட்டர்களாக இருந்தபடியால் மட்டுமல்ல படிப்பிலும் கெட்டிக்காரர்களாக இருந்தபடியால், இருவரும் எந்த வேலையையும் ஒழுங்காக செய்து கொள்ளும் தன்மை, பணிவு, பேச்சு வழக்கங்கள் எல்லாவற்றிலுமே தனி முத்திரை பதிக்கப் பெற்றிருந்தார்கள். அனைத்து ஆசிரியர்களும் ஆண்களுக்குள்ளே வேலுவையும் பெண்களுக்குள்ளே வனமாலாவையும் உதாரணம் காட்டிப் பேசுவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இருக்க வில்லை. அவள்மீது அவனுக்கிருந்த அன்பின் பிரவாகம், இது போன்ற பல நிகழ்வுகளால் வீரியமடைந்து கொண்டிருந்தது.

இப்போதெல்லாம் அவள் தொடர்பான பல நிகழ்வுகள் எண்ணக் கடலில் அலைகளாய் பேரிரைச்சலுடன் எழுந்து மோதிக் கலைகின்றன.

வெறும் நினைவுப் பொருளாக மனதில் பளிச்சிட்டுக் கொண்டிருந்த அவளது உருவம், நாளடைவில் அவனது மனதினின்றும் மறைய முடியாத பசுமரத்தாணியாய்ப் பதிந்து போய்விட்டது. இந்தப் பதிவு அவளைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அவாவையும், ஆசையையும் தோற்றுவிக்க, அவை இப்போது விஸ்வரூபமெடுத்து, அவனது இதயத்தின் அமைதியை சீர்குலைத்துக் கொண்டிருக்கிறது.

அன்று பாடசாலை மாணவ மன்ற கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லா மாணவர்களும் ஏகமனதுடன் 'வேலு'வை செயலாளராக நியமித்தனர். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. உதவி செயலாளராக வனமாலாவின் பெயரை 'உலோகா' பிரேரித்தபோது, பாலா அதை உடனே அனுமதிக்கிறான். மாணவ மாணவியரின் ஏகோபித்த ஆரவார குரலில் அந்த நியமனம் நடந்தபோது, இராமையா வேலுவின் முதுகில் இலோசாக இடித்து கண்ணைச் சிமிட்டினான். வனமாலாவை வேலுவின் கண்கள் பார்த்தபோது மாலாவின் விழிகளும் இவன் மீது பதிந்திருந்ததை நன்றாக உணர முடிந்தது. அவன் தன்னைப் பார்க்கிறான் என உணர்ந்தபோது, அவள் தனது பார்வையை லாவகமாக மறுபக்கம் வீசினாள். குப்பென்று சிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது முகம், குங்கும சிவப்பாய் எவ்வளவு அழகாக இருக்கிறது?

பாலா என்னதான் மாலாவின் பெயரை உணர்ச்சி வேகத்தில் வழிமொழிந்தபோதும், அவர்களை ஆசிரியர்களும் சக மாணவ மாணவிகளும் 'ஜோடி'யாக்குவதை அவனால் சகித்துக் கொள்ள இயலவில்லை. பாலாவின் மனம் பொறாமையால் புழுங்குகிறது. தனது வலையில் அந்தப் புறாவை சிக்க வைக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தை முகம் அப்படியே பறை சாட்டி விடுகிறதே! ஆனால் காலப்போக்கில் வேலுவின் அன்பின் வலிமையையும், மாலாவின் கவனத்தை தன்பால் ஈர்த்துக் கொள்ள இயலாது என்ற உண்மையையும் உணர்ந்து கொண்டபின், வேலுவின் நெருங்கிய நண்பனானதெல்லாம் பிந்திய கதை.

வேலு உண்மையிலேயே ஒரு திறமைசாலிதான். பரந்த சிந்தனையும், சிறந்த சொல்வன்மையும், இலக்கிய ஆர்வமும் கொண்டிருந்ததால் பேச்சுப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் கலந்து கொண்ட போதெல்லாம் 'முதல் பரிசு' அவனுக்குத்தான் கிடைத்தது. இந்த விடயங்களில் மாலா அவனோடு பொருந்தி வரவில்லைதான். குயிலின் குரலைக் கொண்ட அவள் நன்றாகப் பாடுவாள். ஒருமுறை மகாத்மா காந்தியின் நினைவு தினத்தின்போது, அவள் பாடிய பாடலின் இறுதி வரிகள் இன்றும் அவன் செவிகளில் ரீங்காரிக்கின்றன.

**"ஹரே ராம் ஹரே ராம் என்றபடி**
**ஹரனின் திருவடி யடைந்தாராம்"**

என்ற அடிகளில் அவளது சாரீரம் இதயத்தையே கசக்கிப் பிழிவதாக இருந்தது.

"மாலா, இந்தப் பரீட்சையில் நீதான் வகுப்பிலேயே முதலாம் பிள்ளையாக வரவேண்டும், என்ன?"

திருச்செல்வம் மாஸ்டர் கேட்கிறார். அப்போது அவள் 'டக்'கென திரும்பி வேலுவின் முகத்தைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்க்க அடுத்த நொடியில் குனிந்து கொண்டாள். அவளது சிவந்த அதரங்களில் ஒரு புன்னகை அலையாய் நெளிந்து ஒளிந்து கொண்டது.

"என்ன, நான் கேட்டவுடன் வேலுவைப் பார்க்கிறாய்? இன்னும் சிறிது நன்றாக படித்தால், அவனையும் மிஞ்சி விடலாமே, நீ! என்ன, முதலாவதாக வருவாயா, மாட்டாயா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கேள்விக்கு அவளிடம் எந்தவிதமான பதிலும் இல்லை. ஒருவேளை அவனை மிஞ்சுவதற்கு அவள் விரும்பவில்லையோ என்னவோ?

"என்ன, வேலு இவளுக்கு நீ விட்டுக் கொடுக்க மாட்டாயோ?"

"ஐயோ சேர், நானா மறுக்கிறேன். மாலாவால் முடியுமானால் எல்லா பாடங்களிலும் 'A' டிவிசனில் பாஸாகட்டும். முதலாம் இடத்திற்கு வரட்டும். எனக்கு மகிழ்ச்சிதான்!"

அவளது இதயத்தில் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருக்கும் அந்த அன்பும் பாசமும் கால ஓட்டத்தில் ஒரு வலிமையான காதலாகவே பரிணமித்து விட்டது. அவனால் அவளது நினைவை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரு நிமிடமேனும் இருக்க முடியாத நிலை. எப்படியும் தனது காதலை அவளிடம் தெரிவித்து விடவேண்டும் என்ற எண்ணத்தின் தவிப்பு அது. அவள் ஏதோ காரணமாக, ஒரு நாள் வகுப்பிற்குள் வராவிட்டால் அவன் துடிதுடித்துப் போகிறான். "ஏன் வரவில்லை? ஏன் வரவில்லை?" மனம் அரற்றுகிறது. அவளைப் பார்க்காமல், அவளிடம் ஒரு வார்த்தையாகிலும் பேசாமல் அவனால் இருக்க முடியாது.

தனது இதயத்தில் பொங்கி வழியும் அன்பையும், பாசத்தையும் வார்த்தைகளாக்கி காதல் சுவை சொட்டச் சொட்ட தனது உள்ளத்தையே உருகவிட்டு கடிதமாக்கினான். இன்று எப்படியும் அவளிடத்தில் இந்தக் கடிதத்தை சேர்த்து விடுவோம் என்ற எண்ணத்தின் தீவிரம். வகுப்பில் இருக்கும்போதே அவனுக்குள் ஒரு நடுக்கம். இனம் புரியாத தவிப்பு.

மூன்று வருடங்களுக்கு மேலாக மாலாவின் மீது அன்பு மழை பொழிந்த அவனுக்கு, அந்த அன்பை, பாசத்தை கடிதமாக்கி அவளிடம் கொடுக்கும் முனைப்பில் இருக்கும் அவனுக்கு இன்றுதான் இப்படியொரு தவிப்பு. ஒருவித இன்ப அனுபவம். விலைமதிக்க முடியாத மாணிக்கத்தை கால்சிராயில் மறைத்து வைத்திருப்பதைப் போன்ற உணர்வின் தவிப்பு. நீண்ட காலமாக நெஞ்சக் குழிக்குள் புதைத்து, புதைத்து வைத்த அன்பு இன்று பொங்கிப் பிரவாகிக்கிறது. வகுப்பில் நடத்தப்படும் பாடங்கள் எதிலும் மனதை முழுமையாக ஈடுபடுத்த முடியாத பலவீனம். எப்படியாவது மாலாவிடம் கடிதத்தை சேர்ப்பித்து விடவேண்டும். எங்கே, எப்படி எப்போது கொடுப்பது? எத்துணை முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சித்தும் அவளைத் தனியாக சந்திக்க இயலவில்லை. உலோகாவும் சரோவும் எப்பொழுதும் அவளை ஒட்டித் திரிகிறார்கள். ம்... அவர்களுக்கு ஒரு கேடு வராதா? அவளை விட்டும் பிரிகிறார்கள் இல்லையே! அவர்கள் அவளை சில நிமிடங்கள் தனித்து விட்டாலும், அவனை பாலாவும், இராமையாவும் தனியாக விடுவதில்லை. இவர்கள் நண்பர்களாகத் தெரியவில்லை. எதிரிகளாக தோன்றுகிறார்கள். என்னதான் நெருங்கிய நண்பர்களாய் இருந்தாலும் அவர்களுக்கும் அவள்மீது ஒரு கண். மூன்றாவது நபருக்கு இக்கடித விவகாரம் தெரிவதை அவன் விரும்பவே இல்லை. மூன்றாவது ஆள் பார்க்கிறார் என்ற காரணத்திற்காக அவள் இக்கடிதத்தை வாங்க மறுக்கலாம். அல்லது முகத்தில் விட்டெறியலாம். அதனால் தனக்கு அவமானமாகுமே! தன்னுடைய நல் இமேஜ் பாழாகிவிடுமே என்ற எண்ணம் தடை போடுகிறது. மூன்றாவது நபரின் முன்னிலையில் அவள் கடிதத்தைப் பெற்றுக் கொண்டால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் அவளது மன நிலையை எப்படி அறிவது? அந்தக் கடிதத்தின் ஒரு வாசகம் கூட இப்படித்தான் இருந்தது. "மாலா எனது காதலை ஏற்றுக்கொள்ளாவிடில் இக்கடித நிகழ்வு வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். நமது இருவர் உள்ளத்திற்குள்ளே அமிழ்ந்து அழிந்து போய்விடட்டும்."

இந்த வாசகத்தை தனது நடைமுறையிலும் கடைபிடித்த அழுத்தமான உள்ளம் உள்ள அவன் தனது நண்பர்களிடம் கூட கடிதத்தைப் பற்றி ஒரு வார்த்தையை கூட பகிர்ந்து கொள்ளவில்லை.

வகுப்பு நடக்கும்போது கடிதத்தைக் கொடுக்க வாய்ப்பே கிட்டவில்லை. பாடசாலை முடிந்து போகும்போதும் இது முடியாத காரியம். அவள் தனது அக்காவுடனும், இராசலெட்சுமியுடனுமே போகிறாள். அவன் எத்துணை முயன்றும் கடிதத்தை அவளிடம் சேர்க்கவே இயலவில்லை. மற்றவர்களின் முன்னிலையில் கடிதத்தை அவளிடம் கொடுப்பதற்கு மனதில் துணிவில்லை. இந்த அச்சத்திற்கு காரணம் இல்லாமலில்லை. பாடசாலையில் ஆசிரியர்களின் மத்தியிலும் சக மாணவர்கள் மத்தியிலும் நல்லவன், பண்புள்ளவன் என்ற நற்பெயருடன் இருக்கும் செல்வாக்கை, இக்கடித விவகாரத்தால் இழந்துவிட்டு, கெட்டவன் என்ற பெயரைச் சுமந்து கொண்டு அவர்களின் மத்தியில் கூசி கூசி நடக்கத் துணிவில்லை. இது மட்டுமல்ல, இக்கடித நிகழ்வில் தான் மாத்திரமின்றி, அவளது புனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருக்கும் களங்கம் ஏற்படுமே. உண்மையான அன்பின் வெளிப்பாடான இக்காதலுக்கு வேறுவித அர்த்தத்தைக் கற்பித்துக் கொண்டு, காதல் என்ற வார்த்தையையே அருவெறுப்போடு (வெளிப்படையாகத்தான்) உச்சரிக்கிற இச்சமூகம் சொல்லம்பு களாலேயே துளைத்தெடுத்து விடும். வேலு என்று கூப்பிடுவதை விடுத்து, "ஏய் லவ்லெட்டர்" என்று கூப்பிடுவதைப் போல மனதிற்குள் ஒரு நடுக்கம். அது மட்டுமல்ல, ஒரு வேளை இது 'அதிபரின்' கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால், தான் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும். பாடசாலையை விட்டு விலக வேண்டிய நிர்ப்பந்தம் கூட ஏற்படலாம். ஒரு பாவமும் அறியாத மாலாவும் பாதிக்கப்படலாம் என்ற அச்ச உணர்வே கடிதத்தை மற்றவர் அறிய கொடுப்பதில் தயக்கத்தை ஏற்படுத்தியது.

'அவள் தன்னைக் காதலிக்கிறாளா, இல்லையா? தான் அடிக்கடி அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவளும் தன்னைப் பார்க்கிற பார்வைக்கு என்ன பொருள்? தான் புன்னகைக்க அவள் புன்னகைக்கிறாளே! அதன் காரணம் என்ன?' அவன் தனக்குள்ளே வினாக்களை எழுப்பி அதற்கான விடையை அவளிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். எப்பொழுதும் புன்னகை தவழும் அவளது மதிவதனம் தனக்காகத்தான் மலருவதாக அவன் எண்ணி எண்ணி சுகித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் உறுதியாக, அந்தப் புன்னகை தனக்காக மலருகிறதா என அவனால் இனம் கண்டு கொள்ள இயலவில்லை. இந்த சிந்தனைக் குழப்பத்திலிருந்து எப்படி தெளிவு பெறுவது என்றே புரியவில்லை. எப்படியாவது கடிதத்தை அவளிடம் சேர்ப்பித்தே ஆக வேண்டுமென்று தவியாய்த் தவித்தான்.

நாட்கள் வேகமாகக் கரைகின்றன. அவனுக்கு தன் முயற்சியில் வெற்றி காணவே இயலவில்லை. ஒருநாள் அவள் பள்ளிக்கு வரவில்லையென்றால் அவன் துடிதுடித்துப் போகிறான். சுகாதாரவியல் கற்பிக்கும் ஆசிரியர் நவரட்னம் ஒருமுறை உடற்கூறுகளைப் பற்றி படிப்பிக்கும் போது நமது உடலில் இருபத்தினாலாயிரம் கோடி செல்கள் இருப்பதாகச் சொல்லியிருந்தார். இப்பொழுது அவனது உடலில் அத்துணை செல்களும் மாலா, மாலா ஏன் வரவில்லை, ஏன் வரவில்லையென்று கேட்கத் தொடங்கிவிடும். அவளைப் பார்க்காமல், அவளிடம் ஒரு வார்த்தை பேசாமல் ஒரு நாளை அவனால் கடத்த முடியாது. அன்று முழுவதும் அவனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்படும் பாடங்களை கவனிக்க முடியாது. அவளோடு காதல் வார்த்தைகளைப் பேசி கொஞ்சி மகிழ வேண்டுமென்பதில்லை. கட்டித்தழுவி முத்த மழை பொழிய வேண்டுமென்பதில்லை, பார்வை ஒன்றே போதும். அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். ஒரு மாதத்திற்கு முன்னால் எழுதப்பட்ட கடிதம்'கொப்பி கவரின்' (Exercise Note Book) உள்ளே பத்திரமாக இருக்கிறது.

இன்று எப்படியும் இக்கடித்தை அவளிடம் சேர்ப்பித்தே ஆக வேண்டும். பரீட்சை முடிந்துவிட்டது. விடுமுறை அறிவித்து விடுவார்கள். நாற்பது நாட்களுக்குப் பிறகே பள்ளி தொடங்கும். இன்று கடிதத்தை கொடுக்காவிட்டால்....? விடுமுறை நாட்கள் நிச்சயம் நரக வேதனையுடன்தான் கழிக்க வேண்டி வரும். ஒருநாள் பார்க்காமல் இருந்தாலே துடிதுடித்துப் போகும் அவன் விடுமுறை நாட்களை எப்படி கழிக்கப் போகிறான்? அவளிடம் கடிதத்தைச் சேர்ப்பித்து விட்டால் அவளது மன நிலையைப் புரிந்து கொள்ள முடியும். அவளுக்குத் தன் மீது காதல் இருக்கிறதா அல்லவா என்பதை தெரிந்து கொண்டால் மனச் சஞ்சலமே இருக்காது. தன் காதலை அவள் ஏற்றுக் கொண்டால், விடுமுறை காலங்களில் கடிதங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். அவளது நிழற் படத்தையும் பெற்றுக் கொள்ளலாமே...!

இன்று எப்படியும் கொடுத்தேயாக வேண்டும்.

ஆங்கில பாட டீச்சர் விஜயலெட்சுமி அழகழகான கதைகளையெல்லாம் சொல்லியிருக்கிறாள். அக்கதைகளில் வரும் கதாநாயகர்களுக்கு 'வீனஸ்' என்ற காதல் தெய்வம் உதவியிருக்கிறது. அந்த 'வீனஸ்' தனக்கு இப்போது உதவாதா? அவன் ஏங்கினான், தவித்தான். ஆனால், தவித்தென்ன? ஏங்கியென்ன? அந்த 'வீனஸ்' தெய்வம் இறுதி வரை அவனுக்கு உதவாமலே போய்விட்டது.

"டங்... டங்... டங்" மதிய உணவு வேளைக்கு பின் பள்ளி ஆரம்பித்தது.

பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் பிள்ளையாக வந்தமைக்கும், மிக அதிக புள்ளிகளைப் பெற்றமைக்கும் ஆசிரியர்கள் பாராட்டியதில் அவன் மனம் மகிழ்ச்சியில் பூரித்துப் போகவில்லை. யாரையோ பாராட்டுவது போன்று அசட்டை, மனம் குதூலிக்கவில்லை. தனது முயற்சியில் தோல்வியடைந்தமைதான் அவன் இதயத்தைக் குடைகிறது. விடுமுறை அறிவிக்கப்பட்டதுடன் பள்ளி கலைகிறது. கவலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவேதனை, உள்ளச் சோர்வு அனைத்தும் சேர்ந்து கனக்கும் இதயத்துடன் வீட்டை நோக்கி பயணிக்கிறான்.

பிரிவு எவ்வளவு கொடியது?

"நீ, பதுளையில் பிரபலமான 'செண்ட் பீட்ஸ்' காலேஜில் 'சயின்ஸ்' படிக்கப்போ. அப்பாவின் கட்டளையை அவன் மறுக்கவில்லை. அதற்கான முயற்சியில் அப்பா மும்முரமாக ஈடுபட்டிருந்தார். விடுமுறை நாட்களிலேயே, விண்ணப்பித்து, நுழைவுத் தேர்வு எழுதி கல்லூரியிலும் சேர்ந்தாயிற்று.

விடுமுறை முடிந்து பள்ளிகள் தொடங்கப்பட்டு விட்டன.

ஆரம்ப தினத்தில் புதிய மாணவர்களின் பதிவுகள் நடந்தேறி, ஒதுக்கப்பட்ட வகுப்பறைக்குள் செல்ல பணிக்கப் பட்டனர். இன்று முதல் இந்த கிறிஸ்தவ மிஷனரி பள்ளியில் 'சயின்ஸ்' படிக்க வேண்டியதுதான்.

இனி, மாலாவைப் பார்க்க முடியாது. அவளிடம் பேச முடியாது. இந்த விஞ்ஞானக் கல்வியே வேண்டாம். நான் மீண்டும் பழைய பள்ளியிலேயே படிக்கப் போகிறேன் என்று வாய்விட்டு அலற வேண்டும் போலிருந்தது.

இன்று ஆரம்ப தினமாதலால் பள்ளி சீக்கிரமே முடிந்தது. எல்லோரையும் வீட்டிற்குப் போக அனுமதித்தபோது, துடிக்கும் இதயத்துடன் ஆவல் பொங்க, வனமாலாவைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் ஏற்கெனவே படித்த பாடசாலையை நோக்கி, தார்சாலையைத் தவிர்த்து வயல் வரப்புகளில் ஓடி பள்ளியை அடைந்தவன், மாலாவின் மலர் முகத்தை தரிசிப்பதற்காக வகுப்பறையில் நுழைந்து பெண்கள் பகுதியை பார்த்தான். மாலாவை வகுப்பறையில் காணவில்லை.

இவனைப் பார்த்த சக மாணவர்கள், நண்பர்கள் மத்தியில் சிக்கிக் கொண்டவனின் கண்கள் அந்த வட்டக் கருவிழிகள் படபடக்கும் வட்ட முகத்தினை தேடி தேடி அலைபாய்ந்தன. வல்லிபுரம் ஆசிரியரும், திருச்செல்வம் ஆசிரியரும் அவனைக் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தனர். வேறு பள்ளியில் சேர்ந்து விட்டதை சொல்லி, அவர்களின் வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டு நழுவிய அவன் நாலாபுறமும் ஆவலோடு விழிகளை வீசினான். எந்த முகத்தை தரிசிப்பதற்காக, அத்துணை ஆசையோடும் ஆவலோடும் ஓடி வந்தானோ அந்த முகத்திற் குரியவள் அங்கே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே அவள் என்றே மனம் தேடுதே ஆவலாய்...."

பாலா கேலிக் குரலில் பாடினான்.

வேலு அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

பாலாவே தொடந்தான். "வேலு சரியான ஆக்களப்பா நீங்க. ரெண்டு பேருமே கூடிப் பேசிக் கொண்டு பள்ளியை விட்டு விலகிட்டீங்க இல்லையா?"

"என்ன? மாலாவும் விலகிவிட்டாளா? எங்கே போயிருப்பாங்க?"

"ஏன், உனக்குச் சொல்லவில்லையா?" கேர்ள்ஸ் ஹைஸ்கூல்ல சேர்ந்திருக்காள்.

பாலா சரியாக அவளை மோப்பம் பிடித்திருக்கிறான்.

அவளைக் காண வேண்டும் என்ற ஏக்கத்தில் அவன் இதயம் தவியாய் தவிக்கிறது. ஆனால் அவளோ இப்போது வேறு பள்ளிக்கு மாறிச் சென்றுவிட்டாள். என்ன செய்வது? எப்படி சந்திப்பது?

"வேலு நீங்கள் இருவருமே இல்லாமல் வகுப்பறை வெறிச்சோடிப் போய்விட்டது. வகுப்பில் ஒரு களையே இல்லை. சோபையற்று போய் வெறுமையில் வகுப்பறை மூழ்கிவிட்டது." இராமையா சொன்னான்.

பாடசாலையில் பெரும்பான்மையான மாணவர்கள் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்றே உறுதிப்பட நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவனைப் பொறுத்தவரையில் அவர்களின் யூகம் நூற்றுக்கு நூறு சரிதான். ஆனால் மாலாவைப் பொருத்தவரையில்...?

மாலா அவனைக் காதலிக்கிறாளா? அவன் மீது காதலில்லையென்றால் அடிக்கொரு தடவை, இதயத்தையே கசக்கிப் பிழிவதுபோல் பார்க்கும் பார்வையின் அர்த்தம் என்ன?

எத்தனையோ தடவை முயற்சித்துப் பார்த்துவிட்டான். கலை விழாக்களின்போது, விளையாட்டுப் போட்டிகளின்போது... ஹூம் புதுப் புது வடிவம் பெறும் காதல் கடிதங்கள், அவளிடம் சேர்க்கப்படாமலே சுக்கு நூறாகி காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன.

குசுமாவதிக்கு இருந்த தைரியம், உருக்குமணிக்கு இருந்த துணிவு ஆணாகிய அவனுக்கு இல்லாமற் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசுமாவதியை தினமும் சந்திக்கிறான். அவனோடு அவள் சேர்ந்தே பாடசாலைக்கு வருவது சகஜமாகிவிட்டது. அவள் அவனைக் காதலித்தாள். அவள் மற்றவர்களைப் பற்றியோ, அவர்களின் பரிகசிப்பையோ பொருட்படுத்தவில்லை. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தக் காதல் கடிதத்தை, நேரடியாகவே அவள் அவனிடம் கொடுத்தாள். ஆனால் அவனால் அந்தக் காதலை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. தான் ஏற்கெனவே ஒரு பெண்ணை காதலிப்பதாக சொல்லிவிட்டு, அவளது தொடர்பை படிப்படியாகக் குறைத்துக் கொண்டான். இப்போது அவள் கருணாரட்ன என்ற தொழில் நுட்பக் கல்லூரி மாணவனின் தோழியாக வலம் வருகிறாள்.

கான்வெண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்த உருக்குமணியை கல்லூரிகளுக்கிடையில் நடந்த விவாத மேடையொன்றில் அவன் சந்தித்தான். கான்வெண்ட் குழுவிற்கு உருக்குமணியும், வேலு இடம் பெற்றிருந்த குழுவிற்கு வேலுவும் தலைமை தாங்கியிருந்தனர். விவாதத்தில் மட்டும் வேலுவிடம் அவள் தோற்கவில்லை. அவன் வாதாடும் திறமையில் மயங்கி தனது இதயத்தையே இழந்து தானே தோற்றுப் போய் நின்றாள். முடிவில் தனது பாராட்டையும், இதயபூர்வமான மகிழ்ச்சியையும் தெரிவித்துவிட்டு, நான்கே வரியில் எழுதப்பட்ட காதல் கடிதத்தையும் கொடுத்து விட்டே சென்றாள்.

அவனது இதயத்தில் மாலாவைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை. அவளை இதய ராணியாக ஏற்றுக்கொண்ட நெஞ்சம் வேறொரு பெண்ணை நினைக்கவே கூச்சப்படுகிறது. அவள்மீது அவனுக்கிருந்த காதலின் தீவிரத்திற்கு முன்னால் மற்ற பெண்களின் காதல் பொசுங்கிப் போகிறது.

பாடசாலை முடிந்து வீட்டிற்குப் போகும்போது, அவளைப் பார்ப்பதற்காக, தான் செல்ல வேண்டிய திசையை விடுத்து, அவள் செல்லும் எதிர் திசையில் பலமுறை செல்வான். அதிர்ஷ்டவசமாக ஒரு வாரத்தில் இரண்டொரு நாள் அவளைப் பார்க்க முடிந்தது. கதைப்பதற்கு வாய்ப்பே இல்லை. கொழுந்து விட்டெரியும் காதல் தீயில் அவன் நெஞ்சம் உருகிக் கொண்டிருக்கிறது. அந்த வெம்மையை அவனால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அந்த தீ ஜுவாலையில் அவனது உணர்வுகள் கருகிப் போகின்றன. கால ஓட்டத்தில், அந்தக் காதல் தீ அடங்கி நெஞ்சுக்குள்ளேயே நீறு பூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் பரீட்டை (கல்வி திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சை)யில் மிகவும் சிறப்புடன் சித்தி பெற்ற அவன், எத்துணையோ பகீரதப் பிரயத்தனத்திற்குப் பின்னர், ஒரு பெரிய மனிதரின் பணப் பசிக்கு தீனி கொடுத்தபின், கொழும்பில் பிரபலமான இக்கம்பனியில் வேலை கிடைத்தது. மலையகத் தமிழர்களுக்கு வேலை கிடைப்பது என்பது குதிரைகொம்புதான். தமிழர்கள் இரண்டு பெரிய வர்க்கங்களாக பிரித்து வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது வேலுவுக்கு புரிந்தது. ஒன்று மலையத் தமிழன். மற்றொன்று வம்சாவழித் தமிழன். இந்த வம்சா வழித் தமிழன் மலையகத் தமிழனை தீண்டத்தகாதவான நினைத்து செயல்படுபவர்கள். மலையத் தமிழனின் வேலை வாய்ப்பை தட்டிப் பறித்துக் கொண்டவர்கள்.

கொழும்பு நகரின் உயிர்துடிப்பும், அதன் நாகரீக அசுர வேகமும் கூட அவனது மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. அவனுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. இந்தப் புனிதமான காதல் என்றைக்கும் தோல்வியடைவதில்லை. 'புனிதமான காதலுக்கு ஈர்ப்பு சக்தி உண்டென்கிறார்கள். அது உண்மையானால் மாலாவின் மனதில் என்னைப் பற்றிய சிந்தனைகள் ஏற்படத்தானே செய்யும்.'

'என்றைக்காவது ஒருநாள் அவளைச் சந்திக்கத்தான் போகிறேன். அவளை என் வாழ்க்கை துணையாக்கிக் கொள்ளத்தான் போகிறேன். இது நிச்சயம் நடக்கும்' என்று அவன் மனம் சதா கூறிக் கொண்டிருக்கிறது.

அணை கடந்த வெள்ளமாய் பெருகும் காதல் வெள்ளத்தில் இருவரும் மூழ்கி இணைபிரியாது வாழவேண்டுமென நெஞ்சம் தவிக்கிறது. சினிமாவில் காதலர்களைப் பார்க்கும் போதும், கதைகளில் காதல் கதாபாத்திரங்களைச் சந்திக்கும்போதும் அவர்களிடத்தில் தன்னையும் மாலாவையும் இருத்தி கற்பனை செய்து சுகிப்பதும் உண்டு. மீண்டுமொரு முறை அவளை சந்தித்து, அவளது உண்மையான நிலைமை என்ன என்பதை அறிந்த பிறகுதான் மனதில் அமைதி பிறக்கும். அதுவரை மனமென்பது ஓயாத அலைகடல்தான். அவளை மறப்பது என்பது அத்துணை இலகுவானதல்ல. இந்தக் காதல், இனக்கவர்ச்சி, பருவக்கிளர்ச்சி என்றெல்லாம் சொல்லப்படுவதால் ஏற்பட்டதல்ல. வெளிப்புற அழகின் மயக்கத்தில் பரிணமித்த காதலல்ல. இதய உணர்வில், அந்தரங்க புனிதத்தில் விளைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான காதலென்று அவனது நெஞ்சம் அடிக்கடி கூறிக் கொள்கிறது. இது புனிதமானது; அழிவற்றது; சிரஞ்சீவியானது.

நெஞ்சம் என்ற பஞ்சுக் குவியல் இப்போது காதல் தீயினால் கொழுந்து விட்டெரிகிறது. அந்தத் தீயின் ஜுவாயில் அவனது உணர்வுகள் கருக-அவனே வேள்விப் பொருளாய் மாறிப் போகிறான். கால மாற்றத்தின் வேகச் சுழற்சியில் காதலின் தீவிரம் தணிந்து உள்ளுக்குள் நீறு பூத்த நெருப்பாய் கனலுகிறது.

வீட்டிற்குப் போகப் போகிறோம் என்ற எண்ணம் ஏற்பட்டதும் பழைய எண்ணங்களும், அவளைப் பற்றிய நினைவுகளும் மீண்டும் துளிர்த்து நெஞ்சை ஆக்கிரமித்துக் கொண்டன. தீபாவளி பண்டிகையின் விடுமுறையைக் கழிப்பதற்காக வீட்டிற்கு போகும் அவன் நினைவெல்லாம் மாலாவைப் பற்றியதே! நீறு பூத்த நெருப்பாய் நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த காதல், பழமையின் பசுமைகளைக் காண காண மீண்டும் கொழுந்து விட்டெரிகிறது. கொழும்பு நகரின் இயந்திரமயமான வாழ்க்கை, உண்மையிலேயே மனிதனின் மென்மையான மனத்தை சற்று மாற்றித்தான் விடுகிறது. இப்போது மாலாவை எத்தனை பேருக்கு மத்தியிலும் சந்தித்து, பேசிவிட துணிச்சல் இருக்கிறது. கேலி, கிண்டலுக்கும், மான அவமானத்திற்கும் இப்போது இடமில்லை. சூழ்நிலைகள் மாறிவிட்டன. தைரியம் தானாகவே மிகுந்துவிட்டது. அவளோடு கதைத்து தனது இதய வேட்கையை, அவளிடம் வெளிப்படுத்தி, அவளது உள்ளத்தை தெரிந்து கொள்ளக் கூடிய துணிவு இருக்கிறது. அவளுக்காக இந்த உலகையே எதிர்த்து நிற்கக் கூடிய வல்லமை இருக்கிறது. எத்தனை எதிர்ப்பிற்குள்ளும், அவள் விரும்பினால், அவளைத் தன்னுடையவளாக்கிக் கொள்ளும் மனோ வலிமை இருக்கிறது. இந்த துணிவும், வல்லமையும் மனோ வலிமையும் இப்போது எங்கிருந்து அவனிடம் வந்தன?

ஆம்! இப்போது அவன் தன் இரு கால்களாலும் நிற்கிறான். தான் உழைக்கிறோம் என்ற எண்ணம், பொருளாதார பாதுகாப்பு, இவை அனைத்தும் அவனை வெகுவாக மாற்றியிருந்தன. ஒரு புதிய உத்வேகமும், மனவுறுதியும் கொண்ட மனிதனாக மாற்றி யிருந்தன. இம்முறை அவளைச் சந்தித்தே தீருவது. அந்தச் சந்திப்பின் விளைவு அவனுக்குச் சாதகமாக இருந்தால்...! அவனை விட அதிர்ஷ்டசாலி வேறு யாரும் இருக்க முடியாது.

சினிமாவில் பார்க்கும் காதலைவிட, கதைகளிலும், இலக்கியங்களிலும் சொல்லப்பட்ட காதலைவிட, புனிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமென வெறும் வார்த்தைகளாக வெளிப்பட்ட காதலை விட இக்காதல் மேன்மையுடையதாக இருக்கும்.

**"வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீர் என்று"**

வள்ளுவன் பாடினானே அதைப் போல இல்லையில்லை.

**"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று"**

துடித்துப் போகிறானே அதைவிட... அதை விட... இருவருமே காதலில் மூழ்கித் திணறி.... மனம் பட்டாம்பூச்சியாய்... சிறகடித்துப்பறக்க....

பஸ் பதுளை நகரின் மணிக்கூண்டு வளைவில் திரும்பி பஸ் ஸ்டான்டிற்குள் நுழைகிறது. மனம் குதூலிக்க சூட்கேஸை எடுத்துக் கொண்டு பஸ்சை விட்டு கீழிறங்குகிறான். செக்கச் செவேலென்ற ரம்புட்டான் பழங்களும், மஞ்சள் பூசினாற்போல் பளபளக்கும் மாம்பழங்களும் என்னை வாங்குவதற்கு வா வா வென அழைக்கின்றன.

பழ வண்டியை நோக்கி நடக்கும்போது யதேச்சையாக தபாற் கந்தோர் (தபாலாபீஸ்) பக்கம் தன் பார்வையைப் படறவிட்ட போது....

'அதோ தபாற்கந்தோர் பக்கம் இருந்து வருவது யார்? மனம் படபடக்கிறது. அவள் தானா? மாலாவே தானா? அதே புன்னகை தவழும் முகம். அதே வட்டக் கருவிழிகள்! மலர்ந்திருக்கும் கமல முகம். நாசியினருகில் அந்த கரு மச்சம்! அவளேதான்! அவளேதான். முகம் சற்று பூசினாற் போல் தகதகக்கிறது. அவனது உடலில் ஒருவித இனம் புரியாத நடுக்கம். அவளது தளிர் கரங்களைப் பிடித்துக் கொண்டு, சிரித்துப் பேசிக் கொண்டு வருவது யார்? அவளது கணவனா?

நிறைமாத கற்பினியாகவல்லவா தெரிகிறது.

அவன் கண்கள் சுழன்றன. கலங்கின.

ஏதோ பிரமை பிடித்தவன்போல அவர்கள் இவனைக் கடந்து போவதையே வெறித்து பார்த்த வண்ணம் சிலையாக நிற்கிறான்!

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. நிரந்தர அமைதியைத் தேடி....

"அடியே கமலம், என்னடி செய்யுறே குசினி உள்ளுக்கு? இங்க புள்ள கெடந்து கத்துது. இவ என்னடான்னா குசினிக்குள்ள வுழுந்து கெடக்குறா!"

மாமியார் பொரிந்து தள்ளுகிறாள். எப்போதும் ஏதாவது ஒரு காரணத்திற்காக சொல்லம்புகளால் கமலத்தின் இதயத்தை துளைத்து ரணமாக்குவதே இவளுக்கு ஒரு பொழுதுபோக்கு.

"ஆமா, குசினிக்குள் படுத்து கெடக்கிறேன். ஒங்களுக் கெல்லாம் வடிச்சி கொட்ட வேணாமா?"

கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து, வெற்றிலையைச் சளக் சளக்கென்று குதப்பிக் கொண்டிருந்த மாமனாரின் செவியில் மருமகளின் வார்த்தைகள் நாரசமாய் ஒலித்திருக்க வேண்டும். அவர் ருத்ர மூர்த்தியானார்.

கடைவாயில் ஒழுகிய இரத்த வண்ண எச்சிலை புறங்கையால் துடைத்தபடி,

"ஏண்டி நாயே, உங்க அப்பன் வீட்டு சொத்தையா எங்களுக்கு அவிச்சு போட வந்தே? ஏதோ தா' வூட்ல இருந்து அள்ளிக் கொண்டாந்து கொட்டி வச்சிருக்கிற மா(தி)ரியல்ல கதைக்கிற. வாயை பொத்திக்க ஆமா. தரித்திரம் புடிச்ச கழுதை. நீ இந்த வூட்ல என்னைக்கு காலடி எடுத்து வச்சியோ, அன்னையிலிருந்து ஒரே தரித்திரம் தானே தல விரிச்சாடுது. மூதேவி! அவிச்சு கொட்றாளாம், அவிச்சு! இன்னொரு தரம் இப்படி சொன்ன, நாக்கைப் புடுங்கி புடுவன், ஆமா!"

கமலம் எதிர்த்துப் பேசவில்லை. பேசுவதற்கு வார்த்தைகள் வரவில்லை. ஒரு தகப்பனைப் போன்ற ஸ்தானத்தில் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய மாமனார் பேசுகிற பேச்சா, இது? தன்னை பெற்று வளர்த்த அப்பாவோ, அம்மாவோ கூட தன்னை இப்படி ஏசியதில்லை. குமுறி வரும் அழுகை நெஞ்சை அடைக்கிறது. கண்களில் சாரை சாரையாய்க் கண்ணீர் வழிகிறது.

"ஏ, அந்தப் புள்ளைய இப்படி கரிச்சுக் கொட்டுறீங்க? 'வாயும் வயிறுமா' இருக்கையில அவள சந்தோஷமா இருக்க விடுறதா? எப்பப் பாத்தாலும் அவள கண்ணீரும் கம்பலையுமா இருக்க விடுறது? ஏ, முத்தாயி ஒனக்கென்ன புத்தி மழுங்கிப் போச்சா? நீ போம்மா கமலம், உள்ளே போய் வேலயப் பாரு." அடுத்த வீட்டு ஆச்சி சமாதானப்படுத்தினாள்.

தன் மீது யாராவது ஒருவர் அனுதாபம் காட்டும் பொழுது தான் துக்கம் பன்மடங்காகத் தெரிகிறது. ஈயக் கோப்பையை கையில் பிடித்தபடி, அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் பருக்கைகளை ஒவ்வொன்றாய் வாயில் வைத்தபடி 'சுசி' அழுது கொண்டிருக்கிறாள். அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டு 'குசினி'க்குள் போனவள் விம்மி, விம்மி அழுகிறாள்.

அடுப்பு புகைகிறது. காலையிலிருந்தே மழை 'சோ'வென கொட்டிக் கொண்டிருக்கிறது. 'புயல்' உருவாகி, அதன் சுழற்சியில் மழை இடைவிடாது கொட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறது. 'வெலிமட'யில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு லயம் முற்றிலுமாக மண்ணிற்குள் புதைந்துபோய் விட்டது. அங்கு குடியிருந்த தொழிலாளர்கள் அனைவரும் புதையுண்டு போனார்கள். 'நீரிடி' விழுந்து பலத்த சேதமாம். பக்கத்து வீட்டுப் பொடியன் சிதம்பரம் சொல்லிக் கொண்டிருக்கிறான். கமலம் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. வாங்கிக் கொள்ளும் மனநிலையிலும் அவள் இல்லை.

குளிர் நடுங்கிக் கொண்டிருக்கிறது. எரிப்பதற்கு காய்ந்த விறகு இல்லை. நாற்பதேக்கரில் கவ்வாத்து வெட்டியபோது கொண்டு வந்து போட்ட பச்சைத் தேயிலை மிளாறுகளை உள்ளே தள்ளி ஊதாங்குழலில் பூத் பூத்தென ஊதுகிறாள். அது எரிவதற்கு பிடிவாதமாய் மறுத்துக் கொண்டு குபு குபுவென புகையை கக்குகிறது. கமலம் மூச்சை உள்ளிழுத்து, ஊதாங்குழலில் ஊதிக் கொண்டிருக்கிறாள். மூச்சுத் திணறுகிறது. புகையின் எரிச்சல் மட்டுமல்ல நெஞ்சம் வலிக்கும் வேதனையும் கண்ணீராய்ப் பொங்கி வழிகின்றன. இன்னும் 'ஒலை' கொதிக்கவில்லை. எப்ப சோளம் அவிக்கிறது, எப்ப காய் கறி தேடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறி காச்சுறது? இந்தக் கிழட்டுச் சனியன்களுக்கு ஏழரை மணிக்கெல்லாம் சாப்பாடு கொடுக்கலைன்னா இரவு போர்க்களமாகத்தான் இருக்கும்.

சோளத்தை உரலில் குத்தி புடைத்து வைத்துவிட்டு, உலை கொதிக்கிறதாவென பார்க்கிறாள். ஆம் நீர் கொதிக்கிறது, அவளது உள்ளத்தைப் போல. சோளத்தை களைந்து பானைக்குள் போட்டவள் மூலையில் கிடந்த பலகைத் துண்டை வெட்டிப் பிளந்து அடுப்பின் வாய்க்குள் திணிக்கிறாள். குழந்தை 'சுசி' அழுகையை நிறுத்திவிட்டு தனது தாத்தாவிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

'கறிவைக்க' என்ன செய்யுறது?' ஆத்தங்கரை தோட்டத்திலே பறங்கிச் செடி நன்றாக படர்ந்து, துளிர் விட்டிருந்தது. அதன் இளந்தளிர்களை கொய்து சுண்டி ரசம் வைத்துக் கொண்டால் இராப் பிரச்சனை தீர்ந்துவிடும்.

மனம் அசைபோட திண்ணைக்கு வருகிறாள் கொடியில் பிழிந்து காயப்போட்டிருந்த கம்பளி தொங்கிக் கொண்டிருக்கிறது. அதை எடுத்து கொங்காணியாக மடித்துத் தலைக்கு போட்டவாறு வெளியே வருகிறாள். தொடர்ந்து ஒரு வாரமாக புயல் மழை. மலைச் சரிவுகளில், பாதையோரங்களிலெல்லாம் நிலச்சரிவுகள் ஏற்பட்டு போக்குவரத்தெல்லாம் மிகவும் மோசமாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றன. போக்குவரத்து ஸ்தம்பிதமாக, பஞ்சத்தோடு, பஞ்சமாக செயற்கையாகவே உணவுத் தட்டுப்பாடும் ஏற்படுத்தப் பட்டு விட்டது. யார் யாரை கேட்பது?

இருள் கவிந்து, பாதைகள் கண்ணுக்கு தெளிவாகப் புலப்படாத நிலை. தோட்டத்திற்குள் இறங்கும் அந்தக் குறுக்குப் பாதையில் மிகவும் நிதானத்துடனும், சிரமத்துடனும் அவள் இறங்கி நடக்கிறாள். மழைச் சாரலில் நனைந்த சேலை காலில் உரச, நனைந்து சேறாய் மாறியிருந்த அந்தச் செம்மண் தடத்தில், தரை வழுக்கும் என்பதற்காக படிகளாய் வெட்டப்பட்டிருந்த படிகளில், பெருவிரலை நிலத்தில் உறுதியாக ஊன்றி அவதானமாகத்தான் அவள் காலடி எடுத்து வைத்தாள். என்றாலும் மறு நொடியில் அம்மா என்று அலறியபடியே தோட்டத்து பாத்தியில் வழுக்கிப் போய் விழுந்தாள். 'அம்மா' என்று முணகியபடியே இடுப்பைப் பிடித்துக் கொண்டு எழுகிறாள். தனது ஆற்றாமையை எண்ணி வாய்விட்டழுகிறாள். தனது இந்த துயரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பிய சோக வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கொள்ள இந்த சுழித்தோடும் ஆற்றிலே குதித்து சங்கமித்துக் கொண்டா லென்ன? குழந்தை சுசியின் பால் வடியும் முகம் அவள் கண்களில் தெரிகிறது. தலையை பலமாக அசைத்துக் கொள்கிறாள். கால்களில் 'அட்டை'கள் மொய்க்கின்றன. அதைக் கூடப் பொருட்படுத்தாமல் பறங்கிக் கொடியில் இளந்தளிர்களைக் கொய்கிறாள். மழை விட்டபாடியில்லை. சிறு சாறலாக இருந்த மழை இப்போது 'சோ' வென கொட்ட ஆரம்பித்து விட்டது. மெதுவாக தோட்டத்தை விட்டு வெளியேறி லய வாசலுக்கு வந்து குனிந்து கால்களைப் பார்க்கிறாள். கால்களே தெரியாதவாறு அட்டைப் பூச்சிகள் அப்பியிருக்கின்றன. கொழுந்தெடுக்கும் போது அட்டைகள் கடித்த இடத்திலும் கால் விரல்களின் இடுக்குகளிலும் அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. தளிர்கள் இருந்த கூடையை வாசல் திண்ணையில் வைத்துவிட்டு சவர்க்காரத்தை கைகளில் தேய்த்து நுரைக்கச் செய்து கால்களில் தடவுகிறாள். அட்டைப் பூச்சிகள் சுருண்டு விழுகின்றன. கால்களில் கடிவாயில் இருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கிறது. பேப்பரை எடுத்து எரித்து, அதன் எரிச்சாம்பலை கடிவாயில் வைத்து அழுத்துகிறாள். இரத்தம் கசிவது நிற்கிறது.

கயிற்றுக் கட்டிலில் 'மாமன்' படுத்திருக்க, அவர் கால்மாட்டில் 'அவர்' உட்கார்ந்திருக்கிறார். மாமியார் வெற்றிலைப் பாக்கை கை உரலில் இடித்துக் கொண்டே மகனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தவள் கமலத்தை பார்த்தவுடன் நிறுத்திக் கொள்கிறாள். 'சுசி' தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். வீடு 'கருங்கும்' என்று இருக்கிறது. வீட்டினுள் நுழைந்தால் உடலில் அப்பிக் கொள்ளும் இருள்.

'லாம்பை' கூட பத்த வக்காம கோள் மூட்டிக் கொண்டிருக் கிறாங்க. முணகியவாறே. தகர விளக்கை கொளுத்தி வைத்து விட்டு அடுப்பை பார்க்கிறாள். அடுப்பு புகைந்து கொண்டிருக்கிறது.

சோளம் வேகாமல் ஊறிப்போய் விட்டது. 'வீட்டில் இருப்பவர்களில் யாராவது ஒருவர் அடுப்பை எரித்து விடுவோம் என்ற நினைத்தார்களா? என்ன ஜென்மங்களோ தெரியவில்லை.' ஏந் தலைவிதி!

வெளியில் சோவென கொட்டுகிற மழையைப் போல் அவள் கண்களிலிருந்தும் கண்ணீர் மடை வெள்ளமாய்க் கொட்டுகிறது. அடுப்பை ஊதிவிட்டு, கேத்தலில் தண்ணீர் சுட வைக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு 'தேத்தண்ணி' ஊத்தனுமே! அடுப்பை ஊதுகுழலால் ஒரு இடி இடித்து நெருப்பை கிளறிவிட்டு, கேத்தலின் தண்ணீரை குறைத்து வைக்கிறாள். ஆய்ந்து கொண்டு வந்த துளிர்களை மண் போக நன்றாக அலசிய பிறகு, அதிலுள்ள நார்களை உரித்துவிட்டு, வேகமாக அரிகிறாள்.

அடுத்த கணம் 'ஆ' வென சப்தித்தவள் பல்லைக் கடித்துக் கொண்டாள். விரலில் குபுக்கென ரத்தம் பொங்குகிறது. வெட்டுப்பட்ட இடத்தை வாயில் வைத்து சூப்புகிறாள்.

"இந்தா கொஞ்சம் தேத்தண்ணி ஊத்து." இந்த அதிகாரக் குரல் அவருடையது.

"தண்ணி கொஞ்சம் சுடட்டும், ஊத்துறேன்."

தண்ணி கூட சுட வக்காம அம்மா இவ்வளவு நேரம் என்ன பண்ணினீங்களாம்?" கேலிக் குரலில் சினமும் கலந்திருந்தது.

"வேல வுட்டு வந்ததில இருந்து சும்மாதானே இருக்கேன்?"

"ஏய் என்னாடி வாய் ரொம்ப நீளுது. வாயை மூடிக்கிட்டு தேத்தண்ணிய ஊத்துவியா, வாய்க்கு வாய் பேசுற?"

"நா ஒன்னும் வாய்க்கு வாய் அடிக்கல. வேல வுட்டு வந்ததில் இருந்து, வூட்லேயும் வேல தான் செஞ்சுக்கிட்டிருக்கேன்?"

"வேலயா செய்யுற? அடுப்புல தண்ணிய ஊத்திப் போட்டிருந்தா, இந்நேரம் கொதிச்சு அலறிகிட்டு இருக்குமே? அவிச்சுக் கொட்டுறியா எங்களுக்கு? ஏண்டி நாயே, நான் ஒழச்சிக்கிட்டு வாறத ஆக்கிக் கொடுக்க ஒனக்கு அவ்வளவு திமிரு?"

"நானுந்தான் ஒழக்கிறேன். வூட்லேயா வுழுந்து கெடக்கிறேன்?" அவள் வார்த்தையை முடிக்கவில்லை.

"ஏய் வாயை மூடுடி. கதைக்கிறா, பார்?" ஆத்திரத்தில் அறிவிழந்து போன அவனது கைகள் அவளது கன்னங்களைப் பதம் பார்க்கின்றன.

"ஐயோ! அம்மா!! என்னை அடிச்சு கொல்றாங்களே! என்னய ஏ எல்லோரும் இந்தப் பாடு படுத்துறீங்க? என்னப் படச்ச கடவுளுக்குகூட கண்ணில்லையே..."

அவள் ஓலமிட்டு அழுகிறாள். அவளால் தனது துயரத்தை அடக்கிக் கொள்ள இயலவில்லை. மகன் வந்ததும் வராதுமாக, அப்பனும் ஆத்தாவும் இல்லாதது, பொல்லாததுமாகச் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது சினத்தைக் கிளறி விட்டிருக்கின்றனர். வேலை முடிந்ததும், 'ஏழேக்கருக்குப் போய், 'டிங்கிரி பண்டாவின்' கள்ளைக் குடித்துவிட்டு, அரைகுறை வெறியில் வந்தவனை இவர்கள் இன்னும் வெறியை ஏற்றி விட்டிருக்கின்றனர்.

"ஏய் ஒத்தக் கொரல்ல ஒப்பாரி வக்காதடி. ஒன்னப் போலதான் இங்கே மத்தவங்க எல்லாம் கொழுந்தெடுத்துவுட்டு வந்து வூட்லயும் வேலை பாக்குறா? நீ மட்டுந்தா' என்னவோ அதிசயமா வேலக்கு போற மாரி பேசுற? தரித்திரம் புடிச்ச பிச்சைக்கார நாயே! மூதேவிப் பிசாசு! வீசுன கையும் வெறுங்காலுமா' வந்த மூதேவிக்கு வாயைப் பார் வாயை!"

அவள் பதிலேதும் பேசவில்லை. எதைச் சொன்னாலும் குடிகாரனுக்குப் புரியாது. துக்கத்தை குறைக்க அழுவதற்கு மட்டுந்தான் தெரியும். இதயம் வலிக்க தேம்பித் தேம்பி அழுது கொண்டேயிருக்கிறாள், தனது நெஞ்சில் குமையும் துக்கம் கரைந்து போகும் வரை.

அவளது பெற்றோருக்கு கமலா இரண்டாவது பெண். மூத்தவன் சந்திரசேகரன். நான்கு சகோதரிகளுக்கு அக்காவாகப் பிறந்த அவள் பூமாதேவியைப்போல் பொறுமையானவள். ஏழைத் தொழிலாளிக்குப் பிறந்த ஆறும் ஆறு மணிகளாகத்தான் வளர்ந்தனர். அவளின் பெற்றோர் ஏழையாய் இருந்தாலும், மனத்தளவில் அவர்களுக்கு ஏழ்மையில்லை. கமலத்தின் அப்பா குடிக்க மாட்டார். பீடியோ சுருட்டோ பற்ற வைத்ததே இல்லை. வெற்றிலை பாக்கை மட்டும் மென்று துப்பிக் கொண்டே இருப்பார். புகையிலைச் சுருட்டி கடைவாயில் அடக்கிக் கொண்டிருப்பார். கமலத்தின் அம்மா தான் அந்தக் குடும்பத்தை நல்ல முறையில் கட்டிக் காத்து வந்தாள்.

தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் அதல பாதாளத்தில் வீழ்ச்சியுற்று கிடக்கும்போது அவர்கள் எப்படி திருப்தியுடன் காலந் தள்ளுவது? அரை வயிற்று சாப்பாட்டிற்கே அவர்களின் உழைப்பு காணாதபோது நகை, நட்டுகளை நினைத்துத்தான் பார்க்க முடியுமா என்ன?

"சேகரன் அத்துணை சிரமத்திற்குள்ளும் நன்கு படித்தான். சிறப்புத் திறமையுடன் (ஜீ.ஸி.ஈ.) பாஸ் பண்ணிவிட்டான், என்ற போதிலும் அவனுக்கு வேலை கொடுப்பார் யாருமில்லை. தோட்டத் தொழிலாளியின் மகனாய் பிறந்தது - பிறப்புச் சான்றிதழில் 'கூலி' என் குறிப்பிட காரணமாக இருந்தது, அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியின்மை. பெற்றோர்கள் இலங்கையில் பிறந்தவர்கள். அவனும் இலங்கையில் பிறந்தவன்தான். அவன் பெற்ற பிரஜா உரிமைப் பத்திரம் இவனைப் பதிவுப் பிரஜை என பிரித்து வைத்து விடுகிறது. இவற்றையெல்லாம் ஒருவாறு சரிப்படுத்திவிட்டாலும் சிபாரிசு செய்வதற்கு இவர்களின் உறவில் பெரிய மனிதர் யாருமில்லை. வேறு பெரிய மனிதர்களுக்கு 'சந்தோஷம்' கொடுக்க வழி இல்லை. மலையகத்தில் ஒரு ஏழைத் தொழிலாளியின் மகனாய்ப் பிறந்தது ஏதோ ஒரு சாபக்கேடு தானோ, என அவன் மனம் வெதும்புகிறான். துரதிருஷ்ட வசமாக அல்லது முற்பிறப்பில் செய்த கொடிய பாவத்தின் பயனாகவோ தான் தோட்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்திருக்கிறோம் என எண்ணி எண்ணி குமைகிறான்.

அவர்களின் குடும்பம் தனிப்பெருமை வாய்ந்தது. பரம்பரை, பரம்பரையாக அந்தக் 'குரூப்'பில் வாழும் நாலாம் தலைமறையைச் சேர்ந்தவன் அவன். அவனது மூதாதையர்கள் அந்தத் தோட்டத்திலேயே உழைத்து, தேயிலைச் செடிகளுக்கு உரமாகிப் போன போதிலும் இவர்களுக்கு ஏதும் நன்மை விளைந்து விடவில்லை. அவனது அப்பா, தேயிலைத் தொழிற்சாலையில் ரோல் மெஷினில் சிக்கி சதைக் குவியலாய் சிதறி போனமைக்கு கூட தோட்ட நிர்வாகம் இழப்பீடு வழங்க மறுத்துவிட்டது. இப்போதைக்கு இதெல்லாம் பழங்கதையாய் மாறிப்போய் மறந்து போனவைகள்.

அப்பா உயிரோடிருந்தபோது அந்தக் குடும்பம் எவ்வளவு மகிழ்ச்சியுடனிருந்தது. அப்பாவும் அம்மாவும் நீ நான் என்றோ வா போ என்றோ பேசிக் கொண்டதில்லை. நீங்கள், வாங்க, போங்க என்று பன்மையில் அழைத்துக் கொள்ளும் அவர்களுக்கிடையில் பெரிய வாக்கு வாதம் எதுவும் ஏற்பட்டதில்லை. அப்பா சொல்வார். யாரோ ஒருவரை, முன் பின் தெரியாதவரைக் கூட வாங்க, போங்க என்று சொல்லும் நாங்கள், நம்மிடையே மரியாதையையும் பாசத்தையும் கொட்டுகிற குடும்ப உறுப்பினர்களை மட்டும் ஏன் ஒருமையில் கூப்பிட்டுப் பேச வேண்டும்? அவர்களிடையே சிறு பிணக்குகள் ஏற்பட்ட போதும்கூட நாயென்றோ பேயென்றோ சண்டை போட்டுக் கொண்டதில்லை. ஒருவரை யொருவர் அனுசரித்து விட்டுக் கொடுப்பதன் மூலம் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பண்புமிக்க குடும்பம் அது. இந்தத் தகுதிகள், நிறைவுகள் இருந்தும் என்ன பயன்? பற்றாக்குறை என்ற அந்த கொடிய தொற்று நோய் அந்தக் குடும்பத்தைச் சிறிது சிறிதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைத்துக் கொண்டு வருகிறது. அப்பா எல்லோரையும் அனாதரவாகத் தவிக்க விட்டு, மீளாத் துயிலில் ஆழ்வதற்கு ஆறு மாதத்திற்கு முன்னால் தான் கமலத்தின் திருமணம் நடந்தது. திருமணம் நடைபெற்றது கூட எதிர்பாரா திடீர் நிகழ்ச்சிதான்.

அப்போது தோட்டத்தில் 'ஆடிப்பூசை' திருவிழா நடந்து கொண்டிருந்தது. விழாவைக் கண்டு களிக்க தொழிலாளர்களின் உறவினர்கள் வெவ்வேறு தோட்டங்களிலிருந்து வந்திருந்தனர். அவர்களில் மாப்பிள்ளையின் தகப்பனாரும் ஒருவர். அவர் பணியலயத்து சிற்றப்பா சடையன் வீட்டிற்கு வந்திருந்தார். சின்னம்மாவின் உறவுக்காரர். சடையன் சித்தப்பா, கமலத்தின் வீட்டிற்கு அவரை அழைத்துக் கொண்டு வந்திருந்தார். இவர்களின் குடும்ப பிணைப்பையும், பழக்க வளக்கங்களையும், குறிப்பாக கமலத்தின் பணிவும், அவரை வெகுவாகக் கவர்ந்தது. தனது மகனுக்கு கமலத்தை 'கட்டி' வைத்தாலென்ன? மனதில் நினைத்ததை அப்பாவிடமும் கேட்டு விட்டார்.

அப்பா மறுத்து பேசவில்லை. குடும்பத்தின் பற்றாக் குறையின் இறுக்கம், மறுப்பிற்கு இடம் கொடுக்கவில்லை. மாறாக திருமணச் செலவிற்கு கையில் பணமில்லையே என்ற கவலைதான். கமலத்திற்குத் திருமணமாகி விட்டால் ஓரளவு கஸ்டம் குறையும் என்ற எண்ணந்தான் மேலோங்கி நின்றது. மாப்பிளையைப் பார்த்ததில்லை. கறுப்பா, சிவப்பா? நொண்டியா நுடமா? எதுவும் தெரியாது. மாப்பிள்ளையை நேரில் பார்த்ததில்லை. அவரது பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளவில்லை. மாப்பிள்ளையைப் பற்றிய வர்ணனைகளை சடையன் சித்தப்பாவும், மாப்பிள்ளையின் அப்பாவும் ஒருவர் மாற்றி ஒருவர் தொடர்ந்தனர். மாப்பிள்ளை மிகவும் நல்லவர்என்ற பிம்பத்தை ஏற்படுத்த படாத பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அதில் வெற்றியும் பெற்று விட்டனர்.

"கமலத்த எங்க புள்ளைய போல பாத்துக்குவம். எந்த கரச்சலும் இருக்காது. வீட்டிலே ராசாத்தி மாதிரி, என்ன விருப்பமோ அதைச் செய்து கொண்டு, மாமியாருக்குத் தொனையா வீட்ல இருக்கிறதுதான். ஏ' மவனத்தான் ஏழெட்டு வருஷத்துக்கு முந்தி இங்கே கூட்டி வந்திருந்தேனே? ஒரு கரச்சலுக்கும் போக மாட்டாள். ரெண்டும் சந்தோஷமாக இருக்கும்ங்க.' ரொம்ப யோசிக்காதீங்கத்தான்!" மாமனார் நிறுத்தி விட்டு சம்மதமா என்பதைப் போல அப்பாவைப் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா சடையன் சித்தப்பாவை வெளியில் 'ஸ்தோப்பிற்கு' கூட்டி வந்து ஏதோ கிசுகிசுப்பாக சொன்னார். அவர் மீண்டும் உள்ளே வந்து, மாப்பிள்ளையின் அப்பா பக்கத்தில் போய் அமர்ந்து, "ஒன்னும் பிரச்சினை இல்ல. அப்பா செலவு விடயத்திற்காக திருமணத்தை ஒரு ஆறு மாதம் தள்ளிப் போடலாம் என்கிறார்."

"அத்தான் நீங்க அதைப்பற்றி யோசிக்காதீங்க. ஒரு ஐந்நூறு ரூபா. உங்கள் செலவுக்கு தாரன். நம்ம வீட்லேயே திருமணத்தை வச்சுக்குவோம். அடுத்து வர்ர முகூர்த்தத்திலேயே 'தேவையை' வச்சுக்கலாம், எல்லோருக்கும் சௌகரியமாகப் போயிடும். என்ன சொல்றீங்க?"

"ஆமா யோசிக்கிறதுக்கு என்ன? முடிச்சிடுவோம்."

திருமண ஏற்பாடுகள் முக்கால் பங்கு முடிந்த திருப்தி. 'செட்டிலயத்து' ஜோசியரிடம் போய் பரிசம் போடவும், முகூர்த்தத்திற்கும் நாள் பார்த்து தேதி நிச்சயித்து விட்டார்கள். மாப்பிள்ளையையோ அல்லது பெண்ணையே ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை. மாப்பிள்ளை பெண்ணையோ அல்லது பெண் மாப்பிள்ளையையோ பார்த்தது கூட கிடையாது.

திருமண முடிவு பெறப்பட்டு விட்டது.

அவர்கள் போய் விட்டார்கள்.

'அம்மா'தான் கமலத்திடம் சொன்னாள். அறிவுரைகள் கூறினாள். கமலத்திற்கு அதிகம் கூறத் தேவையில்லை. அவள் இயல்பிலேயே புத்திசாலி. பக்குவமாய் நடந்து கொள்வாள். சிக்கனத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

அம்மா தான் கண்ணீர் விட்ட ஒரு நிகழ்ச்சியை இப்பவும் நினைத்துக் கொள்கிறாள். நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழ்கிறது.

அப்போது மலையக தோட்டங்களில் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொழிலாளர்களின் கையிலோ 'சதந்'தானும் இல்லாத ஏழ்மை. பசியின் கொடுமையைச் சகிக்க மாட்டாமல், ஒரு கவளம் சோற்றிக்காக ஆளாய்ப் பறந்து கொண்டிருந்த தருணமது. கடைகளிலோ உணவுப் பொருட் களைக் கடனுக்குக் கொடுக்க மறுத்துக் கொண்டிருந்தனர். அவர்களென்ன பைத்தியக்காரர்களா? வேலை நிறுத்தம் செய்பவர்களுக்கு கடன் கொடுத்தால் எப்படி வசூலிப்பது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்காரர்கள் புத்தியுடன் இருந்தார்கள். தொழிலாளர்கள் பட்டினியில் துடித்தார்கள்.

கமலத்தின் அப்பா 'சேனை' (தேயிலை பயிரிப்படாத சரளை நிலம்) க்குப் போனார். அவர் வயிறு நெருப்பாய் எரிந்தது. நெஞ்சம் தணலாய்க் கொதிக்கிறது. காலையில் ஏழு மணியிலிருந்து, மாலை நான்கு மணிவரை தேயிலை மலையில் வேலை செய்துவிட்டு, அந்தக் களைப்பு கூட ஆறாமல் 'சேனை'க்குப் போய் சரளைக் கல் நிலத்தை 'கொத்தி' பக்குவப்படுத்தி, அரும்பாடுபட்டு சிறிது மரவள்ளிக் கட்டைகளைப் பதித்துவிட்டிருந்தார். அவரின் உழைப்பை உறிஞ்சிக் கொண்டு வஞ்சிக்கும் முதலாளி வர்க்கத்தினரைப் போலல்லாது, நன்றாக செழித்து, வளர்ந்து, அந்தப் பாடுபட்ட நெஞ்சத்திற்கு குளிர்ச்சியாய், பசுமையாய் மதர்த்து வளர்ந்திருந்த செடிகளெல்லாம், அரிக்கப்பட்டு தாறுமாறாய்க் கிடந்தன. எந்தப் பாவியோ எல்லாச் செடிகளையும் பிடுங்கி கிழங்குகளைத் திருடிப் போயிருந்தார்கள்.

"ஐயோ, எல்லாச் செடிகளையும் புடுங்கிப் போட்டுட்டாங்களே! அவுங்க நாசமாய்ப் போக". அவர் வயிற்றிலடித்துக் கொண்டார்.

வெயிலின் கொடுமைக்கு ஈடு கொடுக்க இயலவில்லை. பசி வெறியாகி, மயக்கத்தை தருகிறது. வீட்டிலெல்லோரும் பட்டினியால் வாடுகிறார்கள். உணவிற்காக ஆளாய்ப் பறக்கிற அவர்களுக்கு இந்த மரவள்ளிக் கிழங்குகளையாவது கொண்டு போய் கொடுப்போம் என்ற எண்ணத்தில் தான் மெதுவாக சேனைக்கு வந்தார். ஆனால், இங்கோ எல்லாம் அரித்துப் போடப்பட்டுள்ளன. அவருக்கு ஆத்திரமும் அழுகையும் நெஞ்சை அடைத்தன.

திருடன்களால் அவசரத்தில் பிடுங்கிப் போடப்பட்டிருந்த மரவள்ளித் தூரைக் கிளறிப் பார்த்தார். அறுந்துபோன, முறிந்துபோன இலேசாக நீலம் பாரித்த கிழங்குகள் ஒன்றிரண்டு ஒவ்வொரு தூறிலும் கிடைத்தன. திருடுபவன் அவசரத்தில் கையில் வந்ததை எடுத்துக் கொண்டு நிலத்தில் முறிந்து போன கிழங்குகளை அப்படியே விட்டுவிட்டு ஓடியிருக்கிறான். கிடைத்த கிழங்குகள் ஐந்து ராத்தல்கள் தேறும். இரண்டு மூன்று மரவள்ளிச் செடிகளை எடுத்துக் கொண்டு வந்து காளி கோயிலின் வாசலில் போட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா, தாயே! நாங்கள் படாத பாடுபட்டு, வெயிலையும் மழையையும் பார்க்காம பாடுபட்டோம். எந்தப் பாவியோ எல்லாத்தையும் அரிச்சுக்கிட்டுப் போயிட்டான். அவனை நீதான் கேட்கணும்."

கோயிலைச் சுற்றி கும்பிட்டுவிட்டு, மண்ணை வாரி வீசிவிட்டு வீட்டிற்கு வந்தார்.

கலகலவென்று ஆரவாரப் பட்டுக் கொண்டிருக்கும், 'லயங்கள்' (தொடர் குடியிருப்பு வீடுகள்) எல்லாம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தன. தொண்டை கிழிய அலறிக் கொண்டு நிற்கும் பிள்ளைகளைக் காணோம். ஊர் வம்பைப் பேசிக் கொண்டு திண்ணைப் படியில் உட்கார்ந்து, வெற்றிலைப் பாக்கைச் சப்பி சப்பி, இரத்த ரத்தமாய் காறிக் காறி 'காண்' களில் துப்பிக் கொண்டிருக்கும் பாட்டிகளைக் காணோம்.

'லய' வாசல்களில் கோடு கீறி 'தாய்ச்சி' விளையாடும் பயல்களையும், 'கிட்டிப்புள்' அடிக்கும் வாண்டுகளையும் காணோம். 'நொண்டி' அடித்தும், 'கல்லாங்காய்' விளையாடும் சிறுமிகளையும் காணோம். எல்லோரும் அவரவர் வீடுகளுக் குள்ளேயே, பசிக் கொடுமை தாளாது மூலைக் கொருவராய் முடங்கிக் கிடக்கின்றனரோ?

வீட்டிற்குள் நுழைந்தவர் 'ஸ்தோப்பில்' குட்டிச் சாக்கைப் போட்டுவிட்டு 'கமலம்' என்று கூப்பிட்டார். பிள்ளைகளெல்லாம் நினைத்தது போலவே மூலைக் கொருவராய்ச் சுருண்டு கிடக்கின்றனர். பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? பசிக்கிறக்கம் விளையாடக் கூட 'சேட்டை' யில்லை. விதைக்காக அடுப்பிற்கு மேலே கட்டித் தொங்க விட்டிருந்த சோளக் கதிர்களை உதிர்த்துக் கொண்டிருந்தனர் கமலமும் அம்மாவும். விதைக்கு வேண்டுமென பத்திரப்படுத்தியிருந்த கதிர்கள் இப்போது உணவிற்காக உதிர்க்கப் படுகின்றன. எதையாவது தின்று வயிற்றுப் பசியை போக்கிக் கொள்ள வேண்டும். இப்போது இதை அவிச்சு ஆளுக்கொரு வாய் சாப்பிட்டு பசியை போக்கிக் கொள்ளுவம். சோளம் விதைக்கும் காலத்தில் ஒரு 'கொத்து' (படி) கடையில வாங்கிப் போட்டுக் கொள்ளலாம்.

"என்னங்கப்பா?" என்றவாறு சொம்புத் தண்ணியுடன் வெளியே வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிப் பயலுக ஒரு செடி விடாம அரிச்சிப் போட்டுட்டானுக. அவுங்க வயித்துல கொள்ளி வைக்க. நாம் பாடுபட்டு ஒழச்சு, இங்கே புள்ளக எல்லாம் பட்டினியால சாகையில அவிங்க எல்லா கெழங்குகளையும் திருடிக்கிட்டுப் போய்டானுக, அம்மா.

"ஐயோ, போன கெழமை போய் பார்த்திட்டுத் தானே வந்தோம். அதுக்குள்ள சேனைக்குப் போய் செத்துட்டானுகளா?" கேட்டவாறே வீட்டுக்குள்ளிருந்து அம்மா வந்தாள்.

"ராவுக்கு இந்தக் கெழங்கு போதும். சோளத்தை காலைக்கு அவுச்சுக்குவம்" - கமலம் சொன்னாள்.

குட்டிச்சாக்கில் இருந்த கிழங்குகளை வெட்டி உரித்து நீலம் பாரித்த பகுதிகளை வெட்டிக் களைந்து ஒரு நொடியில் அவித்து விட்டாள்.

கமலம் எல்லாரது தட்டுகளையும் எடுத்து வைத்து அவித்த கிழங்கைப் பங்கிட்டாள். எல்லோருக்கும் ஒவ்வொரு கரண்டி அளவே இருந்தது. மூலைக் கொருவராய் சுருண்டு கிடந்த சிறுசுகளைத் தட்டியெழுப்பி கிழங்கை சாப்பிடக் கொடுத்தாள். சிறுசுகள் சீக்கிரமே தின்றுவிட்டு, கோப்பையை வழித்து, விரல்களைச் சப்பிக் கொண்டிருந்தனர். ஆகச் சிறியவனான கடைக்குட்டி அழ ஆரம்பித்து விட்டான்.

"எனக்கு இன்னும் வேணும். அம்மா எனக்கு இன்னும் வேணும்" அவன் அடம்பிடித்து அழுகிறான். கமலத்தைத் தவிர மற்ற அனைவரும் சாப்பிட்டு விட்டிருந்தனர். கமலத்தின் பங்கு மட்டுமே மிஞ்சி இருக்கிறது.

'கடைக்குட்டி' உச்சஸ்தாயியில் கத்த ஆரம்பித்து விட்டான். அமைதியில் ஆழ்ந்து கிடக்கும் லயத்தில் அவனது அலறல் மட்டுமே நீண்ட குரலெடுத்து அமைதியை கலைத்துக் கொண்டிருக்கிறது. அப்பா அதட்டிப் பார்த்தார். அம்மா அணைத்துக் கொண்டு ஆறுதல் சொல்லிப் பார்த்தாள். எதுவும் அவனது அழுகையை நிறுத்தவில்லை. அப்பாவிற்கு சினம் வந்து விட்டது. அம்மாவின் அணைப்பிற்குள்ளிருந்தவனை இழுத்தெடுத்து, "வாயை மூடுரா" என்றவாறே அவனது முதுகில் ஓங்கி அறைந்தார்.

முன்னைக் காட்டிலும் ஓங்கிக் குரலெடுத்து அவனால் அலறத்தான் முடிந்தது. அடியின் வேதனை தாங்கமாட்டாமல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் புழுப் போல நெளிந்தான். நெருப்பைக் கொட்டியது போல முதுகு எரிகிறது. அந்தப் பிஞ்சு முதுகில் அப்பாவின் விரலடையாளங்கள் பாளம்பாளமாய்த் தெரிகின்றன. அம்மா ஓடிவந்து அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

கமலத்தால் இதைச் சகித்துக் கொள்ள இயலவில்லை. அழுவதற்கு கூட இயலாமல் அவன் திணருவதைப் பார்க்க அவளது இதயம் தாங்கவில்லை. அவன் தேம்பித் தேம்பி அழ அவனை கட்டியணைத்துக் கொண்டு தானும் அழுகிறாள். அக்காவின் ஆதரவான அணைப்பிற்குள் அந்தப் பிஞ்சு உள்ளம் அமைதி காணத் தவிக்கிறது. அவனை அணைத்துத் தூக்கிக் கொண்டு 'குசினி'க்குள் வந்தவள் அவனை மடியில் இருத்திக் கொண்டு, தனது பங்காக இருந்த கிழங்கையும் அவனுக்குச் சிறிது சிறிதாக ஊட்டுகிறாள். அவனும் தேம்பல்களுக்கிடையே கிழங்கு முழுவதையும் தின்று முடிக்கிறான்.

"அம்மா, இதை எதிர்பார்த்து, 'குசினி'க்குள் வந்தாள்."

கமலம் என்ன செய்திருப்பாள் என்று அம்மா எண்ணினாளோ அதைக் கமலம் செய்து விட்டிருந்தாள். தனக்கென வைத்திருந்த அந்த சிறு கிழங்கையும் அவனுக்கே உண்ணக் கொடுத்திருந்தாள். அவனும் கடைசி கவளத்தையும் தேம்பிய வண்ணம் தின்று கொண்டிருந்தான்.

"கமலம்" என்றவாறே, அம்மா தட்டைப் பிடுங்கினாள். அது வெறுந்தட்டாய் இருந்தது.

"என்னம்மா செய்த நீ? காலையிலிருந்து கொலை பட்டினியாய் இருக்கிறே! இப்பவும் இந்த கொஞ்ச கெழங்கையும் அவனுக்கே கொடுத்திட்ட...." அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் பொல பொலவென உதிர்ந்தன. கமலத்தின் கண்களிலிருந்தும் கண்ணீர்த் துளிகள் முத்துக்களாய்ச் சிதறின.

"கமலம் நீ எனக்கு மகளில்லை. நான் தானம்மா உனக்கு மகள்" வாயைத் திறவாமலே மனதிற்குள் பொருமினாள்.

காலம் கரைந்தது. சில சுயநலம் பேணிய கருங்காலிகளால் வேலை நிறுத்தம் பிசுபிசுத்துப் போய் விட்டது.

அம்மா பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்தாள். என்னென்னவோ, எவ்வளவோ கூறினாள். கமலம் வாயைத் திறவா மௌனியாகக் கேட்டுக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை வீட்டாரின் பண உதவியால் திருமணம் நடந்து முடிந்துவிட்டது.

கமலம் புக்ககம் போய் விட்டாள்.

வீட்டில் சந்தோஷம் தொடர்ந்திருந்தது. ஒரு மாத கால அளவிற்குதான். மறு மாதமே அக்குடும்பத்தின் உண்மைச் சொரூபம் சிறிது சிறிதாக வெளிப்படத் தொடங்கியது. கல்யாணச் செலவிற்காக அவர்கள் நாலய்ந்து பேரிடம் கடன்பட்டிருந்தனர். முதலில் வட்டிக்கார பாய் வந்தான். பிறகு ஹோட்டல் கார புஞ்சி பண்டா, பணிய லயத்து 'ஜவுளி', பச்சத் தண்ணி ராமன்... இப்படி பலரும் கொடுத்த கடனை கேட்டு வந்தனர். நாளாக, நாளாக குடிவெறியில் மாமனார் வீட்டிற்கு வந்து பேசத் தலைப்பட்டார். தனது மருமகள் என்ற மரியாதை போதை மயக்கத்தில் காணாமற் போய்விட்டது.

கமலம் இப்போது தோட்டத்தில் பேர் பதிந்து கொழுந் தெடுக்கப் போகிறாள். காலையிலிருந்து மாலை வரை மழையென்றும் வெயிலென்றும் பாராது கொழுந்தெடுத்து களைத்துப் போய் வீட்டிற்கு வந்த பின்னும் வீட்டு வேலைகளைக் கவனித்துவிட்டு, படுக்கையில் "அப்பாடா" என விழ பத்து மணியாகும். "இங்கென கெடக்குற சாமான அங்கென' எடுத்து வைக்காத மாமியார், சதா தொண தொணத்துக் கொண்டே இருப்பாள். பகலிலும், இரவிலும் அவர்கள் உணவருந்திய பாத்திரங்களை கழுவி சுத்தம் செய்து விட்டு, அவர்களுக்கு படுக்கை விரித்துக் கொடுப்பது வரை கமலந்தான் செய்து கொடுக்க வேண்டும். வேலை முடிந்து வீட்டிற்கு வந்த பின் அரிசி புடைத்து, கல் நெல் நீக்கி களைந்து சமைக்க வேண்டும். தோட்டத்திற்குள்ளே போய் மரக்கறி ஏதாவது தேடி கறிவைத்து அவர்களுக்கு சாப்பாடு போட வேண்டும்.

ஆக ஒரு சம்பளமில்லா வேலைக்காரியைப் போல நடத்தப்படுகிற கமலம் தன்னுடைய இயந்திரத்தனமான வாழ்க்கையில் ஒரு வயதுக் குழந்தைக்கு தாயாகவும் ஐந்து மாத கற்பிணியாகவும் இருக்கிறாள்.

முனியாண்டி கோயில் பூஜையின்போது பிறந்தகம் போன கமலத்தை அம்மா கேட்டாள்.

"சந்தோஷமாகத்தானே இருக்கே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலம் சொல்லத்தான் நினைத்தாள். 'அம்மா நான் ஒரு வேலைக்காரியை விட மிகவும் கேவலமாக நடத்தப்படுகிறேன். எனது வாழ்க்கையில் சந்தோஷத்திற்கு இடமேயில்லையம்மா. சதா, தொண தொணப்பிற்குள்ளும், புறு புறுப்பிற்குள்ளும் அமைதியிழந்து, அணு அணுவாய்ச் சித்திரவதைப் பட்டுச் செத்துக் கொண்டிருக்கிறேன்' எனக் கூறி அம்மாவின் மடியில் முகம் புதைத்து 'ஹோ'வென கதற வேண்டும் போலிருக்கிறது. இப்படிச் செய்து, அம்மாவை ஏன் வேதனைப்படுத்த வேண்டும்? என எண்ணியவள், பல்லைக் கடித்து, பொங்கிய துயரத்தை நெஞ்சுக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள்.

"எனக்கென்னம்மா குறை? நான் ராசாத்தியாட்டம் சந்தோஷமாய்த்தான் இருக்கிறன்."

அம்மா முகமலர்ந்தாள்.

கணவனை அவலமாக இழந்த பிறகு, தான் ஒருத்தி உழைத்து ஐந்து பிள்ளைகளை வளர்க்கப் பாடுபடும், சுமையான துயரங்களையும், மனப் பொருமல்களையும் மறந்து அம்மா முழு மனம் நிறைந்தவளாய்ச் சிரிக்கிறாள். அம்மாவின் இந்த நிறைந்த சிரிப்புக்காக வேணும் கமலம் தனது துயர வாழ்க்கையின் ஒரு துளியையேனும் சொல்லிவிடக் கூடாது.

முனியாண்டி கோயில் திருவிழா முடிந்து கமலம் புறப்பட்டு விட்டாள்.

அம்மாவை, சகோதரங்களைப் பிரிந்து அவர்களின் அன்பு அரவணைப்பிற்குள் தனது துயரங்களை மறந்து மகிழ்ச்சியாய் இருந்த இந்த ஒரு வார கால வாழ்க்கையினின்றும் பிரிந்து, ஒரு கொத்தடிமை வாழ்வுக்குள், துயரச் சுழலுக்குள் மீண்டும் நுழைய நேரம் வந்து விட்டமைக்காக நெஞ்சுக்குள் துக்கம் உருளையாய் அடைத்துக் கொள்கிறது. கண் கலங்க விடை பெற்றாள்.

பஸ்ஸில் ஏறிய கமலம் கண்ணீர் சிந்தினாள், - அம்மாவின் அன்பை எண்ணியும், தனது துன்பம் சூழ்ந்த வாழ்வை எண்ணியும்.

பயணமனுப்பிய அம்மா ஆனந்த கண்ணீர் விட்டாள். தனது மகளின் சந்தோஷ வாழ்வையெண்ணி.

கமலம் போய்விட்டாள். வீடு வெறிச்சோடி போய் விட்டதாக அம்மா சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா காலமான பிறகு அந்தக் குடும்பத்திற்கு தான் எத்தனை சோதனைகள்?

தெய்வம் கூட தன் கண்களை இறுக்கமாகத்தான் மூடிக் கொண்டதோ?

அப்பா மறைந்த ஏக்கத்தில் அம்மா மெலிந்து நோயாளி யானாள். இரண்டு பேரின் உழைப்பால் ஊர்ந்து கொண்டிருந்த அந்தக் குடும்பம் இப்போது ஒருவரின் உழைப்பில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் - எந்தத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத சூழலில், வாழ்க்கைச் செலவுகளின் நெருக்கத்திற்குள் நசுக்கப்பட்டு, திணறிக் கொண்டிருக்கிறது அக்குடும்பம். அம்மாவின் கையில், காதில், கழுத்தில்... எல்லா நகைகளும் அடகுக் கடையில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்ட நிலையில்...

தனது குழந்தைகளின் நிரந்தரச் சோகம் குடி கொண்டு விட்ட முகங்களைப் பார்க்கப் பார்க்க அவள் மனம் ஒருவித உறுதி நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்த அரும்புகளின் வாழ்க்கை தனது உழைப்பில் மட்டுமே சார்ந்திருக்கிறது என்ற உண்மையை உணர, உணர தனது துயரங்களை நெஞ்சக் குழியின் ஆழ புதைத்துக் கொண்டு, தைரியமாக நிமிர்ந் திருக்கிறாள். தனது கணவன் தன்மீது சுமத்திச் சென்றுவிட்ட கடமைகளை நிறைவேற்றியே தீருவது என்ற எண்ணத்தின் தீவிரம், அவள் உள்ளத்தை வலிமையாக்கி நிமிர்ந்திருக்கச் செய்தது.

இப்போதெல்லாம் அம்மா தொடர்ந்து கொழுந்தெடுக்கப் போய்க் கொண்டிருக்கிறாள்.

அம்மா மட்டும் உழைத்து ஐந்து பேருக்கும் சாப்பாடு போட முடியுமா?

மூத்தவன் எங்கெல்லாமோ வேலை தேடி அலைந்து கொண்டிருந்தான். இப்போதும் அலைந்து கொண்டுதான் இருக்கிறான். அவன் வாழ்நாள் முழுதும் வேலை தேடி அலைந்து கொண்டிருப்பானோ? அரும்பாடுபட்டு 'ஜீ.ஸி.ஈ.' பாஸ் பண்ணி என்ன பிரயோசனம்? எண்ணிக்கையற்ற விண்ணப்பங்கள். நேர்முகத் தேர்வுகள்... எதிலும் அவனுக்கு வெற்றி கிடைக்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பையும், பழக்க வழக்கங்களையும் திறமையையும் பார்த்து உத்தியோகம் கொடுக்க வேண்டுமானால் அவனுக்கு எப்போதோ வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் இந்தத் தகுதியை எங்கே பார்க்கிறார்கள்? இந்த "உதவாக்கரை" தகுதிகள் யாருக்கு வேண்டும்?

நேர்முகத் தேர்வுகளின்போது, தேர்வாளர்கள் அவனிடம் கண்ட தகுதியின்மைகள் தான் என்ன தெரியுமா?

அவன் ஒரு பதிவுப் பிரஜை.

அவன் ஒரு தமிழ் தொழிலாளியின் மகன்.

அவன் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன்.

அவனிடம் "சந்தோஷம்" பெறுவதற்கு ஏதுமில்லை.

இந்தத் தகுதியின்மைகளைக் கொண்ட அவன் திறமையாய்ப் படித்திருந்தென்ன? திறமை, உண்மை, நேர்மையை மட்டுமே மூலதனமாகக் கொண்டிருந்தென்ன?

அவனுக்கு வேலை கிடையாது.

எவ்வளவு சிரமங்கள்? நிம்மதியற்று, முடிவில்லா அலைச்சல்கள்? அம்மாவின் உழைப்பில் உண்டு வாழ்கிறோம் என்ற குற்ற உணர்வின் வேதனைப் பொருமல்கள்... அவனை தலைநகர் கொழும்பை நோக்கி, கொழும்பிலும் சைவ ஹோட்டல்களைத் தேடி துரத்தியடித்தன.

கூடப்படித்த நண்பனை அதிர்ஷ்டவமாக, கோட்டை ரயில்வே ஸ்டேசனில் சந்தித்தான். அவனது சோக வாழ்க்கை நண்பனின் நெஞ்சத்தை நீராயுருக்கியது. இறுதியாக அவனைச் சைவ ஹோட்டல்களைத் தேடி ஓடி வரச் செய்த துன்பங்கள் நண்பனின் இதயத்தை வேதனைப்படுத்தின. தனக்குத் தெரிந்த "டீ மாஸ்டரிடம்" சொல்லி ஒரு ஹோட்டலில் சப்ளையராக வேலைக்குச் சேர்த்து விட்டான்.

மூன்று வேளை சாப்பாடு இருப்பிடம் தந்து மாதம் 35/- முப்பத்தைந்து ரூபாய் சம்பளமும் தருவார்கள். போதும். தாராளம். மாதா மாதம் அம்மாவுக்கு மணியார்டர் அனுப்பிவிடலாம்.

படித்த ஜியோமெட்ரியும் அல்ஜிபிராவும் இங்கு பயன்பட வில்லை. பொட்டாசியம் பர்மங்கனேட்டும், மெக்னீசியமும் இங்கு தேவையில்லை. பின் ஏன் இவற்றையெல்லாம் இரவில் லாந்தர் வெளிச்சத்தில் படித்துத் தேர்ந்தோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் பெயருக்கு வந்த கடிதத்தை சிதம்பரம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு போனார். கமலம் தான் எழுதியிருந்தாள். 'எவ்வளவு சீக்கிரம் அவர்களிடம் வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்கிறோமோ அவ்வளவு நமக்கு நல்லதம்மா. சில வேளைகளில் அவர்களின் முறைகேடான வசை மொழிகளை எதிர்த்துப் பேசா வண்ணம் சகித்துக் கொள்கிறேன்.'

அம்மா என்ன செய்வாள்? தள்ளாத வயதில் அரும் பாடுபட்டு உழைத்து தனக்கும் தனது குழந்தைகளுக்கும் ஏற்படும் வயிற்றுப் பாட்டிற்கே சமாளிக்க முடியாத நிலையில் எங்கிருந்து கடன்பட்ட தொகையைக் கொடுப்பது?

எப்படியேனும் கடனைத் தீர்த்துவிடுவோம் என அம்மா பதில் எழுதி ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. ஆறு மாதங் களென்ன ஆறு வருடங்களானாலும் அம்மாவால் அந்தத் தொகையைக் கொடுக்க முடியுமா? ஏதாவது அற்புதம் நிகழ்ந்தாலொழிய இந்த பற்றாக்குறை வாழ்க்கையில் இது சாத்தியமா? கமலத்திற்கு தெரியும். ஒரு மன ஆறுதலுக்காகத்தான் அம்மா இதை எழுதியிருக்கிறாளென்று. என்றாலும் அம்மா இப்படி எழுதியிருக்கிறாள் என்று ஒரு தைரியம் பிறக்கத்தான் செய்கிறது. அண்ணன் வேலைக்குப் போய்விட்டால் இது சாத்தியம்தான். மனதிற்குள் ஒரு ஆறுதல் இழையோடுகிறது. அந்த ஆறுதல் தந்த நப்பாசையில் அவள் ஏச்சுக்களையும், சீறல்களையும், இதயத்தைக் குத்திக் கிழிக்கிற சொல்லம்புகளையும் மௌனமாக சகித்துக் கொள்கிறாள். மேலும், மேலும் அவைகளை ஏற்றுச் சீரணித்துக் கொள்ள முடியாமல் அவள் நெஞ்சம் வலிக்கிறது. இந்த இதய வேதனையிலிருந்து விடுதலை பெற அவள் தவிக்கிறாள்.

அவளுக்கு அது மட்டுமே சரியான வழியாகத் தெரிகிறது. எந்த விதமான ஏச்சுப் பேச்சுகளும், சினச் சீறல்களும் நெருங்க முடியாத வழி, அதுதான் நித்திய சுகத்தைத் தேடி பயணிக்கும் வழி...!

நீண்ட நேரத்திற்கொருமுறை அவளது விசும்பல் ஒலி எழுந்து இருளின் கருமையோடு கரைந்து போகிறது.

தொடர் சரங்களாய் இதயத்தை வேதனையில் ஆழ்த்திக் கொண்டிருந்த துன்பங்களினதும், துயரங்களினதும் தாக்குதலை இப்போது அவளால் ஏற்றுக்கொண்டு உள்வாங்கி சீரணித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமடைய முடியவில்லை. துன்பச் சுமை தாளமாட்டாமல் உள்ளம் குமைந்து நைந்து கொண்டிருக்கிறது.

இந்த துயர சுமைகளை தூக்கி எறிந்துவிட்டு, மனம் இலேசாக இருக்க வேண்டுமென ஆன்மா தவிக்கிறது. அந்த தவிப்பின் உச்சத்தில் தான் அந்த முடிவை எடுக்கிறாள்.

வெளியே மழை 'சோ'வென கொட்டிக் கொண்டிருக்கிறது. உலகமே நித்திரையில் ஆழ்ந்து போய், இந்தக் கொட்டும் மழையில் கூட ஒரு அமைதியில் ஆழ்ந்து விட்டது.

ஒரு முடிவுடன் எழுந்து நின்று சுற்று முற்றும் பார்க்கிறாள். தகர விளக்கின் ஒளியில், மூலையில் கிடக்கும் கயிறு பாம்பாய் நெளிகிறது.

இடுப்பில் சொருகி இருந்த சேலை அவிழ்ந்து விடாதபடி, அந்த கயிற்றால் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொள்கிறாள். விடு விடென வெளியில் கொட்டும் மழையில் எதையும் பொருட் படுத்தாமல் நடக்கிறாள்.

அவளது சிந்தனையில் மழை கொட்டுவது ஒரு பொருட்டாய்த் தெரியவில்லை. கணவனைப் பற்றிய எண்ணங்கள் தோன்றவில்லை. சுசியின் நினைவுகூட வரவில்லை. ஆன்ம விடுதலை மட்டுமே சிந்தனையில் நிரம்பி வழிகிறது.

எத்துணையோ முறை கீழே விழுந்தவள் "அம்மா" எனக் கூட அலறவில்லை.

மனம் இரும்பாய் இறுகி விட்டது.

சுழித்தோடும் ஆற்றின் இரைச்சல் மட்டுமே வா! வா!! வென அழைப்பது போல் காதில் விழுகிறது.

தோட்டத்தின் அருகேயுள்ள உயரமான பாறையில் ஏறி நிற்கும் அவள் காலடியில் ஓடும் ஆற்றின் இரைச்சலை ஒரு கணம் காதில் வாங்கியபடி கீழ் நோக்கிப் பார்க்கிறாள்.

அடுத்த கணம் அம்மா என்ற அவல குரல் ஆற்றின் இரைச்சலில் கரைந்து சங்கமித்துக் கொள்கிறது.

நித்திய சுகத்தை தேடி கமலம் பயணித்துக் கொண்டிருக் கிறாள்.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. வாழ்வின் விளிம்பிலே அவள்....!

விடிந்தால் ராஜுவின் தங்கை மாலாவிற்கு திருமணம். வைகறை முகூர்த்தமாதலால் மாலையில் இருந்தே வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வீட்டிற்குள் ஏதோ வேலையாகச் சென்றவன், தம்பி யாரையோ வரவேற்கும் குரல் கேட்டு வெளியே வருகிறான். மாப்பிள்ளையின் பெற்றோர், உடன் வேறு இரு பெண்கள். பெண் என்றா சொல்வது? வானத்துச் சந்திரிகையே, தனது நட்சத்திர தோழியுடன் வந்து நிற்பது போன்ற பிரமை. மாப்பிள்ளைக்கு இப்படியொரு சகோதரி இருப்பதாக யாரும் சொல்லவே இல்லையே....!

அவள் மீது அவனது விழிகள் பதிகின்றன. அங்கம், அங்கமாக நோக்கும் அவன் விழிகள், அவளது உடல் வனப்பை அள்ளி பருகுகின்றன. அவள் மீது மொய்க்கும் தனது விழிகளை அகற்றும் எண்ணம் அவனுக்கு இல்லையா? நிமிர்ந்து, தன்னை ஆவலாகப் பார்த்து, விழிகளால் அவன் தன்னை விழுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்த அவளது வட்டக் கருவிழிகள் படபடக்கின்றன.

பிரயாண அலுப்பால் சிவந்திருந்த அவளது முகம் மேலும் இரத்தச் சிவப்பாகியது. அவளின் செவ்விதழ்கள் மெல்ல விரிகின்றன. அந்தப் பிளவின் கடைக்கோடியில் ஒரு மலர்ச்சி தோன்றி அதே வேகத்தில் மறைகிறது.

பக்தியைத் தரும் எளிமை மிகுந்த அந்த அழகின் மலர்ச்சியில் நழுவிக் கொண்டிருந்த தன் மனதைக் கட்டுப்படுத்த இயலாமல் அவன் தவிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்விடும் அவளின் பார்வையின் அடித்தளத்தில் நிரந்தரமான ஒரு சோகம் மெல்ல, மெல்ல தலைகாட்டுகிறது. அவனிடம் பேசும் போது அவள் தன்னை மறந்து, அவனிடம் கரைந்து போகிறாள். அந்த நிலையில் அவள் சிரிக்கும் போது, அந்தச் சோக சுவடு இருந்த இடம் தெரியாமலே மறைந்து போகிறது. பச்சிளங் குழந்தையின் களங்கமற்ற சிரிப்பு அல்லவா அது.

அவள் அவனது அன்புக் கடலில் மூழ்கி திக்குமுக்காடிப் போகிறாள். ஆனால், அவனது தூய அன்பை முற்றாக ஏற்றுக் கொள்ள அவள் உள்ளம் ஏனோ தயங்குகிறது.

அவள் ஒதுங்கிக் கொள்கிறாள். அவளது உள்ளத்தில் ஏதோவொன்று உறுத்திக் கொண்டே இருக்கிறது.

இரண்டு நாட்களுக்குள் அவர்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு விட்டனர். இதயங்கள் இரண்டும் சங்கமித்துக் விட்டன. அவள், அவனாகிவிட்ட அன்பின் உச்ச நிலை. பிரிக்க முடியாத ஒரே பிணைப்பு ஏற்பட்ட பிறகு தான் அந்தக் கசப்பான உண்மை வெளிப்பட வேண்டுமா?

மையிருட்டின் நிழல் சிறிது சிறிதாய்ப் பரவும் மாலை மயங்கும் நேரம். சிலு, சிலு வென தவழ்ந்து வரும் மலைத்தென்றல் உடலுக்கு இதம் தருகிறது. யன்னலின் ஊடாக அவன் பார்வையைத் திருப்புகிறான். எதிரே பள்ளத்தாக்கில் தெரியும் 'பட்டினம்' கரையிட்டதுபோல் காட்சியளிக்கிறது. நட்சத்திரங்களை உதிர்த்து, சிதறிவிட்டாற்போல் மின் விளக்குகள் கண் சிமிட்டுகின்றன. மலையகத்தின் அந்த இரவுக் கோலம் மனதில் ஒரு நிறைவைக் கூட்டுகின்றது.

ரம்மியமான அந்தக் காட்சியிலிருந்து, பார்வையை பெயர்த்து சற்று திருப்புகிறான். அவள், அந்த பட்டாம்பூச்சி ஜெயா நிலைப்படியில் சாய்ந்து நின்று, சேலைத் தலைப்பை நீவிக் கொண்டு இவனை விழுங்கிக் கொண்டிருக்கிறாள்.

ஒரு பெண் தன் வாழ்க்கையில் எதிர்பார்த்திருக்கும் அந்த நன்னாளும் இவள் வாழ்க்கையிலும் வரத்தான் செய்தது. மனித வாழ்வில் ஒரு நிறைவை ஏற்படுத்தும் மங்களகரமான நிகழ்ச்சியது. என்றாலும் அவளைப் பொருத்த வரையில் எதிர்பார்த்த அந்த நிறைவு கிட்டியதா? அவளின் வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணமாகியதா? அவளது இன்றைய வாழ்க்கை, மகிழ்ச்சி கரமாகவும் திருப்திகரமாகவும் இருக்கிறதா?

தாம்பத்ய வாழ்க்கையில் திருப்தியும் நிறைவும் உண்டு. வாழ்க்கை வாழ்வதற்கே என்பர். ஆனால் அவளைப் பொருத்த மட்டில் இந்த வார்த்தைகள் அர்த்தமுள்ளவைகளா?

இளம் நெஞ்சத்தில் துளிர்த்த அந்தப் பசுமையான எண்ணங்களும், நினைவுகளும் இன்று காய்ந்து, கருகித்தான் போய்விட்டன....

சாதாரண ஒரு பெண்ணின் இதய தாபங்களையல்ல - அவளே தானாகி விட்டவளின் உணர்வுகளை, மனிதாபி மானத்துடன் புரிந்து கொண்டதின் விளைவுதான் இன்று அவனது குழம்பிய மனநிலைக்கு காரணமாகி விட்டது.

"ஒரு பெண்ணின் சம்மதமின்றி அவளை ஒருவன் கடத்திச் செல்கிறான். தனது தூய்மை கெடாதவாறு தன்னை அவள் தற்காத்துக் கொள்கிறாள். அவள், தப்பித்து வீடு திரும்பியதும், 'ஆண்' எனும் ஓர் உருவத்திற்கு பதிவுத் திருமணம் செய்து விடுகின்றனர். அதைவிட அவளைக் கொன்று இருக்கலாமே?" இப்படித்தான் அவனுடைய உள்ளம் அங்கலாய்த்துக் கொள்கிறது.

அவள் கூறிய வார்த்தைகள் இன்னும் இதயத்திற்குள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நான் வீட்டில் இருப்பது தவறானதென எங்கள் வீட்டில் நெனச்சாங்க. எங்க குடும்பம் என்னால் மரியாதையாக இருக்க முடியாதோன்னு பயமாயிடுச்சி. அதனால் என்னய வெகு சீக்கிரத்திலேயே வீட்டை விட்டு கடத்தனுமின்னு நெனச்சி, "ஆந்த ஆளுக்கு" என்னை உடனடியாக பதிவுத் திருமணம் செஞ்சு வச்சிட்டாங்க."

"ஏற்கெனவே அவுங்க பெண் கேட்டு வந்தாங்க. நான் இசையவில்லை. வீட்டிலும் எதிர்ப்பு. அவரைத் தொட்டாலே ஒட்டிக் கொள்ளும் கருப்பு. அதைப் பத்திக் கவல இல்ல. மனமாவது அழகாக இருக்க வேண்டாமா? மனதுக்கு இதமாக நாலு வார்த்தை பேசக் கூடாதா? ஒவ்வொரு நாளும் குடியும் அடியும் தான். எல்லாத்திலேயும் எனக்கு ஏமாற்றந்தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்பு பெண் கொடுக்க மறுத்ததைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறார். மிகக் கேவலமாகப் பேசுகிறார்..."

அவளால் தொடர்ந்து பேச இயலவில்லை. குமுறி வந்த அழுகை நெஞ்சை அடைக்க, அவள் விம்முகிறாள்.

"நான்தான் கெட்டழிஞ்சவள் என்று தெரியுமுள்ள? பிறகு என்னைக் கட்டிக் கொள்வதாக ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்?" நீண்ட பெருமூச்சுடன் அவள் சேலைத் தலைப்பினால் கண்களை ஒற்றிக் கொள்கிறாள்.

"ஏனத்தான் மவுனம் சாதிக்கிறீர்கள்? ஏதாவது சொல்லுங் களேன். நீங்கள் என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற எண்ணத்திலாவது என் மன வேதனை சற்று குறைந்திருக்கும். நான் சொல்லுவதில் தவறு இருந்தால் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்."

"உன் மீது தவறு இல்லை ஜெயா. நான் தான் தவறு செய்தவன். உன் வெறுமையான கழுத்தைப் பார்த்து, நீ இன்னும் கன்னிதான் என்று நினைத்து உன்னைக் காதலித்தது என் தவறு. என்னென்னவோ ஆசைக் கனவுகளை நீ வளர்த்துக் கொள்ளச் செய்து விட்டேன். என் நிலையும் அதுவேதான். நீ மணமானவள் என்பதை அறிந்ததும் அந்த ஆசைக் கனவுகள் அர்த்தமற்றுப் போயின. எல்லாமே வெறுமையாய், சூனியமாய்...!"

அவள் விழிகளில் இருந்து பொல பொலவென கண்ணீர் கொட்டியதைப் பார்த்துவிட்ட அவன் நிறுத்திக் கொண்டான். எதை மூடி மறைக்க வேண்டுமோ, அதை உணர்ச்சிக் கொந்தளிப்பில் வெளிப்படுத்தி விட்டான். தனது பலவீனத்தை நொந்து கொள்கிறான். அவள் கண்ணீர் உகுப்பதை அவனால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

"அழாதே, ஜெயா! அழாதே!"

பூப்போன்ற மென்மையான அவளின் இதயத்தால் அவளது மன அவசத்தைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. எங்கு கவனமாக இருக்க வேண்டுமோ அங்கு கவனத்தை விட்டுவிட்டான். அவளது உள்ளத்தை எப்படியாவது மாற்றித் தானாக வேண்டும். அது சாத்தியமாவதென்றால் அவன் மனச்சாட்சிக்கு விரோதமாக ஏதாவது சொல்ல வேண்டும். அதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜெயா, நீ இப்படியானவள் என்று எனக்கு முன்னர் தெரிந்திருந்தால் உன்னோடு பேசியே இருக்க மாட்டேன். கிடைத்ததை கொண்டு திருப்தி பட வேண்டியது தான் உயர்ந்தது. உன்னிடம் பேசவே நான் வெட்கப்படுகிறேன். உன்னை நான் வெறுக்கிறேன்!"

இப்படி இன்னும் என்னென்னமோ எல்லாம் சொல்ல நினைத்தான். ஆனால் முடியவில்லை. திடீரென புறப்பட்ட சொல்லம்புகளின் தாக்கத்தால் அவள் நிலை குலைந்து போனாள். தீக்குழம்புகளாய் கொட்டப்பட்ட வார்த்தைகளால் அவள் துடிதுடித்துப் போனாள். அவளது செக்கச் சிவந்த முகம் கறுத்துச் சிறுத்துப் போகிறது. அவளது விழிகளிலிருந்து புறப்பட்ட கேள்விக் கணைகள் அவனது இதயத்தை கொக்கியிட்டு இழுக்கின்றன.

அவள் கீழுதட்டை மடித்துக் கடித்துக் கொள்கிறாள். எதையோ வாய்க்குள் அடக்கிக் கொள்வதைப் போல.

"என்ன அத்தான் இவ்வளவு நேரம் ஒரு மாதிரி பேசிக் கொண்டிருந்துவிட்டு, திடீரென்று கோபாவேசம் கொள்கிறீர்களே? அவர் மீது எனக்கு அன்பு உண்டு. ஆனால் கணவனிடம் செலுத்த வேண்டிய அன்பு போன்றதல்ல. உங்களிடம் நெருங்கிப் பேசவதைப் போல அவரிடம் நெருங்க ஏனோ என் உள்ளம் தயங்குகிறது! ஆரம்பத்தில் அம்முயற்சியால் மனமுடைந்து வேதனைப்பட்டதுதான் பலன். காலங்காலமாக பசையற்ற அன்பைச் செலுத்தி ஒரு போலித்தனமான வாழ்க்கையை வாழத்தான் வேண்டுமா?"

"பெண் என்பவள் கிடைத்ததைக் கொண்டு திருப்திபட வேண்டியவள். அந்தப் பெருமைமிக்க பண்பில் துளி கூட உன்னிடத்தில் கிடையாது ஜெயா."

அவனது வார்த்தைகள் சற்று சூடாய் வெளி வருகின்றன. அதிர்ந்து போய் நிலை குலைந்து போன அவள், தன்னைச் சுதாரித்துக் கொள்வதற்காக சற்று நேரம் அவகாசம் கொடுத்து விட்டு மீண்டும் தொடர்ந்தான்...

"நான் சொல்கிறேன் என்று என்மேல் கோபப்படுவதிலோ, மனம் வருந்துவதிலோ அர்த்தமில்லை, ஜெயா! நாம் வாழும் சமுதாயம் எதை விரும்புகிறதோ அதற்கேற்ப நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதுதான் புத்திசாலித்தனமானது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது ஒவ்வொரு வார்த்தைகளும் அவளது இதயத்தைச் சுட்டுப் பொசுக்குகின்றன. இவ்வளவு பெரிய ஏமாற்றம் தனக்குக் கிடைக்குமென அவள் எதிர்பார்க்கவே இல்லையே!

"அத்தான், நீங்கள் நன்கு படித்தவர்கள். உங்களைப் போல உணர்ச்சிகளை மதிக்காமல் பேச என்னால் முடியாது. நான் ஒரு பெண். உங்களிடம் மனம் திறந்து பேசியதுபோல் இதுவரை யாரிடமும் பேசி இருந்ததில்லை. நான் வாழ்வின் விளிம்பிலே தான் இப்போது நிற்பதாக உணர்கின்றேன்."

"நீங்கள் என்ன நினைத்தாலுஞ் சரி; என்ன செய்தாலுஞ் சரி. என் உள்ளம் சொல்லும் உண்மையை உங்களிடம் கூறிவிடத் தான் போகிறேன். ஓராயிரம் ஆண்டுகள் அவரது மனைவி என்ற பெயரில் நடைப்பிணமாய் வாழ்வதைவிட உங்களின் மனைவி என்று ஒருநாள் இல்லை, ஒரு மணிநேரம் வாழ்ந்தாலும் எனக்கு அது போதும்..."

உணர்ச்சிக் கொந்தளிப்பில் உருகி கரைந்து போனவள் நிலைப்படியில் சாய்ந்து நின்றவளாய் தனது தளிர் கரங்களைப் பிசைந்து கொண்டிருக்கிறாள். சிவந்தே காணப்படும் அவள் கைகள் மேலும் இரத்தச் சிவப்பாகின்றன. உடல் நடுங்கிக் கொண்டிருக்கிறது. அவளது விழிகளிலே கண்ணீர் கரைகட்டி நிற்கிறது. முகத்தில் துளிர்த்த வியர்வைத் துளிகள் முத்துக்களாய் ஒளிர்கின்றன. உணர்ச்சிகளின் கொந்தளிப்பினால் அவள் உடல் நடுங்குகிறது.

அவனது பதில் எப்படி இருக்கும்? வெறுப்பை உமிழும் வார்த்தைகள் வெடித்துச் சிதறப் போகின்றனவா? அல்லது ஆறுதலான வார்த்தைகளை அவன் உதிர்க்கப் போகின்றனா? நான் அவரிடம் கூறிய வார்த்தைகளை வேறு யாராவது கேட்டிருந்தால்...! "அவரது" செவிகளில் இந்த வார்த்தைகள் விழுந்திருந்தால்! அதன் விளைவு எப்படி இருக்கும்? என்னென்னவோ எண்ணிய அவள் உள்ளம் நிலை கொள்ளவில்லை.

அவன் வாய் திறந்து ஒரு வார்த்தை கூறியிருந்தால் போதும். நிச்சயமாக அவை அவளது தவிப்பைப் போக்கியிருக்கும். ஆனால் அவன் தான் வாயைத் திறவா மௌனியாகி விட்டானே! ஒரு வார்த்தை தானும் வெளி வராதா என்ற ஏக்கத்தில் அவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறாள். அவன் விழிகள் அவளையே இமைக்காது நோக்கிக் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உள்ளத்திற்குள் ஒரு புயல். அவள் தனது நிலைப்பாட்டினைச் சொல்லக் கேட்கிறபோது அவனுக்கு அவள் மீது பரிவும் பச்சாதாபமும் ஏற்படுகிறது. அவள் மீது அவன் கொண்டிருந்த அந்தத் தூய்மையான காதல், இரக்கம் என்ற உணர்ச்சியாய்க் கொப்பளிக்கிறது. அந்த இரக்கம் மீண்டும் ஒரு வலிமையான காதலாகவே மலர்கிறது. அவனது உள்ளத்திலேற்பட்ட தெளிவில் ஓர் அசட்டுத் துணிவும் பிறக்கிறது.

எப்படியும் அவள் உள்ளத்தில் நிம்மதி கிடைக்கத்தான் செய்ய வேண்டும். அந்த நிம்மதி அவளுக்கு மட்டுமல்ல அவனுக்கும் சேர்த்துத்தான். அவனது உள்ளத்தில் சுழித்தெழும் எண்ண எழுச்சிகளை உணர்ச்சி கொந்தளிப்புகளை வார்த்தை களாக்கிக் கூற முயற்சிக்கின்றான். அம் முயற்சியில் உதடுகள் மாத்திரம் வெறுமையாய் அசைகின்றன. வார்த்தைகள் ஒலி வடிவம் பெறாது கரைந்து போகின்றன.

அவன் தனது இரு கரங்களையும் அவளை நோக்கி நீட்டுகிறான். அவள் அவனது கரங்களுக்குள் அடைக்கலம் புகுகிறாள். அவன் அவளை இறுகத் தழுவுகிறான்.

அவனது அணைப்பின் இறுக்கத்தில் அந்தப் பறவை ஆனந்த சிறகடிக்கிறது...!

உள்ளே நுழைந்த ஜெயாவின் கணவன் வந்த வழியே திரும்பி நடந்து செல்வது நிலவின் ஒளியில் நன்கு தெரிகிறது. அவர்களிருவரையும் மீண்டும் பார்த்துவிடக் கூடாது என்ற உறுதியுடன் போய்க் கொண்டிருக்கிறானோ, என்னவோ? அல்லது மீண்டும் ஒரு புயலை அவர்கள் இருவரும் எதிர்கொள்வார்களோ?

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. இவர்களும் திருடர்களே!

நகரின் நானாவித இரைச்சலிற்கும் இயக்கத்திற்கும் மத்தியில் ஒவ்வொரு கடையாக உற்று உற்றுப் பார்த்துக் கொண்டு வருகிறாள் முதுமையின் தலைவாயிலில் அடியெடுத்து வைத்த பெண்ணொருத்தி.

நான்கு முழ வெள்ளைத் துணியாக முன்பிருந்து, இப்போது பழுப்பு வண்ணத்தில் காணப்படும் துணியை நான்காக மடித்துத் தலையில் போட்டிருக்கிறாள். சவர்க்கார காவி படிந்து மங்கல் நிறமான அந்த கந்தல் துணி, நரை விழுந்த எண்ணெய் காணாத பரட்டைத் தலைமுடியை மறைத்துக் கொண்டிருக்கிறது.

'மணிபொட்னிக்' காரனிடம் வாங்கிய பாசிமணிகள் தொங்கிய கழுத்தில் கயிற்றைக் கழட்டி எத்தனை ஆண்டுகளோ? சிவப்பு நிற பூப்போட்ட சேலையாகத்தான் அது இருந்திருக்க வேண்டும். வண்ண சாயங்கள் கரைந்து வெளுத்துப்போன அச்சேலையில் ஆங்காங்கே பூக்களின் தடங்கள் திட்டு திட்டாய் காட்சியளிக்கின்றன. ரவிக்கை அணியாத காரணத்தால், அது செய்ய வேண்டிய கடமையை முந்தானை செய்து கொண்டிருக்கிறது.

தேயிலைச் செடிகளற்ற பொட்டல் வெளியில், சரிவுகளில் மழை வெள்ளத்தால் மண் அரிக்கப்பட்டு, வரி வரியாய் கோடுகள் தெரியுமே, அதுபோல அவளது கருத்த கன்னங்களிலும் நெற்றியிலும் சுருக்கங்கள் நெளிகின்றன.

குழிகளுக்குள் குடியிருக்கும் அச்சிறிய விழிகளில் வரட்சி விரவிக் கிடக்கின்றது. அதில் ஒரு தவிப்பும் இழையோடிக் கிடக்கிறது. அவளின் வரண்டுவிட்ட விழிகளிலும் ஒரு மலர்ச்சியின் புத்தொளி திடீரென படர்கிறது. அதற்கு காரணமான அந்த கட்டிடத்திற்கு முன் அவள் நிற்கிறாள். மீண்டும் ஒருமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, மேலே அண்ணாந்து பார்க்கிறாள். அவளது விழிகள் நிலைத்து நின்ற இடத்தில், ஆடம்பரமாய் ஒரு பெயர் பலகை மும்மொழிகளிலும் எழுதப்பட்டு, தொங்கிக் கொண்டிருக்கிறது. தான் தேடி வந்த இடம் இதுதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பக்கத்தில் வந்தவரை ஏதோ கேட்கிறாள். அவரும் ஆம் என்பதற்கு அடையாளமாக தலையை அசைத்துவிட்டு, தன்னோடு கூட வந்தவரிடம் ஏதோ கூறுகிறார். பாவம் என்ற தொனியில் அவரின் உதடுகள் அசைந்து நெளிவதாக நம்மை பிரமை கொள்ளச் செய்கின்றன.

அவள் மாடிப் படியேறி மேன் மாடியில் வந்து நிற்கிறாள். அங்கு ஒருவர் பெரிய நோட்டுப் புத்தகத்தில் வேக வேகமாக எழுதிக் கொண்டிருக்கிறார்.

மேசையில் பைல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எதிரே போடப்பட்டிருந்த வாங்கு (Bench)களில் ஆண்களும் பெண்களுமாக சிலர் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் எதைப் பற்றியோ காரசாரமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கின்றனர். அது ஒரு அலுவலகம். ஒரு சகாய நிதிக் கம்பனியின் கிளை அலுவலகம்.

தான் வந்திருப்பதை அங்கு ஒரு பெரிய லெட்ஜரில் எழுதிக் கொண்டிருந்த 'கிளாக்கையா'விற்கு தெரியப்படுத்துவதற்காகவும் அவரின் கவனத்தை தன் பக்கம் ஈர்ப்பதற்காகவும் 'அய்யா செலாங்க' என்கிறாள்.

அந்த அய்யா ஒரு தரம் நிமிர்ந்து பார்த்துவிட்டு, மேசையில் சிகரெட் தாங்கியில் (Ash tray) புகைந்து கொண்டிருந்த சிகரட்டை எடுத்து ஆழமாக உறிஞ்சி புகையை நெஞ்சிற்குள் நிறைத்துக் கொண்டு மீண்டும் தான் செய்து கொண்டிருந்த வேலையில் தன்னை வலுக்கட்டாயமாக புதைத்துக் கொள்கிறார்.

நேரம் நழுவிக் கொண்டிருக்கிறது.

மாலை மணி நாலரை என்பதை அய்யா பைல்களை யெல்லாம் எடுத்து அலமாரியில் வைத்துப் பூட்டுவதிலிருந்து தெரிகிறது.

நாலே முக்காலுக்குத்தான் அவளுக்கு கடைசி பஸ். அந்த பஸ்ஸைத் தவற விட்டுவிட்டால் பதின்மூன்றரை மைல்களுக்கும் அப்பால் உள்ள அவளது தோட்டத்திற்கு நடந்தே போய்விட முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அய்யா!"

"ம், என்ன?"

"ஏ மவளுக்கு கலியாணமாகி ஏழு மாசமாச்சுங்க. இன்னும் எங்களுக்கு 'சல்லி' குடுக்கலைங்க."

"ம். அப்படியா? ஒங்க ஏஜெண்டு யாரு?"

"புசுப்பராசுங்க."

"அவருகிட்ட கேட்டீங்களா? என்ன சொன்னாரு?"

"இங்க வந்து ஒங்ககிட்ட கேக்க சொன்னாரு."

"எங்கே ஒங்க ரசீது, பாலிஸி எல்லாம் கொடுங்க."

பைல்களையும் லெட்ஜரையும் புரட்டிப் பார்க்கிறார். இந்த நேரத்தில் வந்து பிராணனை வாங்குகிறாளே என்ற மனவெறுப்பு. அவரது வேகமான புரட்டல்களிலிருந்து தெரிகிறது.

லெட்ஜர் பதிவேட்டில் அவளது கணக்குப் பக்கத்தின் மேல் "CANCELLED" என்ற ஆங்கில வாசகம் முத்திரை பதிக்கப் பட்டிருக்கிறது.

"இது கேன்ஸல் கேசும்மா. இது ஒன்னுஞ் செய்ய ஏலாதே!"

"இல்லங்கையா. நாங்க மாசந்தவறாம சல்லி குடுத்துருக் கிரேனுங்க."

"பையில வேற ஏதேனும் ரசீது வச்சுருக்கியானு பாரு!"

அவள் தனது 'கொக்கணி' பையில் இருந்ததையெல்லாம் வெளியே எடுத்துப் போடுகிறாள். இரண்டு வதங்கிய வெற்றிலைகளும் சில கலிபாக்கு துண்டுகளும், சுண்ணாம்பு டப்பியும், மூன்றரை ரூபாய் காசுகளும் மட்டுமே இருந்தன. வேறு ரசீதுகள் ஏதும் இல்லை.

ரசீதுகளை அய்யா ஒப்பிட்டுப் பார்க்கிறார். அந்த ஏஜெண்ட் ஒருமாத சந்தாவை அலுவலகத்தில் செலுத்த வில்லை. அந்த அம்மா இரண்டு மாதம் சந்தாவை செலுத்த வில்லை. ஆக மூன்று மாதம் சந்தா செலுத்தாவிடில் அங்கத்துவம் ரத்து செய்யப்படும்.

"அம்மா நீங்க மூணு மாசமா சந்தா செலுத்தல. அதனால் ஒங்க கணக்கு கேன்சலாகிப் போச்சு. கம்பனி ரூல்ஸ் நாலாவது பிரிவின் படி இது கேன்சல் செய்யப்பட்டிருக்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேன்சல்னா நாங்க போட்டிருக்கிற முன்னூறு ரூவா சொச்சத்தையாவது தாங்கையா."

"இந்தாம்மா. நீ என்னா பேசுற? நீ போட்டிருக்கிற காசு திருப்பி குடுக்கிறதில்லை. அதெல்லாம் கேன்சலாகிப் போச்சு."

"என்னாங்கையா இது? சாப்பிட கூட இல்லாம வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி மாசா மாசம் ரெண்டு பேருக்கும் பத்து, பத்து ரூவாயா மூணு வருசம் கட்டியிருக்கேனுங்க. ஏலாத வயசுல ஔச்சு வயசுக்கு வந்த ரெண்டு பொன்னுகள காப்பாத்தனுங்க. ஆம்பள இல்லாத அனாத குடும்பங்கையா. ஏதோ கருணை செஞ்சு எங்க பணத்தை தரப் பாருங்கையா." அவள் கண்ணீர் மல்க கெஞ்சுகிறாள்.

"ச்சீ, ச்சீ. போ, போ! ஒங்க பணததை நா' திங்கல. போயி ஹெட் ஆபிஸில கேளு!"

தான் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்திற்கு போக விடாமல் இடையூறு செய்கிறாளே என்கிற ஆத்திரம் அய்யாவிற்கு.

கடைசி பஸ்சைத் தவற விட்டுவிட்டால் பிறகு தான் எப்படி ஊர் போய் சேருவது என்ற அச்சம் அந்த ஏழைத் தாய்க்கு.

நெஞ்சிலே ஏமாற்றமும் ஆற்றாமையும் துயரமுமாய் பொங்குகின்றன. அந்த துயரம் கனக்கும் நெஞ்சோடு மாடிப்படியில் தட்டுத் தடுமாறி இறங்கி தெருவிலே கால் வைக்கிறாள்.

அதே வேளை அவள் ஊருக்குப் போக வேண்டிய பஸ் வேகமாக நீண்ட ஹாரன் ஒலியுடன் இவளைக் கடந்து ஓடி மறைகிறது.

அவள் இடிந்து போய் தெருவிலே மலைத்து நிற்கிறாள். அந்த முதுமையின் பலவீனம் நிறைந்த நெஞ்சத்தால் தனக்கேற்படும் வேதனைகளைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. கண்ணீர் மட்டுமே அருவியாய்க் கொட்டுகிறது. 'வண்ணானிடம் வேட்டியை போட்டு விட்டு கொக்குவிடம் கேட்கிறோமோ' மனம் அரற்றுகிறது.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னால் ஒருநாள் அடுத்த வீட்டுப் பெண் லலிதாவிற்கு திருமணம்.

முகூர்த்தம் அப்போதுதான் முடிந்திருந்தது. திருமணப் பந்தலில் உறவினர்களும் நண்பர்களுமாக நிறைந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கலகலப்பிற்கு மத்தியில் ஒரு சிறுவனின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

"சகாய நிதிக் கம்பனிகாரங்க வந்துட்டாங்க!"

லலிதாவின் அண்ணன் பரபரக்கின்றான். கேசவனை அழைத்து சகாய நிதிக்காரங்களை அவர்கள் வந்த காரின் அருகிலேயே நிறுத்தி வைக்கும்படியும், தான் வரவேற்பு கொடுக்க வருவதாகவும் கூறுகிறான்.

பம்பரமாய் சுழன்று, பேண்டு வாத்தியங்களுடன் மலர் மாலைகளோடு அவர்கள் நிற்குமிடம் நோக்கிச் செல்கிறான். ஒஸ்டின் கேம்பிரிட்ஜ் காரைச் சுற்றி கலியாண வீட்டு விருந்தினர்களும் ஒரு எதிர்பார்ப்பு ஆர்வத்துடன் நின்று கொண்டிருக்கின்றனர். நிர்வாகி காரிலிருந்து இறங்குகிறார். அவருடன் புஷ்பராஜ் ஏஜெண்டும் வேறு சிலரும் இறங்குகின்றனர். எல்லோருக்கும் பன்னீர் தெளித்து, மாலைகளை அணிவித்து, சந்தன பொட்டிட்டு பேண்டு வாத்தியம் முழங்க அவர்களை அழைத்து வருகிறான். விருந்தினர் கூட்டமும் அவர்களைப் பின் தொடர்ந்தது.

"நிர்வாகி வாழ்க! சகாய நிதி கம்பனி வாழ்க!" வாழ்த்துக் கோஷத்தில் பேண்டு வாத்திய ஒலியே கரைந்து அமுங்கிப் போகிறது.

மணமக்களை வாழ்த்தி பரிசளிக்கும் நிகழ்ச்சி தொடங்கு கிறது. சகாய நிதிக் கம்பனி நிர்வாகியிடம் ஒலி வாங்கியை கொடுத்து வாழ்த்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. நிர்வாகியும் பேச ஆரம்பிக்கிறார். கம்பனியின் சட்ட திட்டங்களை யெல்லாம் எடுத்துக் கூறுகிறார். ஏழைகளே நிறைந்திருக்கும் இம் மலையகத்திற்கு சகாய நிதிக் கம்பனியின் அவசிய தேவையையும், அதன் இன்றியமையாத அவசியத்தையும் மிக அழகாக, ஆழமாகப் பதியும் வண்ணமும் கூறுகிறார், அந்த ஏழைப் பங்காளன். மலையக மக்களுக்கு கை கொடுத்து உதவ வந்திருக்கும் தெய்வமாக அவரை மனதில் உருவகப்படுத்திக் கொண்டு, மிகவும் மரியாதையுடன் அவர் பேசுவதை கவனமுடன் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர் தொடர்ந்து பேசியதாவது,

"…. அன்றாடம் பாடுபட்டு உழைக்கும் தோட்டத் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளம் இரண்டு ரூபா ஐம்பது சதம். வாழ்க்கைச் செலவுகள் அசுர வேகத்தில் உயர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் அந்த இரண்டரை ரூபாய் சம்பளம் எந்தச் செலவிற்கு ஈடு கொடுக்க முடியும்? ஒரு கலியாணம், ருதுசாந்தி, காதணி விழா, பள்ளிக்கூட செலவு போன்ற மங்களகரமான காரியங்களை, மகிழ்ச்சிகரமாய் நடத்த இந்த வருவாய் இடம் கொடுக்குமா? அவற்றைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்றால் பணத்தைப் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கும் வட்டிக் கடைக்காரனிடம் சென்று கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். பிறகு வாங்கிய முதலைவிட பல மடங்கு வட்டி கட்டி, மேலும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. இந்த துயரகரமான நிலையை எமது மக்களிடமிருந்து ஒழித்து அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தான் இந்த சகாய நிதியுதவிக் கம்பனியை ஆரம்பித்துள்ளோம். மாதா மாதம் ரூபா (5/=) ஐந்தோ அல்லது ரூபா பத்தோ சந்தாவாகச் செலுத்தி, எந்த நோக்கத்திற்காக சந்தா செலுத்துகிறோமோ, அந்த நோக்கம் இனிதே நிறைவேற பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்...

...அங்கத்தினர்களாகச் சேர்ந்து இருபது மாதங்கள் தொடர்ந்து சந்தா செலுத்தி வந்தால், நீங்கள் ரூபாய நானூற்றைம்பது ரூபாவை திருமணத்தின்போது பெறலாம். ருதுசாந்தி (பருவ நீராட்டு விழா), அல்லது காதணி விழாவோ செய்தால் சந்தா திட்டத்திற்கேற்ப ரூபா முன்னூறு அல்லது ரூபா அறுநூறு பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் செலுத்திய தொகையைவிட நீங்கள் மேலதிகமாகப் பெறும் தொகையை திரும்ப செலுத்த வேண்டியது இல்லை.

இதோ இந்த மணப்பெண் லலிதா எங்கள் கம்பனியில் சேர்ந்து பத்தொன்பது மாதங்களே ஆகின்றன. அவர் சந்தாவாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா தொன்னூற்றைந்து மட்டுமே. ஆனால் எங்கள் கம்பனி அவருக்கு கொடுப்பதோ ரூபா நானூற்றைம்பது...."

கரவொலிகளும், 'நிர்வாகி வாழ்க' கோஷங்களும் வானைப் பிளக்க, பணத்தையும் வாழ்த்து மடலையும் பெற்றுக் கொண்ட புதுமணத் தம்பதிகள், நிர்வாகியின் காலில் விழுந்து ஆசி பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த ஆட்டு மந்தை போக்கு என்று மாறும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினம் நூற்றுக்கணக்கான புது சந்தாதாரர்கள் ஏஜெண்ட் புஷ்பராசுவிற்கு கிடைத்தனர். புது சந்தாதாரர்களில் அந்த ஏழைத் தாயும் ஒருத்தி. தனது இரு புதல்விகளுக்கும் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு, கண்களில் ஒற்றி தனது 'கொக்கணி'க்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டதிலிருந்து அவளுள்ளம் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தது. அவளுள்ளத்தில் எத்துணையோ மனக்கோட்டைகள் உருவாகின. எத்துணையோ ஆசைகள் பொங்கி வழிந்தன. தனது மகள்களின் திருமணத்தின் போதும் அவர்கள் காரில் வந்து இறங்குவார்கள். இப்படி ஏகப்பட்ட கூட்டம் இருக்கும். பணம் கொடுத்துவிட்டு, வாழ்த்திவிட்டு போவார்கள். கல்யாண பந்தலுக்கு முன்னால் கார் வந்து நின்றாலே போதுமே! அதுவே எத்துணை பெருமைக்குரிய விஷயம்?

இந்த ஆசை உந்தித்தள்ள ஒவ்வொரு மாதமும் பத்து, பத்து ரூபாயாகச் சந்தா செலுத்தியிருக்கிறாள். சம்பளம் வாங்கியதும் முதலில் எடுத்து வைப்பது சகாய நிதி சந்தாதான்.

வெயில் எரித்துக் கருக்கும் கோடை காலத்தில் வாரத்திற்கு மூன்று நாட்கள்தான் வேலை கிடைக்கும். இப்படியான காலங்களிலெல்லாம் சந்தாவைச் செலுத்திய பிறகு, அந்த முதுமைத் தாயும் அவளின் இரு புதல்விகளும் எத்துணை நாட்கள் பட்டினியுடன் படுத்திருக்கின்றனர்.

அவற்றையெல்லாம் இப்போது நினைக்க நினைக்க அந்த தாயுள்ளம் பொருமுகிறது. மகளின் திருமணத்தன்று அவர்களை எதிர்பார்த்து, எதிர்பார்த்து எத்துணை ஏமாற்றத்திற்குள்ளானாள்? திருமணம் முடிந்து இன்றுடன் அய்ந்து மாதங்கள் உருண்டோடி விட்டன. இன்னும் சகாய நிதி பணம் கிடைத்தபாடில்லை. ஏஜெண்டு வீடு அடுத்த தோட்டத்திலிருக்கிறது. இரண்டு மூன்று தடவை நடையாய் நடந்தது தான் மிச்சம்.

கடைசியாகத்தான் இந்த கிளைக் காரியாலய அலுகலகத்திற்கு வந்திருக்கிறாள். இங்குள்ள அய்யாவோ இது கேன்சலாகிப் போச்சு என்கிறார். போட்ட பணமும் கிடைக்காது என்றும் சொல்லி விட்டாரே! அன்றைய தினம் பஸ்சையும் தவற விட்டுவிட்டு, அவள் ஊர் வந்து சேர பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க நினைக்க நெஞ்சம் வேகிறது. அந்த வேதனையின் அழுத்தமான தாக்கத்தால் நெஞ்சமே வெடித்து விடுமாப் போலிருக்கிறது.

பக்கத்து வீட்டு பையன் முருகேசுவும், அந்த முதுமைத் தாயும் அய்ம்பது மைல்களுக்கு அப்பால் இருக்கும் இந்த தலைமைக் காரியாலயத்திற்கு வந்திருக்கின்றனர். நீண்ட தொலைவிலிருக்கும் இக்காரியாலயத்திற்கு துணைக்கு முருகேசு தான் வந்திருக்கிறான். பிரயாணக் களைப்பும், பசிக்கிறக்கமும், முதுமையின் இயலாமையும் அவளைத் தள்ளாடச் செய்கின்றன. பஸ் பயணம் என்றால் அவள் சாப்பிட மாட்டாள். வாந்தி வந்துவிடும் என்ற பயம்.

"அதோ சுவரோரமாக தனியாக நாற்காலியில் உட்கார்ந்து இருக்கும் அய்யாதான் லலிதாவின் திருமணத்திற்கு வந்து காசு குடுத்தார். எத்துணை கிளாக்குமார்கள் வேலை பாக்குராங்க? டைப்பு அடிக்கிறதும் தந்தி பேசுறதும் (போன் பேசுதல்)... பெரிய கொம்பனிதான் போலருக்கு. இவுங்க ஏமாத்த மாட்டாங்க. நமக்கு இன்னைக்கி பணம் நிச்சயம் கெடச்சுடும்."

இவ்வளவு பெரிய கொம்பனியில் சேர்ந்திருப்பதே ஒரு பெருமைக்குரிய விஷயமாகப்பட்டது, அவளுக்கு.

அவள் உள்ளே நுழைந்து, அய்யாவைப் பார்த்து கும்பிட்டு வணக்கம் தெரிவிக்கிறாள்.

"வாங்க பெரியம்மா. என்ன விஷயம் எங்க இருந்து வாரீங்க?"

"வதுளையிலிருந்து வாரோங்கையா. ஏ' மவளுக்கு கலியாணம் ஆகி ஆறு மாசம் ஆச்சு. இன்னும் ஏஜெண்டு எங்களுக்கு பணம் குடுக்கலைங்கையா."

அந்த அய்யாவைப் பார்க்க, அவளுக்கு அவர் மிகவும் நல்லவராகத் தெரிகிறார். அதனால், நீங்கள் எங்களுக்கு பணம் தரவில்லையென்று சொல்ல அவளுக்குத் தயக்கமாக இருக்கிறது. ஆகவேதான் ஏஜெண்டு பணம் தரவில்லையென்று சொல்லுகிறாள்.

ஒரு கிளார்க்கை கூப்பிட்டு, ரசீதுகளையும் பாலிஸி பத்திரத்தையும் கொடுத்து சரி பார்க்கச் சொல்லுகிறார். அவரும் ஏதோ பெரிய பெரிய லெட்ஜர்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாத காலமாகச் சந்தா செலுத்தவில்லையென்று சொல்லி விட்டு, உதட்டைப் பிதுக்குகிறார். உண்மையில் இரண்டு மாத கால சந்தாவைத்தான் அந்த அம்மா செலுத்தவில்லை. ஒருமாத சந்தாவை ஏஜெண்ட் புஷ்பராசு அலுவலகத்தில் செலுத்த வில்லை. இதை கிளார்க்கு அய்யாவிடம் சொல்லவில்லை.

"ஏம்மா நீங்க மூணு மாசமா சந்தா செலுத்தல?"

"இல்லங்கையா ரெண்டு மாதமாத்தான் நான் பணம் கட்டல. ஸ்ட்ரைக்கு நடந்த ரெண்டு மாசந்தான் நான் பணம் கட்டல. மத்த மாசமெல்லாம் நான் தவறாம பணம் கட்டியிருக்கேனுங்க."

"இல்லையே மூணு மாசம் பணம் கட்டினதுக்கு எங்க ஆபிஸ் ரசீது இல்லையே. அதனால இப்ப ஒண்ணுஞ் செய்ய ஏலாது. ஒங்க அங்கத்துவம் கேன்சலாகிப் போச்சு."

"கேன்சலாகிப் போச்சுன்னு சொன்னா நீங்க வட்டி காசு ஒண்ணும் தராதீங்க. நாங்க மூணு வருசமா கட்டியிருக்கிற காச மட்டும் கொடுங்க, போதும்."

"வட்டிப் பணமும் இல்லே. குட்டிப் பணமும் இல்லே. நீங்க போட்ட காசும் தர முடியாது. அது ரத்தாகிப் போச்சு."

"அய்யா அப்புடியெல்லாம் சொல்லாதீங்க. ஆம்பள தொண இல்லாத தனிக் குடும்பங்கையா. நா' ஒருத்தி இந்த தள்ளாத வயசில ஔச்சி ரெண்டு பொண்ணுகள காப்பாத்துனுங்கையா. ஏதோ நீங்க மனசு வச்சு நாங்க போட்டிருக்கிற பணத்துல பாதியாச்சுங் குடுங்கையா." நாங்க போயிடரோம்."

அவள் கால்களில் விழாத குறையாக கெஞ்சுகிறாள். எத்துணையோ இன்னல்களுக்கிடையில் வியர்வை சிந்தி உழைத்த பணம். அட்டைக்கடி, அதிகாரக்கடி, சட்டக்கடி போன்ற எத்துணையோ கொடூர கடிகளுக்கு எல்லாம் ஆளாகி இரத்தம் உறையும் பனியிலும், விசிறியடிக்கும் பேய் மழையிலும், எரித்துக் கருக்கும் வெயிலிலும், சீறித் தள்ளும் காற்றிலும் தாக்கப்பட்டு, மாடாய் உழைத்து சம்பாதித்த பணம். வியர்வை சொட்ட சொட்ட உழைத்த பணம். வாயையையும் வயிற்றையும் கட்டி, மூன்று வருடங்களாக சந்தாவாகச் செலுத்திய பணத்தில் அரைப் பங்கையாவது கொடுங்கள் என்று மன்றாடுகிறாள். என்ன கொடுமையிது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானுழைத்து பெற்ற பணத்தை வேறு ஒருவரிடம் கொடுத்து விட்டு, அந்தப் பணத்தைப் பெற பிச்சைக்காரர்களைப் போன்று கெஞ்ச வேண்டிய துர்பாக்கிய நிலை.

"அரைவாசிப் பணமும் இல்லை. கால்வாசிப் பணமும். இல்லை. இடத்தை காலி செய்துவிட்டு போங்கள். எங்களுக்கு நிறைய வேறு வேலை இருக்கிறது."

"பார்வைக்கு மிகவும் கருணையுள்ள மனிதராகத் தோற்றந் தந்த இந்த அய்யாவா இப்படி பேசுறார்?" மனிதாபிமானமற்ற அவரின் வார்த்தைகள் அவளிதயத்தை பற்றி எரியச் செய்கின்றன.

"அய்யா எங்க தெய்வம் மாதிரி நீங்க. எனக்கு உதவிக்கு யாரும் இல்லங்கையா. அம்பது மைலுக்கு அங்கிட்டு இருந்து இங்க வந்துருக்கங்க. ஏதோ ஒங்க கையில இருக்கிறத குடுங்க. அதையாவது மனச் சந்தோஷத்துடன் வாங்கிக்கிட்டு போயிடரோம்..."

பஞ்ச பாண்டவர்களின் நினைவு வருகிறது. "எங்கள் ராஜ்யத்தைக் கொடு. இல்லையென்றால் ஐந்து ஊர்களையாவது கொடு. அதுவும் இல்லையென்றால் ஐந்து வீடுகளையாவது கொடு..."

இதிகாச காலத்திலிருந்து இன்று வரை தங்கள் உரிமையை கேட்கும் இவ்வாறான பரிதாப நிலை தொடரத்தான் செய்கிறது.

"இந்தாம்மா இங்கேயிருந்து ஒப்பாரி வைக்க வேணாம். ஒனக்கு முடிஞ்சா போய் பொலிஸ்ல சொல்லு, வழக்கு போடு."

விறுட்டென இருக்கையை விட்டு எழுந்த அய்யா வெளியில் நிறுத்தியிருந்த கேம்பிரிட்ஜ் காரில் ஏறி அமர்ந்து பட்டென கார் கதவைச் சாத்திக் கொள்கிறார். கார் தெரு முனையில் போய் மறைவதை பார்க்க இயலாதவாறு அவளது கண்களை கண்ணீர் திரையிட்டு மறைக்கிறது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மனித உருவில்...

'யாரது கதிர்வேலுவின் மகளா, அந்தப் புள்ள மாரி யார் இருப்பா?'

"ரோட்ல போகையில யார் வந்தாலும், எது வந்தாலும் நிமிர்ந்து பார்க்கிற பழக்கமே இல்லையே!"

"அது வுட்டு முடிய பாத்தீங்களா, அலை அலையா முழங்காலுக்கு கீழே தொங்குமே!"

"த் சோ. நல்ல மரியாதைக்கார பொண்ணு. சின்னப் பிள்ளைகளைக் கூட வாங்க போங்கன்னுதான் மரியாதையா பேசும்."

இப்படியான பலரது கருத்துகளுக்கும் கருப்பொருளான அவள் பெயர் புஷ்பராணி. இவையெல்லாம் மரணித்தவர்களை பெருமைபடுத்துவதற்காகச் சொல்லப்படும் வெற்று அனுதாப வார்த்தைகளல்ல. அவைகளெல்லாம் இன்று அல்லது நாளை மட்டுமல்ல நினைவு உள்ள காலம் வரை நின்று நிலைக்கும் சத்திய வார்த்தைகள். உண்மையான ஒலிச் சித்திரங்கள். அவளது வாழ்க்கை அப்படித்தானே அமைந்திருந்தது.

அவளைப் பற்றிய எண்ணங்கள், நினைவலைகள் நெஞ்சக் கடலில் துயர அலைகளாக மோதி மோதிக் கலைகின்றன. என் கண்கள் பனிக்கின்றன. நெஞ்சிலே குமைகிற துயரத்தைச் சிறிது சிறிதாய்க் கரைத்துக் கொண்டு வெளியேற்ற கண்ணீரால் முடியுமானால், அது கசிய வேண்டாம், அருவியாகவே சொரியட்டும்.

இத்துணைத் துயரத்தையும் பரிசாகத் தந்துவிட்டு ஒரு கனவைப்போல் கலைந்துபோன அவள், எனது தங்கையோ, காதலியோ, மனைவியோ அல்ல. தோழியுமல்ல. என்னைவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவளான அவளை நான் ஒரு சகோதரியாகவும் நினைக்க வில்லை. அவளது குழந்தைத்தனம் அவளை காதலியாகவும் ஏற்றுக்கொள்ள விடவில்லை. இவற்றில் ஏதோ ஒரு பாத்திரத்தை அவள் மீது சுமத்தி எனக்கு உரிமையாக்கிக் கொண்டால் உலகம் அதை ஏற்றுக்கொள்ளத்தான் செய்யும். எனது இலவச இராப்பள்ளி கூடத்தில் பாடம் படித்தவள். அவ்வளவே! வயசுக்கு வந்த பிறகு தொடர்ந்து எந்தப் பள்ளியிலும் கல்வி கற்கவில்லை. அவளது பண்பும், குழந்தைத்தனமான குறும்பு பேசுசுகளும் என்னில் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தாலும், என் உள்ளம் அவளை ஒரு உயர்ந்த உன்னதமான ஒரு இடத்திலமர்த்தியிருந்தது உண்மை தான். ஒரு வேளை என் உள்ளம் ஆண் பெண் உறவிற்கான அனைத்தையும் ஒருங்கிணைத்து அன்பு மழை பொழிந்ததோ? இந்த உறவுகளையெல்லாம் தவிர ஒரு பெண்ணை நேசிக்க வேறு உறவு இருக்குமானால்... ஆத்மார்த்தமான அன்பு என்பது இது தானான!

ஆனால் இன்று வரை நான் அவளிடம் மனம் விட்டு கதைக்கவில்லை. அவளருகில் நெருங்கி நின்றது கூட இல்லை. இவற்றிலெல்லாம் ஒரு சுய கட்டுப்பாட்டுடன் இருந்த என்னால், ஏனோ அவள் மீது அன்பு செலுத்துதலிலும் அப்படி இருக்க இயலவில்லை. அவளை அந்த அளவு ஆழமாக நேசித்திருக்கா விட்டால் இன்ற இத்தகைய துயரத்தில் புழுங்கித் தவிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்காது.

'வொலிபோல்' (Volley ball) விளையாடச் செல்லும் நான் அவள் வீட்டு வாசல் வழியாகத்தான் போக வேண்டியதா யிருக்கிறது. அவள் எனது வருகைக்காக காத்திருப்பாளோ அல்லது அந்த நேரத்தில் தான் அவளுக்கு தனது வாசலில் வளர்த்திருக்கும் 'பூப்பாத்தி'யில் வேலையிருக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒவ்வொரு நாளும் நான் செல்லும்போது, பூக்களுக்கு மத்தியில் ஒரு பூவாய் மலர்ந்திருப்பாள். போகும் போதும் வரும் போதும் ஒன்றிரண்டு வார்த்தைகளை உதிர்த்துவிட்டுச் செல்வேன், அவ்வளவுதான். அந்த சிற்சில வார்த்தைளில் ஏதாவது அர்த்தம் நிறைந்திருந்தாவென அப்போது நான் ஆராய்ந்து பார்த்ததில்லை.

எனது சாதாரண வார்த்தைகளில் ஏதாவது அர்த்தம் இருப்பதாக உணர்ந்து கொண்டால், அல்லது பிரமை கொண்டால் அதை செவி மடுப்பவர்கள் தப்பாக எண்ணி தன்னைத் தவறாகப் புரிந்து கொள்வார்ளோ என்ற மன அவஸ்தையில் அவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிப்பு.... அதற்கு பதிலளிக்க முயன்று - அதை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாத நிலையில் அவளது செவ்விதழ்கள் அசைந்து நிற்கையிலேற்படும் துடிப்பு... இன்றும் கூட மறையாமல் என் மன வெளியில் பசுமையாய்த் தெரிகின்றன.

அவள் ஏன் தான் பெண்ணாய் பிறந்தாளோ?

பெண்ணாய்ப் பிறந்தது இருக்கட்டும். அந்த ஒருத்திக்கா அவள் மகளாகப் பிறக்க வேண்டும்? இந்த ஒருத்தியும் ஒரு அம்மாவாக இருந்தாளே தேளின் கொடுக்கைப்போல. அம்மாவின் அற்புத குணாதிசயங்களுக்கு நேர்மாறாக ஆயிரத்தில் ஒருத்தி, அம்மாவாம் அம்மா!

அந்த அம்மாவிடம் அவள் படுகிற பாடு. அந்த அம்மா அவளைப் படுத்துகிற பாடு, அப்பப்பா! அவள் வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருக்கும் என் நண்பன் ஜெகன், அவளது அம்மா அவளைப் படுத்துகிற பாட்டைச் சொல்லும்போது என் உள்ளம் ஆத்திரத்தில் குமுறும். மனிதாபிமானமுள்ள - இதயமுள்ள அனைவரும் ஜெகனின் வார்த்தைகளை செவி மடுத்தால் நானடையும் கோப உணர்ச்சியை அவர்களும் அடைவார்கள் என்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியும். அவளது பரிதாப நிலைக்காக இதயம் ஓலமிடத்தான் செய்யும். பெற்று வளர்த்த தாயிடமே மாமியாரின் கொடுமைகளை அனுபவித்த அவளின் உள்ளம் மிகவும் பண்பட்டுத்தானிருந்தது. ஒருவேளை அவளனுபவித்த கொடுமைகள்தான் அவள் உள்ளத்தை புடம் போட்ட தங்கமாக்கியதோ? அவள் முகத்தில் அப்படியொரு பொலிவு.

வழக்கம் போலவே அன்றும் அதே வேளைதான் ஜெகன் வீட்டிற்குப் போகிறேன். நாங்கள் இருவரும் கைபந்து விளையாடப் போக வேண்டும். எப்போதும் போலவே பூப்பாத்திக்குள் நின்றிருந்த அவளது நிலைதான் என்னை திடுக்கிடச் செய்தது. அப்பொழுதுதான் மலர்ந்த பனிப்போர்த்த குளிர் ரோஜாவாக காட்சி தரும் அவள் வாடிய ரோஜாவாக வதங்கி துவண்டு போய் சோர்ந்து நின்றாள். கண்களில் ஒரு சோகம் படர்ந்திருந்தது. என் உள்ளம் ஒருமுறை குலுங்கி நின்றது.

"புஸ்ப்பா, என்னம்மா? ஏன் அப்படி இருக்கிற!"

இக்கேள்விக்கு அவளிடமிருந்து பதில் கிடைக்க வில்லை. என்னைக் கண்டதும் மலர் மலர்களாய் சிரிப்பை உதிர்க்கும் அவளின் முகத்தில் அழுகை பொங்கியெழுகிறது. எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்கு விடையளிப்பது போல அவளின் விழிகளிலிருந்து பொல பொலவென கண்ணீர்த் துளிகள் உதிர்கின்றன.

நான் பதறிப் போகிறேன். என் கண்களும் ஏனோ கலங்கி. என் இதயம் படபடவென துடிக்க ஆரம்பித்துவிட்டது.

"என்ன நடந்தது புஷ்ப்பா? ஏன் அழுகிற?" தொடர்ந்து நானே கேட்கிறேன்.

"உன்னை யாராவது திட்டினாங்களா?"

"ஆமா, அக்காவ அம்மா அடிச்சிடுச்சு" அவளது தங்கை மாலா பதில் சொல்கிறாள். சொல்லிக் கொண்டே அவளும் அழ ஆரம்பிக்கிறாள்.

அவர்களிருவரையும் நெஞ்சோடு சேர்த்தணைத்துக் கொண்டு, 'அடி அசடுகளே, அம்மா திட்டியதற்காகவா அழுகிறீர்கள்' என்று ஆறுதல் கூற என்னால் முடியுமா? (இது சினிமாவோ நாடகமாகவோ இருந்தால் இது சாத்தியம்) இது யதார்த்தமான வாழ்க்கை.

"இந்தா புஷ்ப்பா. பெரிய பொண்ணு நீ. இதுக்கெல்லாம் அழுவியா? ஒங்க அம்மாவ பத்தித்தான் எனக்கு நல்லாத் தெரியுமே! நம்ம தோட்டமே சொல்லி சிரிக்குதே! சீ சீச்சி... ஒரு அம்மாவா, மனுஷியா இருக்க...." நான் எனது வார்த்தைகளை முடிக்கவில்லை.

"ஆங். சும்மா இருங்க. போதும் போதும் நிறுத்துங்க." இன்னொரு தரம் எங்க அம்மாவ பத்தி அப்புடியெல்லாம் சொல்லாதீங்க. தோட்டமே சொல்லி சிரிக்குதாமே?"

வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாய் வார்த்தைகள் பாய்கின்றன. அவள் எப்படி சீறுகிறாள்?"

தன் அம்மாவை மற்றவர்கள் குறைத்து மதிப்பீடு செய்வதை அவளால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. நான் சொல்ல என்ன இருக்கிறது? அவள் பண்புமிக்க, தன் அம்மாவை நேசிக்கிற ஒரு மகள்.

காலச் சக்கரத்தின் அசுர வேகச் சுழற்சியில் ஒரு வாரம் விசிறி எறியப்பட்டு விட்டது. அன்றும் அவளிடம் சற்று கூடுதலான நேரம் கதைத்துக் கொண்டிருந்தேன். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்விற்கான (ஸ்டிரைக்) வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது தொடர்பில் சில விபரங்களைக் கூறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தேன். அப்பொழுது அவள் சம்பந்தமே இல்லாமல் அப்படியொரு வெடிகுண்டைத் தூக்கி என்மீது வீசினாள்.

"நாம எங்காச்சும் ஒடிப் போயிருவோமா?"

நான் அதிர்ச்சியில் உறைந்து, திகைத்து அசந்து போய் நிற்கிறேன். இன்று வரை நான் அவளைக் காதலிப்பதாகவோ, அல்லது அவள் என்னை நேசிப்பதாகவோ சொல்லிக் கொண்டதில்லை. பின் ஏன் அந்தக் கேள்வி எழுந்தது? இந்தக் கேள்விக்கான அடித்தளம் எது? இந்தக் கேள்வியை அவள் நிதானத்துடன்தான் கேட்கிறாளா? அறியாமை நிறைந்த ஒரு பெண் - குழந்தை மனம் கொண்ட குமரிதான் எனது கணிப்பில். ஆனால் இந்தக் கேள்வி...? என் ஆண்மைக்கு விடுக்கப்பட்ட அறைகூவலா? இல்லை என்னைச் சோதிக்கிறாளா?

இந்தச் சீர்கெட்டு செல்லரித்துப்போன சமுதாயக் கட்டமைப்பு பிறப்பால் சமத்துவமான மக்களை கூறு போட்டு வைத்திருக்கிறதே, சாதியின் பெயரால். அப்படிப் பிரிக்கப்பட்டவர் களில் உயர் சாதியினராக கணிக்கப்பட்ட பிரிவில் பிறந்தவள் அவள். வரட்டுக் கௌரவம் நிறைந்த அவர்களின் சாதிக் கட்டுப்பாட்டையும் மீறி எழுந்த இக் கேள்விக்கு வலிமை கொடுத்தது எது? சிறைக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற தவிப்பின் உந்துதலா?

இந்த நொடிவரை நான் நினைத்துக் கூடப் பார்க்காத ஒரு பிரச்சினையை என் முன்னால் வைக்கிறாள். அவளையே என் காலடியில் சமர்ப்பிக்கிறாள்.

"என்ன, நான் கேட்கிறேன்,' நீங்க அப்படியே மலைச்சுப்போய் நிக்குறீங்க?" மீண்டும் அவளே கேட்டுவிட்டு மெதுவாய் சிரித்துக் கொள்கிறாள்.

என் மனதிற்குள் குழப்பம் கும்மியடிக்கிறது. இந்த குழப்ப நிலையில் ஒரு தெளிவும் பிறக்கவில்லை.

"ம். எங்க போறது?" என் குரலில் உற்சாகம் வடிந்து போயிருக்கிறது.

"ஐய, ஆசையைப்பாரு. வெளையாட்டுக்கு கேட்டால் எங்க போறதாம்?"

எல்லாம் எனக்குத் தெரியும் என்ற எண்ணிக் கொண்டிருந்த என்னை, ஒரு நொடியில் உனக்கு எதுவுமே தெரியாது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மட்டியால் உச்சந் தலையில் அடித்ததுபோல் இருக்கிறது. எனது அவசர புத்தியால் விளைந்த ஏமாற்றம் அவளுக்கு முன் என்னைத் தலைகுனியச் செய்து விட்டது. இதற்குப் பிறகு அவள் முகத்தைப் பார்க்கவே சற்று கூச்சமாக இருக்கிறது. சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும் என்று நான் எண்ணியது எவ்வளவு முட்டாள்தனம்?

சில நொடிகளுக்குள் அவளுக்குள் ஏற்பட்ட மாற்றமென்ன? ஏன் தன் எண்ணத்தை அந்தச் சில நொடிகளுக்குள் மாற்றிக் கொண்டாள்? பானையில் இருப்பது அகப்பையில் வருவதுபோல, அவளது ஆழ்மன இருப்புதானே வார்த்தைகளாய் வெளிப் பட்டிருக்க வேண்டும்?

மீண்டும் எனக்குள் ஒரு குழப்பம். எப்படியோ என் மனதில் ஏற்படுத்தி விட்ட ஒரு தாழ்வு மனப்பான்மை, என்னை அவளைப் பார்க்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சில தினங்களாக வெளியில் விளையாடப் போவதில்லை.

ஒரு வார கால இடைவெளியின் கால ஓட்டத்தில் எனது ரோசமும், தாழ்வு மனப்பான்மையும் கரைந்து போய்விட்டது. இன்று விளையாடப் போக வேண்டும். எண்ணங்கள் உந்தி தள்ள வீட்டிற்குள் நுழைகிறேன். என்னைப் பார்த்து அம்மா கேட்கிறாள்.

"தம்பி நம்ம தோட்டத்து ஆளுகள வதுளையில பாத்தியாப்பா?"

"இல்லையேம்மா. என்ன விஷயம்?"

"அந்த கதிர்வேலோட பொண்ணு பாலிடாலோ என்னவோ குடிச்சிட்டாளாம்."

"யாரும்மா அந்த புஷ்பமா?" மனம் என்னவோ ஏதோவென்று பதறுகிறது.

அந்த நேரத்தில் கூட எனது பதற்றத்தை அம்மா அறிந்து கொள்வாளோ என்று அஞ்சுகிறேன். அவளுக்கு என்ன நடந்ததோ? ஏது நடந்ததோ தெரியவில்லை. அவளது உயிருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடக் கூடாதே என்று என் உள்ளம் தவிக்கிறது.

"ஆமாப்பா. நம்ம தோட்டத்து டாக்டரு லீவுல போய் மூணு மாசத்துக்கு மேலாகுது. அப்பவே வதுளைக்கு கொழுந்து லொரியில் போட்டு கொண்டு போயிட்டாங்க. இப்ப அந்தப் பொண்ணு எப்புடி இருக்குதோ? பாவம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கண் முன்னால் உலகமே சுழல்வது போலிருக்கிறது. அவளது உயிருக்கு விபரீதமான முடிவு ஏதும் ஏற்பட்டு விடக்கூடாது என்று முருகக் கடவுளை பலமுறை வேண்டிக் கொள்கிறேன்.

"ஏம்மா நஞ்சக் குடிச்சுச்சாம், அந்தப் புள்ள?"

அந்தப் புள்ளய அம்மாக்காரி சரியானபடி அடிச்சுப் போட்டாளாம். மானங்கெட்டதனமா ஏசினாளாம். அதால தாங்க முடியல. நஞ்சக் குடிச்சிச்சிருச்சாம்."

"அம்மா அந்தப் புள்ள செத்துப் போச்சாம்." பள்ளிக்கூடம் முடிந்து வந்த மீனா சொன்னாள்.

"என்ன செத்துப் போச்சா?" என்னையறியாமலே கேள்வி வெடித்துச் சிதறுகிறது.

"அய்யையோ." அம்மா நெஞ்சிலடித்துக் கொள்கிறாள். குமுறி எழுந்த துயரம் தொண்டையை அடைக்கிறது. அந்த உண்மை பொய்யாக இருக்கக் கூடாதா? என என் இதயம் ஏங்குகிறது. உள்ளம் ஊமையாய் அழுகிறது. என் விழிகளிலிருந்து வெளிப்பட்ட கண்ணீர் தரையில் விழுந்து சிதறுகின்றன. அம்மாவிற்கும் தங்கைக்கும் தெரியாமல் துடைத்துக் கொள்கிறேன். அம்மாவிற்கும் தங்கைக்கும் அது ஒரு செய்தி மட்டுமே. ஆனால் எனக்கு? என் உயிரையே பிடுங்கி எறிவது போன்ற உணர்வையல்லவா ஏற்படுத்துகிறது.

"புள்ளய இங்கு கெண்டு வந்தாச்சாம்மா?" என் பேச்சு ஒரு குளரலாக வெளிப்பட்டது.

"இல்லண்ணா. கூடப் போயிருந்தவங்கள்ள கொஞ்சம் பேர் வந்துட்டாங்களாம். அவுங்க சொன்னாங்களாம்."

"ஐயோ புஷ்பா. எங்காவது போயிடலாமான்னு கேட்டியே. இப்ப நீ மட்டும் ஏம்மா போன?" என நெஞ்சம் ஊமைக் குரலில் ஓலமிடுகிறது. நெஞ்சிற்குள் துக்கம் புழுங்கிக் குமைகிறது.

ஆயிரமாயிர எண்ணச் சுழிப்புகளையும் வாழ வேண்டும் என்ற ஆசையையும், வாழ்வின் இயற்கை வேட்கையையும் உதறி தள்ளிவிட்டு, தன்னையே அழித்துக்கொள்ள அவளால் எப்படித் தான் முடிந்ததோ?

அந்த ஒன்றைத்தான் அவளால் சகித்துக் கொள்ள இயலவில்லை. அதுதான் அவளை வாழ்வின் விளிம்பிற்கே ஓட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட விரட்டியதுமல்லாமல், காலக் கடலில் கரைந்து போகவு மல்லவா செய்து விட்டது.

அவளது தாய் அவளை நோக்கி வீசிய வசை மொழிகளை, என்னால் கூட நினைத்துப் பார்க்கக் கூட தயக்கமாய், அசூசையாய் இருக்கிறது. நிர்வாணமாய் வெளிப்பட்ட அசிங்கயமான அவ்வார்த்தைகள்தான் அவளை வாழ்வின் எல்லைக்கே துரத்தியடித்து, அவளது வாழ்வையே சூரையாடியவை.

எத்துணை ஏக்கங்கள்? எவ்வளவு ஆசைகள்? எத்துணை மனித உணர்ச்சிகள் அவளோடு சேர்ந்து மண்ணோடு மண்ணாகியதோ? பலவந்தமாய்த் துடித்து துடித்து பிரிந்த அந்த உயிருக்கு சாந்தி கிட்டுமா? சாந்தியோ, அமைதியோ அடையாமல் அலமந்து திரியும் அவளது உயிர், தனக்கு இயமனாய் வந்த தன் தாயையே பழிவாங்க வேண்டும் என்று பேயாய் அலையுமோ?

அவளை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டது. எனது அன்பை உதறித் தள்ளிவிட்டு அவளால் எப்படி போக முடிந்தது? ஆமாம் தந்தையை, சகோதரர்களை வெறுத்து தள்ளிய அவள் எனது மேம்போக்கான, பிடிப்பற்ற அன்பைத் தானா உதறித் தள்ள முடியாது?

அவளது பிள்ளை மலர் சிரிப்பின் ஜலதரங்க கீதம் இன்னும் என் செவிகளில் ரீங்காரிக்கின்றன. அவளது ஜீவகளை ததும்பும் முகம் என் நெஞ்சிற்குள் பசுமையாய் பதிந்து போய்விட்டது. அவள் என்னுடன் பேசும்போது, அவளது விழிகள் என்னையே விழுங்கி விடுவது போல் படபடப்பதை என்னால் எப்படி மறக்க முடியும்?

ம்ஹூம். என்னால் மறக்கவே முடியாது.

மறுநாள் காலைக் கதிரவன் உலகிற்கு ஒரு சோக கதையை கூறிக் கொண்டே எழுகிறான். அவளது முகத்தைப் பார்க்காமல் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. நிலை கொள்ளாது தவிக்கும் மனம், சஞ்சலத்தில் அலை பாய்கிறது.

வீட்டு வாசற்படியில் நின்று பார்த்தால் பத்தனாவத்தை பேருந்து 'கீனாக்கல' ரோட்டில் வருவது தெரியும். வேக வேகமாக நடந்தால் 'கந்தே கெதர' தபால் அலுவலகத்திற்கு முன்னால் பேருந்தை நிறுத்தி ஏறிவிடலாம். அல்லது செட்டிலயத்தை தாண்டி ஐம்பதேக்கர் குறுக்கில் ஏறி தோட்டப் பள்ளிக்கூட இறக்கத்தில் இறங்கினா, மாத்தன்னை தோட்டத்து கொழுந்து மடுவத்திற்கு அண்மையிலுள்ள பேருந்து நிறுத்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்தை பிடித்துவிடலாம். வேக வேகமாக நடக்கிறேன். தோட்டத்து பள்ளிக்கூட இறக்கத்தில் இறங்குகிறேன். 'ரொடீஸ்' பெண்கள், கவ்வாத்து வெட்டிப் போடப்பட்டிருந்த தேயிலைச் செடியின் சுள்ளிகளை பொறுக்கிக் கொண்டிருக்கின்றனர்.

"பதுள்ள பஸ் கியாத?" (பதுளை பஸ் போய்விட்டதா!) அவர்களைப் பார்த்து கேட்கிறேன்.

"நே! மாத்தியா!" (இல்லை ஐயா) ஒரு பெண் பதிலளிக்கிறாள். இன்னும் பேருந்து போகவில்லை. ஆசுவாசமாய் நடக்கிறேன். சற்று தொலைவில் "ரொடீஸ்' குடியிருப்பு வளைவில் சிவப்பு நிற பேருந்து வருவது நன்கு தெரிகிறது.

ஆஸ்பத்திரி நிறுத்தத்திலிறங்கி மார்ச்சுவரி (பிணவறை) பக்கமா நடக்கிறேன். பிணவறைக்குள் நுழைந்த எனக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் துயரமும் ஒருங்கே வருகின்றன. நஞ்சுக் குடித்து இறந்தவள், பரிசோதனை என்ற பெயரில் மண்டையோடு பிளக்கப் பட்டு, வயிற்றுப் பகுதி கிழிக்கப்பட்டு... அலங்கோலமாய் கிடக்கிறாள். 'ஐயோ இந்த உடல் புஷ்பாவினுடையதா?' பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின் இப்படித்தான் போட்டு வைப்பார்களா? என்னிதயம் வெடித்து சுக்கு நூறாகிவிடும் போல் இருக்கிறது.

"ஏன் இந்த நிலையில் பிரேதத்தை இங்கு வைத்துக் கொண்டிருக்க வேண்டும்?" பக்கத்தில் நின்றிருந்த புஷ்பாவின் உறவினர் ஒருவரை கேட்கிறேன்.

"பிரேத பரிசோதனை செஞ்சுட்டு டொக்டர் போய்ட்டாரு. மார்ச்சுவரியில இருக்கிறவங்க தான் 'தச்சு' குடுப்பாங்களாம். தைச்சு கொடுங்கன்னு கேட்டதுக்கு காசு கேக்கிறானுங்களாம். மாசக் கடசில காசுக்கு எங்க போறது? அந்த மனுசன் யாரு கிட்டயோ நகையை வாங்கி அடகு வச்சு காசு கொண்டாந்து இப்பத்தான் இருவத்தஞ்சு ரூபாவ டொக்டருகிட்ட குடுத்தாரு. நேத்தே காச கீச நீட்டியிருந்தா பிரேதத்தைக் கொண்டு போயிருக்கலாமாம்..." அவர் தொடர்ந்து இன்னும் என்ன என்ன சொன்னாரோ, அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க நான் தான் அங்கு இல்லை.

பணத்தைப் பெற்றுக் கொண்ட டாக்டரை தேடிப் போகிறேன். கிடைத்தாரா அவர்? அந்த ஏழைத் தொழிலாளியின் இருபத்தைந்து ரூபா, அவரை எந்த பாருக்குள் இழுத்துச் சென்றதோ? உடனுக்குடன் அரசு மருத்துவமனையில் உதவிகள் கிடைத்து விட்டால் பல உயிர்கள் அவலமாய் பிரிய நேரிட்டிருக்காதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண விசாரணை அதிகாரி வருகிறார். அவரிடம் உதவி கோருகிறேன். விசாரணையை சீக்கிரம் முடித்துவிட்டு, 'பர்மிட்' வழங்குமாறு வேண்டுகிறேன். விசாரணைக்கு சிங்களம் பேசத் தெரிந்த ஒரு ஆள் வேண்டுமென்கிறார்.

"நீங்கள்தான் தமிழ் நன்றாக பேசுகிறீர்களே. தமிழிலேயே விசாரணையை நடத்தி விடலாமே!"

"அது முடியாத காரியங். நாங் ஒரு தமில் தெரிஞ்ச புரோக்கர் கொண்டு வாரன். அவனிக்கி நீங்க ஒரு இருவத்தைஞ்சு ரூவா காசு குடுக்கனும்."

என் உடல் ஒருமுறை குலுங்கிச் சிலிர்த்தது. இரத்த நாளங்கள் புடைத்தெழுகின்றன. பொங்கும் ஆத்திரத்தை அடக்கிக் கொள்கிறேன்.

"எனக்கு சிங்களம் நன்றாக பேசத் தெரியும். நான் விசாரணைக்கு உதவுகிறேன்."

"ஆங். அப்ப சரி. வெசாரணை முடிஞ்ச பொறகி என்னை கொஞ்சம் கவனிச்சுக்கோ."

"சரி. சரி." என்றேன்.

விசாரணை நடைபெறுகிறது. அதன் முடிவில் சாட்சி ஒருவரும், 'பர்மிட்டில்' அலுவலக அதிகாரியொருவரும் கையெழுத்திட வேண்டும். மரண விசாரணை அதிகாரி என்னிடத்தில் சிங்களத்தில் சொல்லுகிறான்.

"இருபத்தைந்து ரூபா பணத்தைக் கேள். எனக்கு இருபது ரூபா கொடு. நீ அஞ்சு ரூபாயை வைத்துக்கொள். ம். கேள். கேள்."

நானும் சிங்களத்திலேயே பதில் சொல்லுகிறேன்.

"இவர் எனது சிற்றப்பா. நான் எப்படி இவரிடம் பணம் கேட்பது?

அவர் என்னை முறைத்துப் பார்க்கிறார். நான் அவரை ஏமாற்றி விட்டதான எண்ணம் அவருக்கு கோபத்தை ஏற்படுத்திவிட்டது. பர்மிட்டை எனது முகத்தில் எறிவது போல் வீசிவிட்டுச் சொல்கிறான்.

"அத்சன கெரனா அரங்பளயங்" (கையெழுத்து வாங்கிக் கொண்டு போ.)

வேகமாக நடக்கிறான். யாரிடம் கையெழுத்து வாங்குவது? அவன் பின்னாலேயே ஓடுகிறேன்.

"ஐயா யாரிடம் கையெழுத்து வாங்குவது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பளயங் ஓய். கிகின் காட்ட கரி அத்சன கெரகளா பளயங்." (போய் யாரிடமாவது கையெழுத்து பெற்றுக் கொண்டு போ!) அவன் போய்விட்டான்.

இந்த வேலையில் முன் பின் அனுபவமில்லாத நான் திகைத்து நிற்கிறேன். ஆஸ்பத்திரி கண்காணி ஒருவர் வருகிறார். என்னை சைகை செய்து கூப்பிடுகிறார்.

"ஒரு அஞ்சு ரூபா சல்லி கொடு. நான் சைன் பண்ணித் தாரன். நீ பிரேதத்தை கொண்டு போக ஏலும்," ரகசியமாகச் சொல்லுகிறான்.

இந்த லஞ்சப் பிசாசு நுழையாத இடம் எங்கேயாவது இருக்கிறதா? எப்படியும் பிரேதத்தை இன்று நாங்கள் கொண்டு போய்விட வேண்டும்.

அவன் பணத்தை பெற்றுக் கொண்டு கையொப்பமிட்டு கொடுக்கிறான். நான் வாங்கிக் கொண்டு பக்கத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற வேறு ஊழியர்களிடம்,

"இப்படியெல்லாம் இந்த ஆஸ்பத்திரியில் நடக்கிறதே. உயர் அதிகாரிகள் இதைக் கண்டிக்க மாட்டார்களா?" எனக் கேட்டபோது, எனக்கு கேட்காதவாறு, மற்றவர்களுக்கு புரியாத வகையில் ஏதோ சொல்லி குபீரென சிரிக்கின்றனர், அந்த மனிதாபிமானமுள்ள மனிதர்கள்.

வெட்கமும், வேதனையும், துயரமும் நிறைந்த என் நெஞ்சை அழுத்த திரும்பி நடக்கிறேன், அடகுக் கடையை நோக்கி.

பிரேதத்தை எடுத்துச் செல்வதற்கு 'சவப்பெட்டி' வாங்குவதற்கு என் விரலில் மாட்டியிருந்த மோதிரம் கை கொடுத்தது.

லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு, தைத்து வெள்ளைத் துணியால் மூடப்பட்ட புஷ்பாவின் உடலைப் பெட்டிக்குள் வைக்கிறார்கள். சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த உறவுக்கார பெண்கள் "ஓ,வென" கதறுகின்றனர். என் விழிகளிலிருந்தும் கண்ணீர் துளிகள் சிதறி விழுகின்றன, நெஞ்சில் நிறைந்துள்ள அவளோவியத்தை கரைத்து விடுவதைப் போல.

பின்னால் அவர்களின் கேலிச் சிரிப்பொலிகள் கேட்டுக் கொண்டிருந்தன.

'ட்ரங்கால் புக் பண்ணி கொழுந்துலொரியை அனுப்பச் சொல்லிவிட்டு, காத்துக் கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர்: **க. தங்கவேலு**
புனை பெயர்: **குறிஞ்சித்தங்கம்**
தந்தை பெயர்: **A.R. கருப்பையா**
தாய் பெயர்: **க.லெட்சுமியம்மாள்**
பிறந்த ஊர்: **கொள்ளுமண்டி தோட்டம்,**
சார்ணியா குருப்,
பதுளை அஞ்சல்.

தங்கவேலு எழுதியிருக்கும் இந்தக்கதைகள் வாழ்வுக் கதைகள். தூக்குப் பைக்குள் சேமித்து வைத்திருக்கும் தானியமணிகளை அவர் விரித்து வைக்கிறார். சுரைக்குடுக்கைக்குள் கிடக்கும் தீங்கனிகளை அவர் பகிர்கிறார். கதாநாயகர்கள் அவர் கதைகளில் வருவதில்லை. புதிதாக ஒரு வாழ்க்கையை சுமந்து செல்லப் போகும் ரயிலை இன்னும் சிறிது நேரத்தில் அனுப்பிவைக்கும் சாகச முடிவுகளை இவர் கதைகளில் காணமுடிவதில்லை. வறுமைத்துயரில் முற்றிலும் ஆழ்ந்த மக்கள் கூட்டத்தின் துயரம் நிரம்பிய வாழ்வை இவரது கதைகள் பேசுகின்றன.

- பேராசிரியர். **மு. நித்தியானந்தன்.**

கறிவேப்பிலைகள் நூலாசிரியர் இக்கதைகள் 1970களில் வந்திருக்க வேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டது அர்த்தமுள்ளது. ஒரு 50 ஆண்டுகளுக்குப் பிறகு காலம் என்ற தூசுக்குள் மறைந்துகிடந்த என்னை மீட்டெடுத்து இந்நூல் வெளி வர தூண்டுகோலாய் அமைந்தவர் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் திரு. எச். எச். விக்கிரமசிங்க என்றும் குறிப்பிடுகிறார். 50 ஆண்டுகளுக்கு முன் 1971 ல் 'கதைக் கனிகள்' வெளியீட்டிற்காக கார்மேகம் அவர்கள் நன்றி தெரிவித்த அதே விக்கிரமசிங்க தான் என்பது கவனத்திற்குரியது.

- **மலையக எழுத்தாளர் சங்கத் தலைவர்.**
**திரு. தெளிவத்தை ஜோசப்.**

மலையக மற்றும் தேசிய இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்கினைவழங்கியதில் அதன் படைப்பாளர்களுக்கு ஒரு பெரும் சிறப்புண்டு. அப்பங்களிப்பில் தங்கவேலு அவர்களுக்குத் தனிச்சிறப்பான ஓரிடம் உண்டு என்பதை இச்சிறுகதைத் தொகுப்பு பிரதிபலிக்கின்றது"

- பேராசிரியர் **சோ சந்திரசேகரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org